வெகு விரைவில்



தொடர்புகளுக்கு: 01 44 53 05 48
0610026729 Or 0687687333
சர்வதேச தொலைத் தொடர்புகளுக்கு என்றும்
Euro Calling Card

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு

Eelamurasu Weekly

முரசு: 5 02 – 08 செப்டெம்பர் 1999 முழக்கம்: 242

வெகு விரைவில்



தொடர்புகளுக்கு: 01 44 53 05 48
0610026729
Or
0687687333
சர்வதேச தொலைத் தொடர்புகளுக்கு என்றும்
Euro Calling Card

# தேசியத் தலைவரின் தீர்க்கதரிசனம் நனவாகி வருகிறது

## கிளிநொச்சி மாநாட்டில் சு.ப.தமிழ்ச்செல்வன்

(30.08.99)

'எமது தேசியத் தலைவரின் தீர்க்கதரிசனமான பார்வை நனவாகிக்கொண்டு வருகின்றது. எமது பாதுகாப்பை எமது மக்களே தீர்மானிக்வேண்டும் என்பது தேசியத் தலைவரின் நீண்ட நாள் கனவாக இருந்து வந்தது. இன்று சிறீலங்கா படைகளுக்கு எதிராக எமது மக்களே அணிவகுத்து நிற்கின்றார்கள். அவர்களது அபாரமான போரெழுச்சி, போராட்ட பங்களிப்பு போற்றப்பட வேண்டியது.' இவ்வாறு போரெழுச்சி பிரதேசக் குழுக்களின் பேராளர் மாநாட்டில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப்புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

பிரதேச போரெழுச்சி குழுக்களின் பேராளர் மாநாடு நேற்றுக் காலை 10.30 மணியளவில் கிளிநொச்சி கல்வி வலையத்தில் ஆரம்பமாகியது. இம் மாநாட்டில் மங்கல விளக்கினை தளபதி தங்கன் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக் கொடியை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன் அவர்கள் ஏற்றிவைத்தார். அங்கு கூடியிருந்த வன்னிப் பிராந்தியத்தின் போரெழுச்சிக் குழுக்களின் பேராளர் மத்தியில்

(☞ 2ம் பக்கம்)

# யாழ்.நகரில் மேலும் பல புதைகுழிகளை ராஜபக்ஸ அடையாளம் காட்டினார்

## பரபரப்புடன் தொடரும் புதைகுழி விவகாரம்

(30.08.99)

செம்மணி புதைகுழிகளை அடையாளம் காட்டுவதற்காக இன்று கிருஷாந்தி கொலைவழக்கின் மரண தண்டனை கைதியான கோப்ரல் சோமரட்ண ராஜபக்ச செம்மணிக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அப்போது அரியாலை முள்ளி என்னுமிடத்தில் படையினரால் கடும் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட இடங்கள், கொல்லப்பட்டவர்களின் வீடுகளையும் அடையாளம் காட்டியுள்ளார். அவர் காட்டியுள்ள ஒரு வீட்டில் இரண்டு பிள்ளைகளைக் கொண்ட குடும்பம் இருந்தாகவும், இரு பிள்ளைகளுக்கும், கணவனுக்கும் முன்னால் வைத்து மனைவி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு பின்னர் மண்வெட்டியால் அடித்துக்கொலை செய்யப்பட்டார். அதன் பின்னர் கணவரும் கொலை செய்யப்பட்டு அவர்களது உடல்கள் செம்மணியில் உள்ள கேணியடியில் புதைக்கப்பட்டது எனவும் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

10 அடி அகலமும் 15 அடி ஆழமும் கொண்ட இப்புதைகுழியில் 10 பேர் தொடக்கம் 15 பேர் வரையில் புதைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.'

அடுத்தாக, செம்மணி உப்பள பகுதியில் உள்ள புதைகுழியை

(☞ 2ம் பக்கம்)

# செம்மணி வழக்கில் கலந்துகொள்ள நான் தயார்

## – குமார் பொன்னம்பலம்

செம்மணி புதைகுழி தொடர்பான விசாரணைகளில் காணாமல் போனவர்களின் பெற்றோர் பாதுகாவலர் சங்கத்தின் சார்பில் தான் வாதிடுவதற்கு தயாராக உள்ளதாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் செயலாளர் குமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். இதேவேளை இவ் விசாரணைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் போது, இவ் விசாரணைகளுக்காகப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதிபெற்று யாழ்ப்பாணம் செல்வதற்குத் தான் தயாராக இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

அவர் இவ் விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், செம்மணி புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைகளில் தன்னை ஆஜராகுமாறு காணாமல் போனவர்களின் பெற்றோர் பாதுகாவலர் சங்கத்தினர் என்னை அழைத்துள்ளனர். அவர்களுக்கு உதவி செய்ய நான் தயாராக உள்ளேன். ஆனால் பாதுகாப்பமைச்சின் அனுமதி இல்லாமலே யாழ். செல்ல விரும்புகின்

(☞ 2ம் பக்கம்)

# மாவீரர் துயிலும் இல்லம் படையினரால் நாசம்

(30.08.99)

வவுனியா ஈச்சங்குளத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் 'மாவீரர் துயிலும் இல்லத்தில்' இருந்த நினைவுதூபிகளை சிறீலங்கா இராணுவத்தினர் அடித்துச் சேதப்படுத்தியதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஞாயிறன்று காலை சுமார் 10 மணியளவில் கால்நடையாக ரோந்து சென்ற படையினர் ஈச்சங்குளம் கிராமத்திற்குச் சென்று அங்கிருந்த கிராமவாசிகள் சிலரையும் கூட்டிச் சென்று மாவீரர் துயிலும் இல்லங்களை அடித்து நொருக்கியதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

சுமார் 50 பேர் கொண்ட இராணுவ அணியினரே இந்த நாசகாரச் செயலில் ஈடுபட்டதாகவும், இன்று திங்கட்கிழமை அதி

(☞ 2ம் பக்கம்)

# யாழில் 18 757 பெண்கள் போரினால் கணவனை இழந்தவர்கள்

யாழ். குடா நாட்டில் 18 757 பெண்கள் கணவர்மாரை போரினால் பறிகொடுத்துள்ளனர் என சமீபத்தில் அங்கு மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடொன்றில் தெரிவிக்கப்படுகின்றது. யாழ். நகரில் 1700 பெண்களும், கோப்பாயில் 2520 பெண்களும், பருத்தித்துறையில் 1702 பெண்களும், கணவர்களை பறிகொடுத்துள்ளனர். மேலும் 1796 உடுவிலிலும், 27 மருதங்கேணியிலும், 381 வேலணையிலும், 226 பலாலியிலும், 2709 சாவகச்சேரியிலும், 558 ஊர்காவற்துறையிலும், 2106 நல்லூரிலும், 1702 கரவெட்டியிலும், 1423 சண்டிலிப்பாயிலும், 1302 சங்கானையிலும், 505 தெல்லிப்பளையிலும் பதிவு பெற்றுள்ளன.

இப் பெண்களில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் 35 வயதிற்கு கீழ்பட்டவர்கள் எனவும் இப் பெண்கள் பிறரின் தயவிலேயே வாழ வேண்டிய நிலையில் உள்ளனர் எனவும் கணிப்பிடப்பட்டுள்ளது.

# கொழும்பில் கைது செய்தால் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்

## – விக்கிரமபாகு கருணாரட்ன

(29.08.99)

கொழும்பில் சிறீலங்கா பொலிசாரினாலும், இராணுவத்தினராலும் கைது செய்யப்படும் தமிழர்கள் பற்றி உறுவினர்கள் தம்முடன் தொடர்பு கொண்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என நவசமசமாயக்கட்சியின் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார். புதிய இடது சாரிகளின் கலந்துரையாடல் ஒன்று கடந்த திங்களன்று நவசமசமாயக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

(☞ 2ம் பக்கம்)

உங்கள் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்கிறது
Kumars Shop
S.A.R.L.
80, Bld. Barbes, 75018 Paris. M°: Marcadet Poissonniers
Tél: 01 42 59 35 10 / Fax: 01 42 59 35 00



Singapore
Exchange Co.
38, Rue Saint Quention
75010 Paris. M°: Gare du Nord
Tel: 01 48 74 48 21 / 01 44 53 96 87
Fax: 01 49 70 06 32

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Pèrdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE
27 BERNAY, FRANCE.

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை

நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்

ஆசிரியர்:
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris,
France

E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பாரிஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
Leama
Tel: 0208 2053650
Fax: 0208 2053651

டென்மார்க்:
T. சுரேஸ்காந்த்
Møller vcj - 23
5800 Nyborg, Denmark.
Tel: 65316155 - Fax: 65302588

சுவிஸ்: மக்கள் கடை
EELA MURASU
Postfach 238, 4313 Möhlin,
Swiss.
Natel: 079 635 02 16

லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145
ஹரி - Tel: 07887874177

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து:
த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
`EELAMURASU'
P.O Box S-109
Homebush South
N.S.W 2140
Australia
E-Mail:tccsydney@one.net.au

# சாமியாரைத் தேடி வேட்டை

கண்டியிலிருந்து உயர்மட்ட பொலிஸ் அணியொன்று சாமியார் ஒருவரைத் திருமலையில் கைது செய்துள்ளனர். இவ் சாமியார் அண்மையில் கண்டி பகுதிகளில் நடமாடினார் எனவும் பல்வேறு கோயில் பகுதிகளில் தங்கியிருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இவர் புலிகளின் உளவாளி எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## செம்மணி...

றேன். எனது வீட்டிற்கு செல்வதற்கு ஏன் நான் யாரிடமும் அனுமதி பெறவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குமார் பொன்னம்பலத்தை யாழ்ப்பாணம் வந்து செம்மணி புதைகுழி வழக்கில் விசாரணை நடத்துவதற்கான பயண ஏற்பாடுகளை செய்து தர வேண்டும் என்று யாழ். காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம் கொழும்பிலுள்ள சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திற்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## கொழும்பில்...

இது தொடர்பாக தம்முடன் 430 621 என்ற தொலைபேசி இலக்கம் மூலமாகவோ, அல்லது 143 கீழ் 3, மூன்றாவது மாடி, கியூ வீதி கொழும்பு 02 என்ற முகவரியுடனோ தொடர்பு கொள்ளலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## தேசியத் தலைவரின்...

உரையாற்றும்போதே சு.ப. தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இம் மாநாட்டில் உரையாற்றிய அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன், 'எமது மக்கள் படையணி அபாரா வளர்ச்சியை பெற்றுள்ளது. தேசியத் தலைவரின் நீண்டநாள் திட்டம் இன்று செயல்வடிவம் பெற்று வருகின்றது. எமது போரணிகளின் துணையாக இந்த மக்கள் படையணி செயலாற்றும். சிங்கள இராணுவத்தின் அடக்குமுறைகளில் இருந்தும் ஆக்கிரமிப்பில் இருந்தும் எமது பிரதேசங்கள் விரைவாகவே மீட்டெடுக்கப்படும்' என தனது உரையில் தெரிவித்தர். இம் மாநாட்டில் விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதிகளும், அரசியல்துறை முக்கியஸ்தர்களும், அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, முல்லைத்தீவில் தமிழீழ எல்லைக்காவல் படைப்பிரிவின் விளையாட்டுப் போட்டிகள் நேற்று நடைபெற்றன. இதில் பெருமளவிலான மக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# தென்னாபிரிக்காவுக்கு ராஜகுரு

(30.09.99)

தென்னாபிரிக்காவுக்கான பிரதித் தூதுவராக முன்னாள் பொலிஸ் மா அதிபர் ராஜகுரு நியமிக்கப்பட்டுள்ளார்.

சந்திரிகா அரசின் தீவிர ஆதரவாளர் எனக் கருதப்படும் இவர் மீது ஏராளமான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளது. சிறீலங்கா உச்ச நீதிமன்றம் இவர் மீது பகிரங்கமான குற்றச்சாட்டை சுமத்தியுள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## மாவீரர்...

காலை வரையிலும் அப்பகுதியில் இவ் இராணுவ அணியினர் நிலைகொண்டிருந்ததாகவும் அக் கிராமவாசிகள் தெரிவிக்கின்றனர். ரணகோச முதலாம் கட்ட இராணுவ நடவடிக்கையின் போது, இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட ஈச்சங்குளம் பிரதேசத்தில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் இதுவரை துயிலும் இல்லப்பகுதிக்கு எந்த விதமான சேதங்களையும் விளைவிக்கவில்லை என்றும் சொல்லப்படுகிறது. ஆயினும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த இராணுவத்தினரே இந்தச் செயலை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## யாழ்.நகரில்...

அடையாளம் காட்டியபோது, விடுதலைப் புலிகளின் காப்பரண் அமைந்திருந்த பகுதியில் அச்சுவேலி, கைதடி ஆகிய பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்ட 20 தொடக்கம் 25 பேர் வரையில் கொலைசெய்யப்பட்டு புதைக்கப்பட்டனர். இவர்கள் நிர்வாணமாகவும், உள்ளாடைகளுடனும் காணப்பட்டனர் எனவும் தெரிவித்தார்.

இச் சடலங்கள் புதைகுழியில் போட்டு மூடப்பட மண் போதாமலிருந்த காரணத்தால் வேறு இடங்களிலிருந்து மண் எடுத்துவரப்பட்டதாகவும், இப் புதைகுழிகள் தொடர்பாக அரியாலையைச் சேர்ந்த குணரட்ணம் என்பவருக்கும் தெரியும் என்றும், இவர் அக்காலப்பகுதியில் படையினரால் கைது செய்யப்படுபவர்களை விடுவிப்பது தொடர்பாகப் படையினருடன் தொடர்பு கொண்டிருந்தவர் என்றும் ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து செம்மணியில் புதைகுழிகளை அடையாளம் காட்டிய ராஜபக்ஸ, கோயில் குருக்களும் அவரின் உதவியாளரும் புதைக்கப்பட்டுள்ள இடத்தையும் அடையாளம் காட்டினார். தெருவடிப்பிள்ளையார் ஆலயத்தின் குருக்களும், உதவியாளரும் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது இடைமறித்த படையினர் அவர்களை அவ்விடத்திலேயே கொலை செய்து புதைத்தனர். அவர்களுடன் மோட்டார் சைக்கிளும் புதைக்கப்பட்டது. இந்த புதைகுழி யாழ். கண்டி வீதியில் உள்ள 'யாழ்ப்பாணம் உங்களை வரவேற்கின்றது' என்ற வாசகம் உள்ள வளைவு அமைந்துள்ள இடத்தில் உள்ளது.

அத்துடன் தெருவடிப்பிள்ளையார் கோவிலடியில் உள்ள பூவரசமரத்திற்கு அருகில் உள்ள தண்ணீர்த் தாங்கிக்கு அருகில் இருவர் புதைக்கப்பட்டுள்ளனர். கோயில் குருக்கள் புதைக்கப்பட்டிருந்த இடத்திற்கு முன்னால் இன்று விசாரணை நடத்துவதற்காக அமைக்கப்பட்டிருந்த கூடாரத்தின் கீழும் பல புதைகுழிகள் உள்ளதாகவும், கூடாரத்தை அகற்றினால் அவற்றை அடையாளம் காட்ட முடியும் எனவும் ராஜபக்ஸ மேலும் தெரிவித்தார்.

மேற்படி புதைகுழிகளை அடையாளம் காட்டிய ராஜபக்ஸ, மொத்தமாக இப் புதைகுழிகளில் 43 பேர் புதைக்கப்பட்டிருக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

இவ்வளவு இடங்களையும் அடையாளம் காட்டியதன் பின்னர் மாலை மூன்று மணியளவில் தனக்குக் களைப்பாக இருப்பதாகவும் மற்றைய இடங்களை நாளை நண்பகல் அடையாளம் காட்டுவதாகவும் தெரிவித்ததைத் தொடர்ந்து ராஜபக்ஸ மீண்டும் யாழ்.சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

பரதநாட்டிய அரங்கேற்ற அழைப்பிதழ்

ஜேர்மனி பவித்திர கலாலய
ஆசிரியை நாட்டியசாந்தி
செல்வி பவித்திரா
செல்வகாந்தன்
அவர்களிடம் பயின்ற
பரதநாட்டிய மதனை
எங்கள் செல்வி
பிரவீணா
பொன்னுத்துரை
அரங்கம் ஏறி தம்
கலைவாழ்வினுள்
கால்பதிக்கவுள்ளார்
இந்நாளில் அரங்கம்
நிறைத்து
வாழ்த்துக்களை
வழங்கிட சுற்றம் சூழ
வருகை தருமாறு
தங்களை அன்புடன்
அழைக்கின்றோம்.



இடம்: CHEATERSAAL
Rathenau Strasse 14,
30853 RANGENHAGEN.
காலம்: 05.09.1999 ஞாயிறு 16.00 மணி

இவ்வண்ணம்
பொன்னுத்துரை குடும்பத்தினர்
Kossel Hof 2
30627 Hannover, Germany.
தொலைபேசி: 0511-572908
இணையம்: http://WWW.Vijay.de

அம்பாள் வாகன சேவை
AMBAL TRANSPORT

பொருட்களை ஏற்றி இறக்கவும், மங்கள வைபவங்கள், ஸ்தல யாத்திரைகள், சுற்றுலாக்கள், ஐரோப்பிய நாடுகளுக்கான 9 இருக்கைகள் கொண்ட வாகனசேவைகளுக்கு



ஜெயம்:
26, Rue Perdonnet, 75010
Paris.
Mo: La Chapelle
Tel: 06 03 84 02 29 / 06 10 38 44 92 / 06 84 57 21 77

ERRANCES TRAVELS

Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,900 Frs. |
| Singapour | - | 3,980 Frs. |
| Madras | - | 4,300 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New yórk | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

Li: 075 95 01 37

(ADV)

## வடதமிழீழச் செய்திகள்

# செம்மணி புதைகுழி தோண்டுவது பிற்போடப்படும் நிலை

(29.08.99)


செம்மணியில் மாரிகால மழைவீழ்ச்சி ஆரம்பமாவதற்கு முன்னர் புதைகுழிகளைத் தோண்டுவது சாத்தியப்படாது எனவும், தோண்டும் நடவடிக்கைகள் பிற்போடப்படலாம் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த ஜூலை மாதம் 15ம் திகதி செம்மணிப் புதைகுழி தொடர்பான விசாரணை நடைபெற்ற போது அரச தரப்பில் ஆஜரான சட்டத்தரணி அடுத்த விசாரணையை காலம் தாழ்த்தி ஓகஸ்ட் 30ம் திகதி ஆரம்பித்து செப்டெம்பர் 6ல் இருந்து செம்மணிப் புதைகுழிகளைத் தோண்ட உத்தரவிடுமாறு கோரியிருந்தார். அதன்போது கொழும்பு வானிலை அவதான நிலையத்தின் அறிக்கை ஒன்றும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதன்படி மழைக் காலம் ஒக்டோபர் நடுப்பகுதியிலிருந்து நவம்பர் வரைக்குமான காலப்பகுதியில்தான் ஆரம்பிக்குமெனவும், கூடவே சி.ஐ.டி.விசாரணைகள் முடிவடைய கால அவகாசம் தேவை எனக்கோரியும் செம்மணியைத் தோண்டும் திகதியைப் பிற்போடுமாறும் கூறியிருந்தார். ஆனால் இதனைக்கடுமையாக ஆட்சேபித்த நீதிபதி மாஇளஞ்செழியன் மழைக்காலம் ஆரம்பித்து ஒரு நாள் மழை பொழிந்தாலும் செம்மணிப் பகுதியில் நீர் நிறைந்து விடும். இதனால் அது சதுப்பு நிலமாகிவிடும். அதற்குப் பின்னர் அதனைத் தோண்ட இயலாது எனவே இதனைத் துரிதப்படுத்துமாறும் கேட்டிருந்தார். எனினும் அரச தரப்பு சட்டத்தரணி வானிலை அவதான நிலைய அறிக்கையைச் சமர்ப்பித்ததன் காரணமாகவும், சி.ஐ.டி விசாரணகள் பூர்த்தியாகக் கால அவகாசம் தேவை எனக் கோரி வலியுறுத்தியதாலும் நீதிபதி அரச தரப்புச் சட்டத்தரணி கோரிய திகதியை அனுமதித்திருந்தார்.

ஆனால் தற்போது மழைக் காலம் ஆரம்பித்துவிட்டது. இதன் காரணமாக செம்மணிப்புதைகுழிகளைத் தோண்டுவது பிற்போடப்படலாம் என பலர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

## மாங்குளத்தில் இருந்து வவுனியாவிற்குச் செல்ல ஆறு மணி நேரம்

(29.08.99)

வன்னியில் கடந்த 9 திகதி புதிதாக பாதை திறக்கப்பட்டது. இப் புதிய மாங்குளம் பாதையூடாக வவுனியாவிற்கான பயணம் கடந்த திங்களில் இருந்து விடுதலைப் புலிகளால் அனுமதிக்கப்பட்டது. வன்னியில் இருந்து வவுனியாவிற்குச் செல்லும் பொதுமக்கள் சிறீலங்கா முன்னரங்க காவல் நிலைகளில் படையினரால் தீவிர சோதனையிடப்பட்டதன் பின்னரே தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். அத்துடன் பயணிகளைப் பிரதான வீதிவழியாகச் செல்ல அனுமதிக்காது உட்பாதைகளினூடாவே செல்ல அனுமதிக்கின்றனர். அப் பகுதிகளிலும் பல சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு சோதனைகள் நடாத்தப்பட்டு வருகின்றன.



காலை 11 மணிக்கு மாங்குளம் பாதையூடாக நுழையும் மக்கள் இராணுவச் சோதனைகளைத் தாண்டி வவுனியாவிற்கு மாலை ஐந்து மணியின் பின்னரே சென்றடைகின்றனர். இதன்போது பேயாடி கூழாங்குளத்தில் இருந்து அவர்கள் வவுனியாவிற்கு பேருந்து மூலம் அழைத்து செல்லப்படுகின்றனர். இதற்காக இவர்கள் ஒவ்வொருவரிடமும் இருந்து 50 ரூபா அறவிடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கிளாலியை நோக்கி எறிகணை தாக்குதல்

(28.08.99)

கிளாலிப் பகுதியை நோக்கி சிறீலங்காப் படையினர் எறிகணைத் தாக்குதல்களை நடாத்தியுள்ளனர். ஆனையிறவு, பரந்தன் நடவடிக்கையில் இருந்து துரத்தியடிக்கப்பட்ட படையினர் அச்செழு, பலாலி ஆட்லெறி நிலைகளிலிருந்து கடந்த புதன் இரவு 7.15 மணியளவில் கிளாலிக் கடற்கரைப் பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான எறிகணை வீச்சுக்களை நடாத்தினர். சுமார் 10 நிமிடங்களுக்கு மேலாக 15ற்கும் மேற்பட்ட எறிகணைகள் ஏவப்பட்டதாக யாழ். செய்திகள் தெரிவிக்கின்றன. கிளாலிப் பகுதியில் புலிகளின் நடமாட்டம் அதிகரித்திருப்பதை அடுத்தே இத் தாக்குதல் நடாத்தப்பட்டதாக படைத்தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. எனினும் உத்தியோகபூர்வமாக இத்தாக்குதல் பற்றிய விபரம் கிடைக்கப்பெறவில்லை.

## பலாலியை சுற்றியுள்ள வீடுகள் தகர்க்கப்படுகின்றன

(29.08.99)

சிறீலங்கா படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பலாலி முகாமினையும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் உள்ள வீடுகளைத் தகர்க்கும் நடவடிக்கையில் படையினர் துரிதமாக இறங்கியுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. பலாலிப் பகுதியை அதி உயர் பாதுகாப்பு வலையமாகப் பிரகடனப்படுத்தியுள்ள சிறீலங்கா படையினர் அதன் பாதுகாப்பிற்காகச் சுற்றுக் கிராமங்களில் உள்ள வீடுகளை நில மட்டத்திற்குத் தகர்த்து வருகின்றனர்.

பலாலியில் இருந்து யாழ். நகருக்கு செல்லும் பிரதான வீதியின் இரு பக்கங்களிலும் உள்ள வீடுகள் படையினரால் இடிக்கப்பட்டு அதன் கற்களும் வேறு பகுதிகளுக்கு அப்புறப்படுத்தப்பட்டு வருவதைத் தாம் கண்கூடாக காண்பதாகவும் வீடுகளை இடிப்பதற்கு புல்டோசர்களையும், கனரக வாகனங்களையும் பயன்படுத்துவதாகவும் அங்குள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். இதுவரை பலாலியைச் சுற்றியுள்ள கிராமங்களில் வசாவிளான் பகுதியில் மட்டும் 100ற்கும் மேற்பட்ட வீடுகள் முற்றாகத் தகர்த்து அழிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. விடுதலைப் புலிகள் பலாலித் தளத்தினுள் ஊடுருவி தாக்குதலை மேற்கொண்டு விடுவார்கள் என்பதனாலே விமானத் தளத்தினை சுற்றியுள்ள பல மைல் தூரத்தை வெட்டவெளிப் பிரதேசமாக மாற்றுவதுடன், பாவனையற்று கிடக்கும் வீடுகளில் புலிகள் மறைவாக வந்து தங்கியிருந்துவிட்டுத் தாக்குதலை மேற்கொண்டு விடுவார்கள் என்பதனாலேயே இவை இடிக்கப்படுகின்றன எனவும் தெரியவருகின்றது.

## மாணவியைக் காணவில்லை

(28.08.99)

யாழ்.குடாநாட்டில் இளம் பெண்கள் காணாமல் போவது தொடர்ந்து கொண்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த 20ம் திகதி டேவிட் வீதியில் வசித்துவந்த துசாந்தினி செல்வராஜா (14) என்ற மாணவி காணாமல் போயுள்ளார். குருநகர் பாடசாலை ஒன்றில் கல்வி கற்றுவந்த இம்மாணவி, கடந்த சனிக்கிழமை மாலை வீட்டிலிருந்து புறப்பட்ட பின்னர் வீடு திரும்பவில்லையென்று தெரிவிக்கப்படுகின்றது. இம் மாணவி காணாமல் போனது தொடர்பாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த சில காலமாக யாழில் பச்சை வாகனத்தில் வரும் சீருடை தரித்த இனந்தெரியாதவர்கள் இளம் பெண்களை கடத்திச் செல்வதும் பின் அவர்கள் காணாமல் போவதும் நடந்துவருவது தெரிந்ததே.

இதேவேளை, பருத்தித்துறை கற்கோவளத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் பொன்ராசா (50) என்பவர் கடந்த ஜூன் மாதம் 4ம் திகதி பருத்தித்துறை நகருக்கு சென்றவர், இதுவரை வீடுதிரும்பவில்லை என உறவினர்கள் யாழ். மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். கடந்த இரு மாதங்களுக்கு மேலாக பல இடங்களிலும் இவரைத் தேடியதாகவும், இதுவரை எதுவித தகவலும் கிடைக்கவில்லை எனவும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

## பரந்தனில் புலிகள் கைப்பற்றிய இராணுவச் சடலங்கள் ஒப்படைப்பு

(29.08.99)

ஆனையிறவு — பரந்தன் ஊடாக இரு முனைகளினூடு முன்னேற முனைந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்டு புலிகளால் கைப்பற்றப்பட்ட இரு இராணுவ உடலகள் சிறீலங்கா படையினரிடம் ஒப்படைக்கப்பட்டது. வன்னியில் வைத்து இரு உடல்களும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக இவை சிறீலங்கா படையினரிடம் கடந்த 23ம் திகதி கையளிக்கப்பட்டன. இத் தாக்குதலில் மூன்று படையினர் இறந்ததாக சிறீலங்கா படைத்தரப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

## சந்நிதிக்கு சென்ற இளம்பெண் மரணம்

(29.08.99)

யாழ். தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலைய உற்சவத்தில் கலந்துகொள்ள சென்ற இளம் பெண் ஒருவர் தான் பயணம் செய்த மோட்டார் சைக்கிளில் இருந்து தவறி விழுந்து பின்னால் வந்த மினி பஸ்சில் அகப்பட்டு மரணமடைந்துள்ளார். கடந்த செவ்வாயன்று காலை 9 மணியளவில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சாவகச்சேரி மீசாலை மேற்கைச் சேர்ந்த திருமகள் கனகசபை (18) என்ற இளம் பெண்ணே மரணமானவராவார்.


உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்

**தமிழ் அச்சகம்**

(மக்கள் கடை அருகில்)

இலண்டன், இந்தியா, இலங்கை, பிரான்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் 500-க்கு மேற்பட்ட திருமண அழைப்பிதழ் மாதிரிகள் உங்கள் தெரிவிற்காக உள்ளன.

அனைத்து அச்சு வேலைகளும் குறித்த தவணையில் மிகக் குறைந்த விலையில் சிறந்த தரத்துடன் செய்து கொடுக்கப்படும்.

திங்கள் முதல் - சனி வரை 09.00 – 22.00 மணி வரை

59, Rue Louis Blanc, 75010 Paris - Tel&Fax: 01 42 09 60 64 ou 06 13 12 35 42

அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு!
திருமண அழைப்பிதழ், பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள், பிறந்த தின விழா அழைப்பிதழ், முதன் நன்மை அழைப்பிதழ், கேக் பெட்டிகள் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம். அழைப்பிதழ் மாதிரித்தாள் தெரிவிற்காக இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

24 மணி நேரத்தில் உங்கள் அழைப்பிதழ்கள் அனைத்தும் Print செய்து கொடுக்கப்படும்



*Lune Informatique*

ஆதரவுடன்

அடுத்த வாரம் முதல்

**‘புதிர் முரசு’**

**வினாப்போட்டி ஆரம்பமாகிறது.**

ஆகக் கூடிய சரியான பதில்களை எழுதியனுப்புபவர்களில் ஒரு அதிர்ஷ்டசாலிக்கு Lune பெறுமதியான பரிசில்களை அனுப்பி வைக்கும்.

# தென்தமிழீழச் செய்திகள்

## உற்சவத்தின் போது ஆலயத்தில் நுழைந்து விக்கிரகங்களை மாசுபடுத்திய படையினர்

*(29.08.99)*

மட்டக்களப்பின் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற சித்தாண்டி முருகன் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 24ம் திகதி நடைபெற்ற போது அங்கு வந்த சிறீலங்கா படையினரும், அவர்களுடன் இணைந்து இயங்கும் ராசிக் குழுவினரும் உற்சவத்தை இடைநிறுத்தி ஆலயத்தினைச் சுற்றிவளைத்து பாரிய தேடுதலை நடாத்தினர். இதன்போது கோபுரத்தின் மீது ஏறி, கலசத்தையும் எடுத்து எறிந்ததுடன், ஆலயத்தின் மூலஸ்தானத்திற்குள்ளும் காலணிகளுடன் சென்று விக்கிரகங்களையும் மாசுபடுத்தியதாக ஆலய நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

இராணுவத்தினரதும், ராசிக் குழுவினரதும் இந் நடவடிக்கைகளால் மீண்டும் வர்லஸ்தானக் கிரிகைகள் செய்த பின்னரே திருவிழாவைத் தொடர்ந்து நடாத்த முடியும் என ஆலய நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர்.

இத் தேடுதல் நடவடிக்கையின்போது ஆலயத்தில் கூடியிருந்த பக்தர்களும் படையினராலும், ராசிக் குழுவினராலும் இம்சிக்கப்பட்டுள்ளனர். இராணுவத்தினருடன் கூடவந்த ராசிக் குழுவினரே ஆலைய நடைமுறைகளை அவமதிக்கும் வகையில் விக்கிரகங்களை காலால் உதைத்ததாகவும் அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் அன்று நடைபெற ஏற்பாடாகியிருந்த மயில்கட்டு திருவிழா நிறுத்தப்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இச் சோதனை நடவடிக்கியின் பின் ஏராளமானவர்கள் தீவிர விசாரணை செய்யப்பட்டதுடன் முகாமிற்கும் அழைத்துச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளனர். இதன்போது சந்திவெளியைச் சேர்ந்தவர்களான ஒரு பிள்ளையின் தந்தை சுந்தரலிங்கம் யோகானந்தன்(26), குடும்பஸ்தரான கந்தப்பொடி இளையதம்பி (22) ஆகியோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினரும் ராசிக் குழுவினரும் ஆலயத்தில் அத்துமீறி நடந்த சம்பவங்களுக்காக சந்திவெளி இராணுவமுகாம் பொறுப்பதிகாரி ஆலய நிர்வாகிகளிடம் மன்னிப்பு கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சிறீலங்கா படையினரினது அநாகரிகமான இந் நடவடிக்கைகள் தொடர்பாக இலண்டனிலுள்ள சிறீ கனகதுர்க்கை ஆம்மன் ஆலைய அறக்கட்டளை நிர்வாகிகள் தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களுக்கும், ம.தி.மு.க பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வைகோ அவர்களுக்கும் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## கிழக்கிற்கு செல்லும் உதயதேவி

*(30.08.99)*

கிழக்கு மாகாணத்திற்கான தொடருந்து சேவை எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமையில் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ளதாக சிறீலங்கா தொடருந்து திணைக்கள அதிகாரி தெரிவித்துள்ளார்.

கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்தில் இருந்து புறப்படும் உதயதேவி என்ற பெயருடைய தொடருந்து திருகோணமலைக்கும், பொலநறுவைக்கும் இணைப்புச் சேவையாக நடைபெறவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலை 6.15ற்கு கொழும்பு கோட்டையில் இருந்து புறப்பட்டு பிற்பகல் 2 மணிக்கு திருகோணமலையைச் சென்றடையுமாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், திரும்ப திருகோணமலையில் இருந்து மாலை 5 மணிக்கு புறப்பட்டு மறுநாள் காலை 4 மணிக்கு கொழும்பு கோட்டை நிலையத்தை வந்தடையும் எனவும் தொடருந்து திணைக்களம் அறிவித்துள்ளது.

## குண்டுவெடிப்பில் ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர்கள் பலி

*(28.08.99)*

மட்டக்களப்பு புதூர் திமிலைதீவு வீதியில் நடந்த குண்டுவெடிப்பொன்றில் இராணுவத்தினரின் துணைப்படையாக செயற்பட்ட இரு ஈ.பி.ஆர்.எல்.எவ். குழுவைச் சேர்ந்தவர்கள் கொல்லப்பட்டனர். அப் பகுதியில் உள்ள பாவனையற்ற வீடொன்றில் மதுபோதையில் படுத்திருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினரும் தற்போது சிறீலங்கா இராணுவ புலனாய்வுப் பிரிவுடன் இணைந்து செயற்பட்டு வந்தவருமாகிய சந்திரன்— காளி என அழைக்கப்படுபவரும், கனகரட்ணம் கமல்ராஜ் அவருடன் கூட இருந்த மரியதாஸ் சுமன்(21) ஆகியோரே கொல்லப்பட்டனர் என தெரிவிக்கப்படுகின்றது. கடந்த புதனன்று அதிகாலை 12.15 அளவில் இக் குண்டுவெடிப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவர்கள் மீது விடுதலைப் புலிகளே தாக்குதலை நடத்தியதாக இராணுவபுலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். எனினும் இவர்கள் வைத்திருந்த கைக்குண்டே இவர்கள் போதையில் இருந்தபோது தவறி வெடித்திருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இச் சம்பவம் தொடர்பாக இறந்த காளியின் நண்பரான நவரட்ணம் காண்டீபன் தனது சாட்சியில், செவ்வாய் இரவு தனது வீட்டிற்கு வந்த காளி, தன்னையும் குடிப்பதற்கு கூப்பிட்டதாகவும், தான் குடிப்பதற்கு நூறு ரூபா கொடுத்து அவர்களுடன் சேர்ந்திருந்து குடித்துவிட்டு வீட்டிற்கு வந்து விட்டதாகவும் தெரிவித்துள்ளார். இவர் தற்போது மேலதிக விசாரணைகளுக்காக படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கொல்லப்பட்ட இருவரும் இராணுவத்தினருடன் இணைந்து செயற்பட்டதுடன் அப் பகுதி மக்களையும் போதையில் துன்புறுத்தி வந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## இது குசும்புங்கோ...!

★ இலங்கையில் ஈழம் என்ற நாடுகேட்டு விடுதலைப்புலிகள் 15 ஆண்டுகளுக்கு மேலாக போராடுகின்றார்கள். அவர்கள் போராடிப்போராடி ஓய்ந்து விட்டார்கள். அதனால் அவர்கள் தொடர்ந்து போர் நடத்த விரும்பவில்லை. இப்போது ஈழத் தமிழர்கள் தனிநாடு வேண்டும் என்று விரும்பவில்லை. தமிழர் கலாச்சார தொட்டிலான யாழ்ப்பாணத்தை விடுதலைப்புலிகள் இழந்துவிட்டனர். அதனால் யாழ்ப்பாணம் இல்லாத தமிழீழத்தை ஈழத் தமிழர்கள் விரும்பவில்லை. ஈழத் தமிழர் பிரச்சனைய்யை அமைதியாக தீர்க்க ஜனாதிபதி சந்திரிகா விரும்புகிறார். பிரபாகரனுடன் பேச்சு நடாத்த சந்திரிகா தயாராக இருக்கிறார். ஈழத் தமிழர்கள் கஷ்டப்படுவது உண்மை. அவர்கள் வெளிநாடுகளுக்கு ஓடிப்பிழைக்கிறார்கள். அதனால் தொடர்ந்து விடுதலைப்போரை தமிழர்களால் நடாத்த முடியாது.

*- சிறீலங்காவின் வெளியுறவுத்துறை அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தெரிவித்ததாக தமிழகத்தில் இருந்து வெளிவரும் நாளிதலான தினகரனில்.*

★★★

★ நீலன் திருச்செல்வம் மதித்து வந்த மனித உரிமைகள், பத்திரிகைச் சுதந்திரம், பாதுகாப்பு நடவடிக்கைகள் இன்று நம் நாட்டில் இருக்கிறதா? இந்த சபையில் அமரர் நீலன் கடந்த 4 வருடங்களும் 6 தினங்களும் அயராது நாட்டு மக்களின் குறிப்பாக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண பாடுபட்டு வந்தார்.

*- ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர்*

★★★

★ இனப்பிரச்சினைக்கு சமாதான அரசியல் தீர்வு காண்பது தொடர்பாக விடுதலைப் புலிகள் தமது மனதில் என்ன நினைக்கிறார்கள் ணன்பதை அனுமானித்துக்கொள்ள முடியாமல் இருப்பதே சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு இருக்கும் பாரிய முட்டுக்கட்டையாகும்.

*- கதிர்காமர்*

## இராணுவ கோப்ரல் வீட்டில் விமான எதிர்ப்பு குண்டுகள்

*(28.08.99)*

சிறீலங்கா இராணுவத்தை சேர்ந்த கோப்ரல் தரத்திலான ஒருவரது வீட்டிலிருந்து குண்டுகள் மீட்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. மணலாறு (வெலி ஓயா) இராணுவ முகாமில் பணிபுரிந்த இவ் இராணுவ கோப்ரல் ஒருவரின் வீட்டிலிருந்து 62 விமான எதிர்ப்புக் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன. கண்டியில் நடைபெறவுள்ள பெரஹராவை முன்னிட்டு பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சிறீலங்கா பொலிஸார் கடந்த புதனன்று கடுகஸ்தோட்டச் சந்தியில் இந்த இராணுவத்தினனை சோதனையிட்டபோது, இடுப்பில் மறைத்து வைத்துக்கொண்டு வந்த விமான எதிர்ப்புக் குண்டொன்று மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதனைத் தொடர்ந்து அவரது கம்பளையில் உள்ள வீடும் சோதனையிடப்பட்டது. அதன்போதே மேலும் 61 விமான எதிர்ப்புக் குண்டுகள் மீட்கப்பட்டன என பொலிஸ் தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.


**தமிழர் வித்தியாலயம்**

**75, rue Philippe de Girard, 75018 Paris.**

**Tel: 01 40 05 11 16**

Metro:Marx Dormoy அல்லது La Chapelle அல்லது Bus:65

**ஆரம்பமாகும் பிற வகுப்புக்கள்:**

★ நல்ல தமிழ்
★ மனத்தை – உடலை நன்னிலைப்படுத்தும் யோகாசனம்.
★ பரதநாட்டியம்.
★ கர்நாடக சங்கீதம்
★ வீணை

**புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 01.09.99, 04.09.99**

**பிரெஞ்சு மொழிப் பயிற்சி வகுப்பு Cours de français**

வேலை, மருத்துவம், கடிதம், குடியுரிமை போன்ற எதுவாக இருந்தாலும் உங்கள் காரியங்களை நீங்களாகவே செய்வதற்கு ஏற்ப கற்பிக்கப்படும் பிரெஞ்சு வகுப்புக்கள் ஆரம்பம் ஆகின்றன.

- ஆறு மாத கால சனி-ஞாயிறு வகுப்புக்கள்.
- திங்கள் -புதன்-வியாழன்-வெள்ளி இடம்பெறும் மூன்று மாத கால வகுப்புக்கள்,
காலை: 10.00 மணி–12.00 மணி அல்லது மாலை: 15.00 மணி –17.00 மணி

இதைவிட, கற்பவர்களின் நேரம்–தரம் என்பவற்றிற்கேற்ப குறுகிய காலத்தில் பேச – எழுத கற்றுக்கொள்வதற்கான தனி வகுப்புகளும் உண்டு.

**நல்ல ஆங்கிலம் Good English**

Toefl க்குத் தயார்செய்து பரீட்சைக்குத் தோற்ற ஒழுங்கு செய்யப்படும்.

**டியூசன் வகுப்புக்கள் Soutien Scolaire**

CP தொடக்கம் Terminal வரை

ஒரு பாடம் வாரத்தில் இரு தடவைகள். வகுப்பில் படித்த பாடங்களை மீட்டு, வீட்டு வேலைகளைச் செய்வதற்கு உதவி செய்வது முதல் பாடநேரத்திலும், அடுத்து படிக்க இருக்கும் பாடங்களை முன்கூட்டியே தயார் செய்வது இரண்டாம் பாடநேரத்திலும் இடம்பெறுகிறது.

சனி, புதன், பிற்பகல், மாலை, ஞாயிறு காலை வகுப்புகள்

Pub

# மலையகச் செய்திகள்

## தமிழ்மொழி முறையாகக் கற்பிக்கப்படாததே மலையகச் கல்வித்துறை பின்னடையக் காரணம்

மலையகத்தில் கல்வித்துறை சரியான முறையில் முன்னேற்றமடையாமல் பின்னடைவைக் கண்டிருப்பதற்கு அது மாணவர்களுக்கு சிறந்த முறையில் கற்பிக்கப்படாததே காரணம் என மத்திய மாகாணத்தின் கல்விப் பணிப்பாளர் எஸ். தேசோமயானந்தம் தெரிவித்தார்.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நுவரெலியா மாவட்ட தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான இரண்டு நாள் கலந்துரையாடல் நுவரெலியா புனித சவேரியார் கல்லூரியில் இடம்பெற்றது. அங்கு ஆசிரியர்களிடையே கல்விப் பணிப்பாளர் பேசும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியதாவது நாம் மற்றைய பாடங்களிற்கு வழங்கும் முக்கியத்துவத்தை தமிழ்ப் பாடத்திற்கு வழங்குவதில்லை. குறிப்பாக கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களிற்கு முக்கியத்துவம் வழங்கப்ப்டுகிறது. ஆனால் அனைத்துப் பாடங்களிற்கும் ஊடக மொழியாக இருக்கும் தமிழின் முக்கியத்துவத்தை எவரும் உணருவதில்லை. பாடசாலைகளிலும் கணித, விஞ்ஞான, ஆங்கில பாடங்களைக் கற்பிக்க பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் தமிழ் கற்பிக்க எதிர்பார்க்கப்படுகின்றனர். ஆனால் மொழியை யார் வேண்டுமானாலும் கற்பிக்கலாம் என்ற தவறான அபிப்பிராயம் நிலவுகிறது. இதன் விளைவாகத் தமிழ்மொழி இன்று இப்பிராந்தியத்தில் அழியும் நிலை தோன்றியுள்ளது. ஒவ்வொரு மொழிக்கும் பேச்சு வழக்கில் பல வடிவங்கள் முறைகள் இருக்கலாம். யாழ்ப்பாணத்தவர், கொழும்புத் தமிழர், மலையகத்தவர் என பேச்சுத்தமிழ் வித்தியாசப்படுகின்றது. ஆனால் எழுதும்போது அது ஒரே தமிழ் வடிவமாகவே உள்ளது. அது போலவே நாம் உச்சரிக்கும் போது அது ஒரே உச்சரிப்பாகத் தான் இருக்கவேண்டும். இதனை ஒருபோதும் நாம் மறக்கக் கூடாது.

தமிழ் மொழியை மலையக மாணவர்களுக்கு சிறந்த மொழியில் கற்பிக்கவேண்டியது ஆசிரியர்களுடைய பொறுப்பாகும். பல ஆசிரியர்களே தமிழைச் சரியாக உச்சரிப்பதில்லை. ஆகவே ஆசிரியர்கள் தம்மிலுள்ள குறைகளை உணர்ந்து நிவர்த்தி செய்யவேண்டும்.

மொழி என்பது முக்கியமான ஒரு ஊடகம். அதனைச் சரிவர பேசவோ, எழுதவோ தெரியாவிட்டால் அது அம்மொழியின் அழிவிற்கே வ்ழிவகுக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## பதுளையில் பாடசாலைகள் பகிஸ்கரிப்பு மாணவிகள்மேல் பயங்கரவாதக் குற்றம்

பதுளையின் தமிழ் மகளிர் மகாவித்தியாலயத்தில் இடம் பெற்ற ஒரு விவகாரம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களை இடமாற்றம் செய்யுமாறு கோரி மேற்படி பாடசாலை மாணவிகள் தொடர்ந்தும் தமது வகுப்புக்களைப் பகிஸ்கரித்து வருகின்றனர்.

மாணவிகள் வகுப்பு பகிஸ்கரிப்பில் ஈடுபட்ட அதேவேளை அவர்களைச் சமாதானம் செய்து வைப்பதாகக்கூறி பாடசாலைக்குள் நுழைந்த ஓர் குழுவினர் அவர்கள் தொடர்ந்தும் பகிஸ்கரிப்பில் ஈடுபடுவார்களேயாயின் அந்த மாணவிகள் பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேரும் என்றும் பயங்கரவாத இயக்கங்களுடன் தொடர்பிருப்பதாகக்கூறி பாதுகாப்புப் பிரிவினருக்கு அறிவிக்கப்போவதாக அச்சுறுத்தினர். அதனையடுத்து தமக்கு பொலிசாரின் பாதுகாப்பு தேவை என மாணவிகள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

அதிபரின் அனுமதியுடன் சமாதானம் செய்வதாகக் கூறி பாடசாலைக்குள் நுளைந்த குழுவினரே மாணவிகளை வகுப்பிற்குச் செல்லுமாறும் பகிஸ்கரிப்பை கைவிடுமாறும் அறிவித்து இப்பிரச்சினை தொடர்பாக இரண்டு மாதங்களிற்குள் தீர்வு காணப்படுமென்றும் தெரிவித்தனர். இதனையடுத்து பாடசாலைக்குள் வெளியார் தலையீட்டைக் கேள்வியுள்ள பெற்றோர் பாடசாலைக்கு விரைந்து ஏன் வெளியாரை பாடசாலைக்குள் அனுமதித்தீர்கள் என அதிபரிடம் வினவியபோது அவர் சமாதானம் பேசுவதற்காகவே எனக் கூறியுள்ளார். இதனையடுத்து பெற்றோருக்கும் அதிபருக்குமிடையே வாக்குவாதம் இடம்பெற்றதாயும் சொல்லப்படுகிறது. இச்சமயம் பாடசாலைக்கு வந்த கல்வி அதிகாரி ஒருவரும் மாணவிகளை எச்சரித்துள்ளார் என்றும் சொல்லப்படுகிறது. நிலமை மோசமடைந்தபோது பிராந்திய கல்வி அதிகாரிகளும் பெற்றோர் சங்கத்தினரும் பேச்சுக்களில் ஈடுபட்டனர். இதன்படி

மாணவர்களை பாடசாலைக்கு அனுப்ப தாம் சம்மதிப்பதாயும் ஆனால் பாடசாலையில் நடந்த பிரச்சினைகளுக்கு உடனடியான தீர்வு காணப்பட வேண்டும் என்றும் அறிவித்தனர்.

## கண்டி நகர நுளைவாயிலில் சோதனை அதிகரிப்பு

கண்டி நகரை அடையும் சகல நுளைவாயில்களிலும் பாதுகாப்புப் 'படையினரும், பொலிசாரும் பெருமளவில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கண்டியின் தலதா மாளிகையின் பெரகராவை முன்னிட்டே இந் நகரில் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. கண்டி நகருக்கான அம்பிட்டிய, கட்டுகஸ்தோட்டை, தென்னங்கும்புர போன்ற நுளைவாயில்களிலும் பாதுகாப்புப் படையினர் நிறுத்தப்பட்டு சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் கண்டிக்கு வரும் வாகனங்கள் யாவும் இப் பகுதிகளில் நிறுத்தப்பட்டு வாகனத்தில் இருந்த பயணிகள் இறக்கப்பட்டு அவர்களின் அடையாள அட்டைகள் சோதனையிடப்பட்டன.


உங்கள் தலைமுடி உதிர்கின்றதா?
கவலை வேண்டாம்
இதோ ஜேர்மனியின் புதிய கண்டுபிடிப்பு



தலைமுடி உதிர்வு, கணைவெடிப்பு, இளநரை, மற்றும் முடிவளர்ச்சி நிறுத்தம் போன்றவற்றால் விரக்தியடைந்து போயுள்ளவர்களுக்கு ஓர் நற்செய்தி!

இந்தப் பிரச்சினைகள் வயதானவர்களுக்கும் ஏற்படலாம். இள வயதினருக்கும் ஏற்படலாம். ஆனால் இக் குறைபாடுகளை Naturina® வை தொடர்ந்து உபயோகிப்பதன் மூலம் தடுத்து நிறுத்தலாம்.

இத் தயாரிப்பு நீண்டகாலமாக ஆய்வுகளில் ஈடுபட்டுவந்த ஜேர்மனி முன்னணி நிறுவனத்தின் கண்டுபிடிப்பு.

**Naturina® இயற்கையான மருத்துவத்தின் கலவைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் உயிர்ப்புக் கலவையாகும்.**

இத் தயாரிப்பு எந்தவித பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாது.

எமது புதிய தயாரிப்பைப் பயன்படுத்துவதன் மூலம் சர்மம் பளபளப்புத் தன்மையையும், ஆரோக்கியமான தோலினையும், பலமான நகங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

எமது Naturina®தயாரிப்புக்களான கூட்டுக்குளிகைகள், ஷம்பு, கூந்தல் தைலம் (Capsules. Shampoo, Hair tonic) ஆகியவற்றை ஏக காலத்தில் 3 மாதங்களுக்குத் தொடர்ச்சியாக பயன்படுத்தினால் பயன் நிச்சயம்.

**இன்றே பாவியுங்கள் Naturina® உங்களை நிச்சயம் திருப்திப்படுத்தும்!**

இப்பொழுது ஜேர்மனி, பிரித்தானியாவிலுள்ள Naturina முன்னணி மருந்தகங்களிலும் (Apotheke) கிடைக்கும்




எமது ஸ்தாபனத்தின் தயாரிப்புக்களை உபயோகித்து பலன் பெற்றோர் கூறுவதைக்கேட்டு நீங்களும் பயன்பெறுங்கள்.

**சுவிற்சலாந்திலிருந்து: திரு. ராஜன்.**
*நான் இந்த Naturina® தயாரிப்புக்களைக் கடந்த 3 மாதங்களாகப் பாவித்து குறுகிய காலத்தில் எனது தலைமயிர் உதிர்வைக் குறைத்துக்கொண்டேன்.*

**டென்மார்க்கிலிருந்து: திருமதி துரைராஜா.**
*நான் Naturina® மாத்திரைகளைப் பயன்படுத்தி எனது தோல் பிரச்சினைகளையும் நக அழகையும் பேணிக்கொண்டுள்ளேன்.*

**இங்கிலாந்திலிருந்து: திருமதி ரேணுகாதேவி.**
*இந்த Naturina® தயாரிப்புக்களைப் பற்றி பத்திரிகையில் படித்தபோதும் அதன் பிரதி பலன்களை நான் முழுமையாக நம்பவில்லை. இருந்தும் இவற்றை பயன்படுத்தியதில் முழுப் பலனையும் அடைந்துள்ளேன்.*

மேலதிக விபரங்களுக்கு:
**Intercare Handels GmbH**
Munster str 5, 59065 Hamm-Germany
Tel: 0049 2381 688347 / Fax: 0049 2381 688349 (நாம் தமிழும் கதைப்போம்)
Internet: http://www.intercare-naturina.com

பிரித்தானிய தொடர்புகளுக்கு:
Tel: 0171-5150550
Mobil: 07930-471356

கொழும்பு ஆய்வாளர் தராகி

# சிறீலங்காவின் ‘ஆனையிறவுக் காய்ச்சல்’

விடுதலைப் புலிகளினால் பரந்தன் ஆனையிறவு படைத் தளம் கைப்பற்றப்பட்டுவிடக் கூடாது என்பதைப் பார்த்துக்கொள்வதே சிறீலங்கா இராணுவத்தின் முக்கிய கவலையாக உள்ளது. கொழும்பிலுள்ள இராணுவ ஆய்வாளர்கள், விடுதலைப்புலிகள் தீவின் மிகப்பெரும் இராணுவ படைத் தளத் தொகுதியை கைப்பற்றுவார்கள் என்பதை மிக இலேசாக மறுத்துள்ளனர். யாழ். குடாவின் வாசலில் இம்முகாம் நிலைகொண்டுள்ளது. அதேபோல்



விடுதலைப் புலிகளும் அதன் வாசலில் மிரட்டிக்கொண்டு நிற்கின்றார்கள். அவர்கள் அதனைத் தாக்கி அழிக்கலாம். ஆனால் இன்று அங்குள்ள இராணுவத்தின் பலத்தை கணக்கில் எடுக்கும்போது சில வேளைகளில் சாத்தியமற்றதுபோல் கூடத் தோன்றுகின்றது. ஆனால் விடுதலைப் புலிகள் பரந்தனைக் கைப்பற்றி ஆனையிறவின் தென்முனையை உடைத்தெறிந்து வடக்கினூடாக நகரலாம். கிளிநொச்சியை அவர்கள் கைப்பற்றியதன் பின், அதனைத் தக்க வைத்துக் கொண்டதுபோல் இதனையும் அவர்கள் சாத்தியமாக்கினால் யாழ்ப்பாணத்தின் பாதுகாப்பு நிலையைப் பற்றிக் கூறவேண்டியதில்லை. மிகவும் அபாயகரமான நிலையை அது அடைந்துவிடும். இத்தோற்றப்பாடானது இராணுவத்திற்கு குடாநாட்டின் தென்மராட்சிப் பிராந்தியத்தைத் தக்க வைத்துக்கொள்வதில் பெரும் சிரமங்களை ஏற்படுத்தும்.

ஆனையிறவிற்கும் யாழ். குடாவிற்குமிடையே இரண்டு பிரிவுகளைக் காணலாம். ஒன்று வலிகாமப் பிரிவு. மற்றையது வடமராட்சி, தென்மராட்சி போன்றவைகளை உள்ளடக்கிய பிராந்தியம். விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் தங்களது உளவறியும் குழுக்களை இம் முகாம் நோக்கி அனுப்பி வருவதானது இராணுவத்தை மிகவும் கவலைக்குள்ளாக்கியுள்ளது. பல தடவைகள் விடுதலைப் புலிகளின் உளவறியும் பிரிவினர் முன்னணிப் பாதுகாப்பு வேலிகளுக்குள் நடந்த மோதல்களில் இறந்துள்ளனர். பரந்தன், ஆனையிறவு முகாம் பகுதிகளில் இறந்த விடுதலைப் புலிகளின் உளவு நடவடிக்கை அங்கத்தவர்களது எண்ணிக்கையைப் பார்க்கும்போது அவர்கள் இம்முகாமிற்கான வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதை சந்தேகத்திற்கிடமின்றி வெளிப்படுத்துகின்றது.

இராணுவம் தனது முன்னணிப் பாதுகாப்பு நிலைகளிலிருந்து பாதுகாப்புக் குறைவான பகுதிகளுக்கூடாக முன்னேற முயல்வதை விடுதலைப்புலிகள் தடுத்து நிறுத்துகின்றனர். கடந்த ஞாயிறும் இவ்வகையில் இரண்டு முனைகளினூடாக முன்னேற முயன்ற இராணுவம் தடுத்துத் திருப்பப்பட்டது. முன்னேற முயன்ற இராணுவ அணிகளைத் தாம் தடுத்து நிறுத்தியதாயும் இதன்போது நடந்த கடும் மோதலில் ஏராளமான ஆயுதங்களைத் தாம் கைப்பற்றியதாயும் இரண்டு இராணுவத்தின் உடல்களையும் தாம் கைப்பற்றி செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் ஒப்படைத்ததாயும் புலிகளின் குரல் வானொலி



அறிவித்தது. பரந்தன் ஆனையிறவு படைத்தளத்தின் மீது இராணுவம் கொண்டுள்ள கவலையை விடுதலைப் புலிகள் நன்கு அவதானித்துக்கொண்டுள்ளனர். இராணுவம் வன்னிக்கூடாக வரும் மக்களுக்காக இப் பகுதிக்கூடாக ஒரு பாதையைத் திறந்து யாழ். குடாவிற்குத் திறந்துவிடுவது பற்றி தற்போது கூறிவருகிறது. தாம் இம் முகாம் மீது நடத்தக் கூடிய தாக்குதல்களை இந்த மக்களைக்கொண்டு தடுத்து நிறுத்தும் ஓர் வழியாகவே இராணுவத்தின் நடவடிக்கைகள் இருப்பதாக விடுதலைப் புலிகள் பார்க்கின்றனர். பரந்தன் ஆனையிறவு முகாமிற்கூடாக வன்னியிலிருந்து மக்கள் வழக்கமாகச் செல்லும் போது அவர்களின் பெருந்தொகையானோர் இம்முகாமிற்கருகாமையில் எப்போதும் நிற்கக் கூடும். இவர்களை படையினருக்கு முன்னால் நிறுத்திவைக்கவும் சாத்தியங்கள் உண்டென விடுதலைப் புலிகள் கருதுகின்றனர்.

அடுத்து இம் முகாம் மீதான தாக்குதல் உடனடியானது என விடுதலைப் புலிகள் கருதும் பட்சத்தில் இப் பகுதிக்கூடான மக்கள் போக்குவரத்தை உடனடியாக அவர்கள் தடைசெய்வார்கள். இது இராணுவத்தைக்கூட எச்சரிக்கைப்படுத்தும். யாழ். குடாவிற்கான தரைப்பாதையை வன்னியின் மேற்குக்கரையூடாக அரசு திறந்தால் அதன் பின் ஆனையிறவைத் தாக்குவதென்பதை விடுதலைப் புலிகள் நினைத்துப்பார்க்கத் தேவையில்லை. பரந்தன், ஆனையிறவு படைத்தளத்தின் பாதுகாப்பினைக் கருத்தில்கொண்டு அதனூடாக ஓர் பாதையைத் திறந்து அதன் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ளும் நிலையில் மன்னார் பூநகரிக்கூடாக வடபகுதி பாதைத்திறப்பிற்குத் தேவையான கால அவகாசத்தை இதன் மூலம் பெற்றுக்கொள்ள மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல முடிவு செய்திருக்கலாம்.

ஆனையிறவு படைத்தளத்திற்கான அச்சுறுத்தல் என்றுமில்லாதவாறு உண்மையாகியுள்ளதாக வடக்கிலுள்ள தளபதிகள் கூறுகிறார்கள். அதற்காக முதலில் உதவிப் படைப்பிரிவுகள் உட்பட்ட முழுமையான படையணிகளை இதன் பாதுகாப்பிற்காக அவர்கள் வைத்துள்ளார்கள். கிளிநொச்சியை விடுதலைப்புலிகள் கைப்பற்றும்போது அவர்களிடம் ஆகக்கூடியது இரண்டு பிரிகேட் படைப்பலமே இருந்தது. இத் தாக்குதலையடுத்து அவர்கள் மிகப்பெரும் ஆட்சேர்ப்பினை மேற்கொண்டனர். இதனால் கிளிநொச்சிப் போரில் பங்குபற்றிய படையணிகளுக்கு ஏற்பட்ட ஆட்பற்றாக் குறையைத் தீர்த்தது மட்டுமன்றி புதிய மற்றுமோர் பிரிகேட்டை ஏற்படுத்தவும் அவர்களது படையணியை பாரம்பரிய படையாக வன்னியில் மாற்றவும் முடிந்தது.

விடுதலைப் புலிகள் கடந்த வருடம் முதல் யோசித்துக்கொண்டிருந்த மூன்றாவது பிரிகேட்டினை ஏற்படுத்துவதில் வெற்றியடைந்துள்ளார்களென செய்திகள் தெரிவிக்கின்றன. என்றுமில்லாதவாறு மக்கள் இராணுவப் பயிற்சி நடவடிக்கையொன்றினையும் வன்னியில் அவர்கள் மேற்கொண்டிருந்தார்கள். அதே வேளை களத்தில் நிற்கும் பிரிவுகளுக்கு உதவியாக மக்கள் படையணியையும் அவர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள். (பிரித்தானிய இராணுவ முறைப்படி ஓர் படையணியானது ஆகக்குறைந்தது ஒன்பதினாயிரம் படைகளையும் மற்றும் உதவிப் படைகளையும் எறிகணைகள், தாங்கிகளையும் கொண்டிருக்கும்).

**விடுதலைப் புலிகள் கடந்த வருடம் முதல் யோசித்துக்கொண்டிருந்த மூன்றாவது பிரிகேட்டினை ஏற்படுத்துவதில் வெற்றியடைந்துள்ளார்களென செய்திகள் தெரிவிக்கின்றன. என்றுமில்லாதவாறு மக்கள் இராணுவப் பயிற்சி நடவடிக்கையொன்றினையும் வன்னியில் அவர்கள் மேற்கொண்டிருந்தார்கள். அதேவேளை களத்தில் நிற்கும் பிரிவுகளுக்கு உதவியாக மக்கள் படையணியையும் அவர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள். (பிரித்தானிய இராணுவ முறைப்படி ஓர் படையணியானது ஆகக்குறைந்தது ஒன்பதினாயிரம் படைகளையும் மற்றும் உதவிப் படைகளையும் எறிகணைகள், தாங்கிகளையும் கொண்டிருக்கும்).**

வன்னியுடன் தொடர்புகளை வைத்துக்கொண்டுள்ள தமிழ் குழுக்களின் கணிப்புக்கள் விடுதலைப் புலிகள் இருபத்தையாயிரத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கு போர்ப்பயிற்சிகளை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கின்றன. வியட்நாமில் பிரெஞ்சு இராணுவ படைத்தளமான தியான் பியான் பூ பதினையாயிரம் படைகளைக் கொண்டிருந்தது. ஆனால் ஆனையிறவில் தற்போது மூவாயிரத்திற்கும் மேற்பட்ட படைகளே நிலைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் ஆனையிறவு தியான் பியான் பூ போல் தனிமைப்படுத்தப்பட்ட ஓர் முகாமல்ல. வடமராட்சி தென்மராட்சி இராணுவத்துடன் அது தொடர்புகளைக் கொண்டுள்ளது. அதே வேளை வெற்றிலைக்கேணி கடல் மூலமாகவும் விநியோகங்களைப் பெறக்கூடியது.

வோ என்குயன் கியாப் எனும் வியட்நாமிய ஜெனரல் இருபத்தியெட்டுப் படைப் பிரிவுகளைக் கொண்டிருந்தார். அத்துடன் பொறியியலாளர், குறி பார்த்துச் சுடுபவர் என்பவர்களையும் சேர்த்து 37,500 படையினரை பிரெஞ்சு இராணுவ முகாமைக் கைப்பற்ற அவர் ஈடுபடுத்தினார். அத்துடன் 10,000 மேலதிக படையினரையும் அவர் வைத்திருந்தார். இங்கு 50,000 படையினர் ஆயுதங்களுடன் தேவைக்கேற்ப அனுப்பப்பட்டனர் என்பதும் இதற்கு நான்கு மடங்கான மக்கள் உதவிகளுக்காக அனுப்பப்பட்டனர்.

உண்மை, ஆனால் இதனையும் தற்போதுள்ள பரந்தன், ஆனையிறவு சூழ்நிலையையும் ஒப்பு நோக்க முடியாது. ஆனால் யாழ். குடாவின் நுழைவாயிலில் உள்ள இதனை தாக்கி அழிப்பதில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உறுதியாகவே இருப்பாரானால் மேற்கூறியதையும் உதாரணமாகக் கொள்ளலாம். விடுதலைப் புலிகள் சிறீலங்கா அரசுடனான அமைதிப்பேச்சுக்கள் முறிவடைந்து சில மாதங்களில் அதாவது 94, 95 களில் ஆனையிறவு முகாமை தாக்கத்திட்டமிட்டிருந்தனர். பின்னர் ‘ரிவிரச’ நடவடிக்கை ஆரம்பித்ததுடன் அத் திட்டத்தைக் கைவிட்டிருந்தனர். அன்று இம்முகாம் தனிமைப்படுத்தப்பட்டிருந்தது. கடல் வழித்தொடர்பை மட்டுமே அது கொண்டிருந்தது. இரண்டு அவ்ரோக்கள் சுட்டு வீழ்த்தப்பட்ட நிலையில் வான்படையும் மிக மட்டுப்படுத்தப்பட்ட பறப்புக்களை அப்பிராந்தியத்தில் மேற்கொண்டிருந்தது. ஆனால் இன்று இராணுவத்திற்கு மிகவும் சாதகமான ஓர் நிலை காணப்படுகிறது.

விடுதலைப் புலிகள் தமது வசமுள்ள வன்னிப் படைப்பலம் முழுவதையும் பரந்தன் ஆனையிறவு தளத்திற்காக பயன்படுத்தும் திறனைக்கொண்டுள்ளார்களா? அவர்களால் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய படையணி இப்படைத் தளத்தைத் தகர்த்து கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ளப் போதுமானதா? திரு.வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது மௌனத்தை மீண்டும் ஒருமுறை உடைத்தாரானால் இவற்றிற்கான பதில்கள் கிடைக்கலாம். யாழ்ப்பாணத்தில் அவரது துப்பாக்கிவேட்டு பிரயோகிக்கப்பட்டு கால்நூற்றாண்டாகியுள்ள இந் நிலையில்........


**(மிட் வீக் மிரர் எனும் பத்திரிகையில் வெளியான ஆங்கிலக் கட்டுரையின் தமிழாக்கம்.)**

# மட்டக்களப்பா? ஆனையிறவா?

# குழம்பித் தவிக்கும் சிறீலங்கா படைத்தலைமை!

இன்று சிறீலங்காவின் முழு எதிர்பார்ப்புமே விடுதலைப் புலிகளின் பெருந்தாக்குதலை நோக்கித்தான் உள்ளது. அநேகமானோர் விடுதலைப்புலிகள் ஆனையிறவு படைத்தளத்தின் மேல்தான் தாக்குதலை நடத்துவார்கள் எனக் கூறுகின்றனர். புலிகளின் அடுத்த இலக்கு ஆனையிறவுதான் என்பதனை கொழும்பின் அரசியல், இராணுவ ஆய்வாளர்கள் கூட ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டுகின்றனர். அது ஒரு புறமிருக்கட்டும். விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் கடந்த வாரங்களில் நாட்டின் சகல பாகங்களிலும் அதிகரித்திருக்கின்றது.

சிறீலங்கா அரசு தாம் தமிழ் மக்களை விடுதலைப் புலிகளிடம் இருந்து விடுவித்துவிட்டோம் என்று பிரச்சார ஊடகங்களின் பொய்களின் மேல் நின்று கொண்டு கத்திக்கொண்டிருக்கின்றது. யாழ்குடாவின் உண்மை நிலை சர்வதேசத்திற்கு மறைக்கப்பட்டுவருகின்றது. அந்தப் பிராந்தியத்துக்குத் தொலைபேசி இணைப்புக்களையும் மின்சாரத்தையும் ஏற்படுத்திக் கொடுத்துவிட்டால் மாத்திரம் அவர்களது அன்றாட வாழ்க்கை சகஜ நிலைக்கு வந்துவிடும் என உலகிற்கு சிறீலங்கா அரசு கூறுவதை உலகமும் கேட்டுக்கொள்கிறது. ஆனால் இன்று யாழ்.குடாவில் திறந்த வெளிச் சிறைச்சாலைக்குள் போராட்டம் வலுவடைந்து வருகின்றது என்பதை சிறீலங்கா பயத்துடன் ஏற்றுக்கொள்கிறது. யாழ்.குடாவிற்குள் மாத்திரம் பல்லாயிரம் இளைஞர்கள் விடுதலைப்புலிகள் அமைப்புடன் இணைந்துகொண்டுள்ளனர். அங்கு போராட்டம் பூகோள சமூக மாற்றங்களுக்கு ஈடுகொடுத்து வளர்ந்து வருகின்றது. யாழ்.




குடாவைப்பற்றி நாம் இப்போது கூறவேண்டியதில்லை. ஆனால் கடந்த சில வாரங்களாக சிறீலங்காவின் பாதுகாப்புத் தலைமைக்கு புதிய தலையிடியாக தென் தமிழீழம் வந்து சேர்ந்துள்ளது.

தென்தமிழீழத்தில் சிறீலங்காவின் அரச நிர்வாக இயந்திரம் செயலற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இன்று வரை மட்டக்களப்பு வாவியின் அப்பால் மாத்திரமே விடுதலைப் புலிகளின் கட்டுப்பாடு இருந்து வந்துள்ளது.

அங்கிருந்தே மட்டக்களப்பு நகருக்குள் விடுதலைப்புலிகள் தமது கவனத்தைச் செலுத்தி வந்துள்ளனர். ஆனால் இன்று நிலை தலைகீழாகியுள்ளது. மட்டக்களப்பின் மத்திய பகுதியிலேயே புலிகளின் அணிகள் நடமாடுகின்றன. தாக்குதல்களை மேற்கொள்கின்றன. இவை மட்டுமல்லாமல் இராணுவத்தின் பாதுகாப்பு அரண்பகுதிகளுக்குள்ளேயே அவர்கள் சாதாரணமாகச் சென்று வருவதாக



செய்திகள் தெரிவிக்கின்றன.

இன்று தென் தமிழீழத்தில் நிலைகொண்டுள்ள படைகளில் விசேட அதிரடிப் படையின் தொகை அதிகம். அங்கு நிலைகொண்டிருந்த இராணுவ அணிகள் வன்னிப் போர்க்களத்திற்கும் மன்னாருக்கும் கொண்டு செல்லப்பட்டதையடுத்து அங்கு விசேட அதிரடிப்படையினர் செயற்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு உதவியாக விசேட உதவிப்படையாக ராசிக் குழுவினர், மற்றும் முன்னாள் போராளிக் குழுக்களின் சில பிரிவுகள் போன்றவை ஈடுபடுத்தப்பட்டன. அதேவேளை தென் தமிழீழத்தில் சிறீலங்காவின் பலத்தை நிரூபிக்கும் இன்னொரு அணியாக பாராளுமன்ற அங்கத்தவர்கள் இருந்தனர். விடுதலைப் புலிகள் தென் தமிழீழத்தில் படிப்படியாக அரச நிர்வாகத்தை அகற்றும் நடவடிக்கையை ஆரம்பித்து முதலில் தமிழ் பாராளுமன்ற அங்கத்தவர்களை இப்பிராந்தியங்களில் சிறீலங்காவுக்காக செயற்படுவதைத் தடை செய்தனர். தமிழ் பாராளுமன்ற அங்கத்தவர்கள் தமது காரியாலயங்களை இப்போது கொழும்புக்குக்கொண்டு செல்வதாக கூறப்படுகிறது.

அதேவேளை சிறீலங்காவுக்காக மக்களையும் போராட்டத்தையும் காட்டிக்கொடுத்து வரும் ராசிக்குழு மற்றும் முன்னாள் போராளிக் குழுக்களின் அங்கத்தவர்களை சமூகத்தில் இருந்து அகற்றும் நடவடிக்கையை மற்றொரு பிரிவு மேற்கொண்டு வருகின்றது. இன்று ஒரு வகையில் இச் செயற்பாடு சாத்தியமாகி வருகின்றது என்றே சொல்லவேண்டும். இதற்கடுத்ததாக இப்போது விடுதலைப் புலிகளின் நீண்ட களப்பயிற்சி

> **இன்று யாழ்.குடாவில் திறந்த வெளிச் சிறைச்சாலைக்குள் போராட்டம் வலுவடைந்து வருகின்றது என்பதை சிறீலங்கா பயத்துடன் ஏற்றுக்கொள்கிறது. யாழ்.குடாவிற்குள் மாத்திரம் பல்லாயிரம் இளைஞர்கள் விடுதலைப் புலிகள் அமைப்புடன் இணைந்து கொண்டுள்ளனர்.**

யும் அனுபவமும் கொண்ட பல விசேட கொமாண்டோ அணிகள் தென் தமிழீழத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன.

விடுதலைப்புலிகளின் தென் பிராந்திய தளபதிகள் பலர் புதிதாக பதவியேற்றுள்ளனர் என்றும் அதன் பின்னரேயே அரச படைகளின்மேல் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன என்றும் கொழும்பின் வார இதழ்கள் கூறியுள்ளன. சில வருடங்களுக்கு முன்பும் தென் தமிழீழத்தில் விசேட அதிரடிப்படையினரே அதிகமாக நிலைகொண்டிருந்தனர். விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் இப்பிராந்தியத்தில் அதிகரிக்க விசேட அதிரடிப்படையினர் அகற்றப்பட்டு இராணுவ அணிகள் அங்கு அனுப்பிவைக்கப்பட்டன. இந்நிலையில் புதிய அரசு போர் முனைப்புக்கொண்டு யாழ்குடாவில் இராணுவ நடவடிக்கையை ஆரம்பிக்க தென்தமிழீழத்தில் இருந்து இராணுவம் சற்று குறைக்கப்பட்டது. அதன் அடுத்த நடவடிக்கை கிளிநொச்சி நோக்கி ஆரம்பிக்கப்பட்ட மேலும் பல இராணுவ அணிகள் நகர்த்தப்பட்டன. இறுதியாக வன்னி மற்றும் மன்னார் யுத்தங்களின் போது எஞ்சியிருந்த இராணுவத்திலும் ஒரு சில முக்கிய முகாம்களை மாத்திரம் வைத்துக் கொண்டு மற்றவைகளில் இருந்து இராணுவம் விலகிக்கொண்டது. இந்த இடங்களிலெல்லாம் மீளவும் விசேட அதிரடிப்படை குடியேறிக்கொண்டது.

இப்போது விடுதலைப்புலிகளின் முழுக்கவனமும் இந்த விசேட அதிரடிப்படையின் மேலேயே உள்ளது. தினமும் தென் தமிழீழத்தில் எங்காவது ஒரு பகுதியில் விசேட அதிரடிப்படை மீது தாக்குதல் நடத்தப்படுவது வழக்கமாகியுள்ளது.

கடந்தவாரத்தில் மாத்திரம் தென்தமிழீழ மத்தியில் செங்கலடி புலுக்குணாவை, அம்பாறை, மட்டு நகர்ப்பகுதி போன்றவற்றில் விடுதலைப்புலிகள் விசேட அதிரடிப்படை மீது நடத்திய தாக்குதல்களில் முப்பதுக்கும் மேற்பட்ட படையினர் இறந்தும், ஐம்பதுக்கு மேற்பட்டோர் காயமுமடைந்துள்ளனர். அத்துடன் பல வாகனங்களும் சேதமடைந்துள்ளன. இப்படி தென்தமிழீழ சிவில் நிர்வாகத்தையும் இராணுவ பலத்தையும் சிறீலங்கா இழந்து வருகையில், வவுனியாவின் நிலைமையும் கேள்விக்குறியாகி வருகின்றது.

ஜெயசிக்குறுய் படை நடவடிக்கையை சிறீலங்கா ஆரம்பித்தபோது தமது படைகள் முன்னோக்கி நகரும்போது தமது கட்டுப்பாட்டுப் பிராந்தியங்களை எப்படித் தக்கவைத்துக்கொள்வது என்பதற்காக பல விசேட திட்டங்களை பாதுகாப்பு தலைமையகம் வகுத்தது. அதன்படி வவுனியாவில் பாதுகாப்பை பலப்படுத்துவதென்றும் முன்னேறிய பகுதிகளில் பொலிஸ் மற்றும் விமான, கடற்படைப் பிரிவுகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் செயற்படுத்தத் திட்டம் தீட்டப்பட்டது. சிலகாலம் வரை சிறீலங்காவின் திட்டம் ஓரளவிற்கு சாதகமான பலனைத் தான் கொடுத்தது. ஆனால் இன்று வன்னியில் இராணுவம் அகலக் கால்வைத்துள்ள நிலையில், விடுதலைப்புலிகளின் அணிகள் பாதுகாப்பு வலையத்துக்குள்ளேயே தாராளமாக செயற்பட்டுவருகின்றன. வவுனியாவின் பல பகுதிகளில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் நிகழ்ந்துள்ளன. அதுபோல் படையினரின் கட்டுப்பாட்டுப்பகுதியான புளியங்குளம், ஓமந்தை போன்ற பகுதிகளிலும் பல தாக்குதல்களை விடுதலைப்புலிகள் நடத்தியுள்ளனர்.

சிறீலங்கா ஒரு வருடத்தில் யுத்தத்தை முடித்து தேர்தலை நடத்த திட்டமிட்டிருக்கையில் விடுதலைப் புலிகள் போராண்டாக இவ்வருடத்தைப் பிரகடனப்படுத்தி சிறீலங்காவின் பல பகுதிகளிலும் தாக்குதல்களை விரிவுபடுத்தி வருகின்றனர். சிறீலங்காவின் தளபதிகள் ஒருபுறமும் அரசியல் தலைவர்கள் ஒரு புறமுமாக, இனப் பிரச்சினை பற்றி வேவ்வேறு திசைகளில் செயற்பட்டுவருகின்றனர். இதே சமயம் மட்டக்களப்பா அல்லது ஆனாயிறவா சிறீலங்காவால் அடுத்து இழக்கப்படும் பிரதேசம் என்பதில் இரு தரப்பினரும் தடுமாறிக்கொண்டுள்ளனர்.

வெளிவந்துவிட்டது

இசைமுரசு 99

தொடர்புகளுக்கு:
LUNE International
12, Rue Perdonnet,
75010 Paris.
Tel:/Fax: 01 42 09 21 43

ஈழமுரசு
12, Rue Perdonnet,
75010 Paris.
Tel:01 40 37 63 63



# விடுதலைச் சிறுத்தைகளால் பிரச்சாரம் செய்யமுடியாத நிலை

கடலூர் தொகுதியில் தி.மு.க. கட்சியினர் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதியில் தேர்தல் பிரச்சாரம் செய்வதில் திடீர் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

கடலூர் தொகுதியில் அ.தி.மு.க. சார்பில் முன்னாள் அமைச்சர் தாமோதரன், த.மா.கா சார்பில் முன்னாள் எம்.பி. பி.ஆர்.எஸ்.வெங்கடேசன், தி.மு.க. சார்பில் ஆதிசங்கர் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

தாழ்த்தப்பட்ட மக்கள் பெரும்பாலாக வசிக்கின்ற பகுதிகளில் கடந்த ஒரு வாரமாக இந்த திடீர் பிரச்சினை எழுந்துள்ளது. மேலும் தலித் சமுதாய மக்களுடன் கூட்டணி வைத்துக்கொண்டு எங்களை ஆதரிக்கும் த.மா.கா. வேட்பாளர் மட்டும் காலனி பகுதிக்குள் சென்று ஓட்டு சேகரிக்க் அனுமதிப்போம். மற்ற கட்சிகளுக்கு காலனிக்குள் செல்ல அனுமதியில்லை என்ற புதிய கோஷம் கிராமப்பகுதிகளில் எழுந்துள்ளது. இதனால் அரசியல் கட்சி பிரமுகர்கள் செய்வதறியாது குழம்பியுள்ளனர்.

இதன் பின்னணியில் விழுப்புரத்தில் நடைபெற்ற விடுதலை சிறுத்தைகள் பொதுக்கூட்ட அறிவிப்பு உள்ளதாக மாற்றுக்கட்சி அரசியல் பிரமுகர்கள் எண்ணுகின்றனர். காரணம் விழுப்புரத்தில் கடந்த 4-ம் திகதி நடைபெற்ற விடுதலைச் சிறுத்தைகள் பொதுக்கூட்ட மேடையில் பொறுப்புள்ள சில கட்சித்தலைவர்கள் 'அதிரடி' கருத்துக்களை அறிவித்தனர்.

இந்த கூட்டத்தில் பகுஜன் சமாஜ் கட்சி மாநில தலைவர் தேவநாதன் பேசுகையில், தி.மு.க., பா.ம.க. கூட்டணி கட்சியினர் காலனிப்பகுதியில் தேர்தல் பிரச்சாரம் செய்ய வந்தால் காலனி மக்கள் அனுமதிக்கக்கூடாது. கடந்த தேர்தலில் திண்டிவனத்தில் 'அம்பேத்கர் சிலை' அவமதிப்பு பிரச்சினையில் அமைச்சர் பொன்முடி மற்றும் தி.மு.க.வினர் தான் காரணம் என்று பா.ம.க நிறுவனர் ராமதாசும், சிலை அவமதிப்பு செயலைத் தூண்டிவிட்டது பா.ம.க.ராமதாசும்தான் என்று அமைச்சர் பொன் முடியும் மாறி மாறி புகார் செய்தனர்.

ஆனால் இந்தத் தேர்தலில் அதையெல்லாம் மறந்துவிட்டு ராமதாசும், பொன்முடியும் கைகோர்த்துக்கொண்டு காலனி மக்களிடம் ஓட்டுக்கேட்டுவர திட்டமிட்டுள்ளனர். அவர்கள் மறந்தாலும், அம்பேத்கர் சிலை அவமதிப்பை தலித் மக்கள் ஒரு நாளும் மறக்கவும் மாட்டார்கள், மன்னிக்கவும் மாட்டார்கள். சுயநல அரசியல் இலாபத்திற்காக அம்பேத்கரை அவமதித்த குற்றவாளிகளை அடையாளம்காண தலித் மக்கள் ஒன்றிணைய வேண்டும். இது காலத்தின் கட்டாயம் எனக்கூறினார்.

இதே கூட்டத்தில் பேசிய விடுதலை சிறுத்தைகள் மாநில அமைப்பாளர் திருமாவளவன் 'திராவிட கட்சிகளான தி.மு.க, அ.தி.மு.க. போன்ற கட்சிகள் நீண்ட காலமாக தலித் மக்களை மற்ற சமுதாயத்திற்கு பல்லக்கு தூக்கவே பயன்படுத்திக்கொண்டனர். ஆனால் இந்த நிலை நீடிக்க இனியும் அனுமதிக்கமாட்டோம். தேர்தலில் பங்கேற்போம். ஆட்சி அதிகாரத்தில் தலித் சமுதாயத்திற்கு உரிய பங்கினை எடுத்துக்கொள்வோம்.

தமிழக அரசியலில் தாழ்த்தப்பட்ட தலித் மக்கள் வாழ்க்கை முன்னேற தமாகா. தலைவர் மூப்பனார் நம்முடன் கைகோர்த்துள்ளார். அவரது கரத்தை வலுப்படுத்துவோம். த.மா.கா. தலைமையிலான கூட்டணி வெற்றிபெற முழு மூச்சில் செயல்படுவோம்.

எனவே, தமிழகத்திலுள்ள தி.மு.க., அதி.மு.க. ஆகிய திராவிட கட்சிகளில் உள்ள தலித் மக்கள் அனைவரும் உடனடியாக கட்சியை விட்டுவெளியேற வேண்டும். வரும் 2001-ல் த.மா.கா. தலைமையில் அமையும் காமராஜர் ஆட்சியில் தலித் இனத்தைச் சேர்ந்த ஒருவர் முதல்வராக பொறுப்பேற்க வழிவகை செய்யவேண்டும்' எனக் குறிப்பிட்டார்.

# பிரதமர் பதவிக்கு வாஜ்பாயே சிறந்தவர்-சோனியா அல்ல!

## - பாபர் மசூதி இயக்க தலைவர்

பாரதிய ஜனதா கட்சி இந்துத்துவ கொள்கையை கைவிட்டதால் முஸ்லிம்களின் மனதில் இருந்த அச்ச உணர்வை வாஜ்பாய் நீக்கிவிட்டார். இதனால் பிரதமர் பதவிக்கு வாஜ்பாய் சிறந்த வேட்பாளர் ஆவார் என்று பாபர் மசூதி இயக்கத் தலைவர் தெரிவித்தார்.

பாபர் மசூதி இயக்கத் தலைவர் ஜாவித் ஹபீர் டெல்லியில் நிருபர்களிடம் கூறியதாவது:

தற்போது உள்ள சூழ்நிலையில் இந்தியாவின் பிரதமர் பதவிக்கு வாஜ்பாய் சிறந்த வேட்பாளர் ஆவார். அவரது மதச்சார்பற்ற தன்மை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டதுமாகும்.

நான் புதிதாக துவக்கிய பாரதி மஜ்லிஸ் என்ற கட்சியானது லக்னோ பாராளுமன்ற தொகுதியில் போட்டியிடும் வாஜ்பாயை ஆதரித்து பிரசாரம் செய்யும்.

பாகிஸ்தானுடன் முதல்முறையாக நடந்த சண்டையில் இந்தியா பெருமளவு முஸ்லிம்களை கைது செய்யவில்லை. கடந்த 13 மாத கால பா.ஜ. ஆட்சியின் போது இந்துத்துவ கொள்கையை வாஜ்பாய் கைவிட்டார். இதனால் பாரதிய ஜனதா கட்சியில் முஸ்லிம்கள் மோசமாக நடத்தப்படுவார்கள் என்ற அச்சம் முஸ்லீம்களிடம் இருந்து நீங்க உதவியது.

அலிகார் முஸ்லிம் பல்கலைக் கழகத்தில் சிறுபான்மை பிரிவு மாணவர்கள் சங்கம் அமைக்கவும், 'வந்தே மாதரம்' பாடலை பாட மேற்கொண்ட முயற்சியை வாபஸ் பெறவும் வாஜ்பாய் எடுத்த நடவடிக்கைகள் பாராட்டத்தக்கது. குஜராத்தில் அண்மையில் நடந்த கலவரத்திற்குப் பிறகு அதில் சம்பந்தப்பட்ட



விஸ்வ இந்து பரிஷத் தொண்டர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் வாஜ்பாய் உத்தரவு பிறப்பித்தார்.

இந்த தேர்தலில் எந்த அரசியல் அணியையும் தனது கட்சி ஆதரிக்காது. ஆனால் முஸ்லிம்களிடம் எப்படி நடந்துகொள்கிறார்கள் என்ற அடிப்படையில் வேட்பாளர்களை ஆதரிப்போம்.

தனது கட்சி மூத்த காங்கிரஸ் தலைவர் மாதவராவ் சிந்தியா, முன்னாள் பிரதமர் சந்திரசேகர் ஆகியோரையும் ஆதரிக்கும்.

சோனியா காந்தி ஒரு சிறந்த தலைவராக இருக்கலாம். ஆனால் நிச்சயமாக ஒரு சிறந்த பிரதமராக இருக்க முடியாது. என அவர் கூறினார்.

# தாமரைக்கனி மீது ஜெயலலிதா வழக்கு தாக்கல்

அ.தி.மு.க. வில் இருந்து சமீபத்தில் நீக்கப்பட்ட தாமரைக் கனி மீது அக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜெயலலிதா அவதூறு வழக்கு தொடர்ந்துள்ளார். சென்னை எழும்பூரில் உள்ள தலைமைப் பெருநகர குற்றவியல் நீதிமன்றத்தில் இது தொடர்பாக அவர் செவ்வாய்க்கிழமை மனு தாக்கல் செய்தார்.

'எனது பெயருக்கும் புகழுக்கும் களங்கம் விளைவிக்கும் வகையில் கட்சியில் இருந்து நீக்கப்பட்ட தாமரைக்கனி பேசியுள்ளதாக பத்திரிகைகளில் செய்தி வெளியாகி உள்ளது. தேர்தல் டிக்கெட் கொடுக்க வேட்பாளர்களிடம் பணம் வாங்கியதாக அவர் கூறியுள்ளார். தேர்தல் நேரத்தில் என் புகழைக் குலைக்கும் நோக்கத்தோடு மக்களைத் திசை திருப்ப அவர் இவ்வாறு கூறியுள்ளார். தாமரைக் கனி கூறியவை அனைத்தும் தவறானவை; இட்டுக்கட்டப்பட்டவை. ஒரு சமூகத்தின் பெயரைக் குறிப்பிட்டு அச் சமூகத்துக்கு நான் எதிரானவர் என்பது போன்ற



தோற்றத்தை ஏற்படுத்த முயன்றுள்ளார்' என அம் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இம் மனு மீதான விசாரணை எதிர் வரும் 31-ம் திகதி நடைபெறும்.




# தேர்தல் களத்தில் நடிகைகள்

ஆந்திர மாநிலத்தில் பாராளுமன்றத் தேர்தலோடு சட்டமன்றத் தேர்தலும் நடைபெறுகிறது. தேர்தல் களத்தில் முக்கிய அரசியல் புள்ளிகள் ம்றறும் நடிகைகள் குதித்துள்ளனர். இதனால் ஆந்திர தேர்தல் களத்தில் தற்போது அனல் பறக்கிறது.

இம்மாநிலத்தில் மூன்று முன்னாள் முதல்வர்கள், பாராளுமன்ற சபாநாயகர் பாலயோகி, முன்னாள் மத்திய அமைச்சர்கள், ஓய்வு பெற்ற அரசு அதிகாரிகள் மற்றும் திரைப்பட நட்சத்திரங்களும் தேர்தல் களத்தில் குதித்து மக்களின் தீர்ப்பை எதிர்நோக்குகிறார்கள். மூத்த காங்கிரஸ் தலைவர்கள் என்ற வரிசையில் மூன்று முன்னாள் முதல்வர்கள் இத்தேர்தலில் போட்டியிடுகிறார்கள். அதாவது விஜயபாஸ்கர ரெட்டி, ஜனார்த்தன்ரெட்டி மற்றும் பாஸ்கரராவ் ஆகியோர் காங்கிரஸ் சார்பில் நிறுத்தப்பட்டுள்ள மூத்த தலைவர்கள் ஆவார். இவர்களில் இந்திய அரசியலில் மிக அதிகமான வயதைக் கொண்டவர் என்ற நற்பெயரை தட்டிச் செல்பவர் விஜயபாஸ்கர ரெட்டி இவருக்கு வயது 80. இவர் கர்னூல் பாராளுமன்ற தொகுதியில் இருந்து 6-வது முறையாக போட்டியிடுகிறார்.

இந்தி திரையுலகில் கொடிகட்டிப் பறந்த பிரபல நடிகை ஜெயப்பிரதா ஜெயபால் ரெட்டியை எதிர்த்து போட்டியிடுகிறார். நடிகை ஜெயப்பிரதா தற்போது ராஜ்யசபை உறுப்பினராக உள்ளார். தெலுங்கு தேசம் கட்சி சார்பில் இவர் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார். இவ்வாறு ஆந்திர தேர்தல் களத்தை அரசியல்வாதிகளும், நடிகைகளும் கலக்கிக்கொண்டிருக்கிறார்கள். தேர்தல் முடிவு எப்படி இருக்கும் என்பதை பொறுத்து இருந்துதான் பார்க்கவேண்டும்.

# ஜெயலலிதா விழுப்புரம் வராதது ஏன்?

அதி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா காங்கிரசுடன் கூட்டு சேர்ந்ததும் அந்த கட்சிக்கு தமிழ்நாட்டில் 11 தொகுதிகளை ஒதுக்கியதும் தெரிந்ததே. காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களை அறிவிக்கும் முன்பே தேர்தல் பிரச்சாரம் கிளம்பி சில தொகுதிகளில் காங்கிரஸ் வேட்பாளர்களை இன்னார்தான் என்று சொல்லி ஜெயலலிதா பிரச்சாரம் செய்தார். இது காங்கிரஸ் தலைமைக்கு எரிச்சலூட்டியது. மேலும் தேர்தல் பிரச்சாரத்தில் காங்கிரஸ்தான் ஆட்சி அமைக்கும் என்றோ, சோனியா தான் பிரதமர் என்றோ அவர் சொல்லவில்லை. நிலையான ஆட்சி அமைய அ.தி.மு.க.வுக்கு ஓட்டு போடுங்கள் என்று கூறி விட்டு பிரதமரையும் பா.ஜனதாவையும் கடுமையாக விமர்சித்தார். இதுவும் காங்கிரஸ் வட்டாரத்தில் அதிருப்தியை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் சோனியா காந்தி கடந்த ஞாயிற்றுக்கிழமை விழுப்புரம் வந்தார். அங்கு சோனியாவும் ஜெயலலிதாவும் ஒரே மேடையில் பேசுவார்கள் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் சோனியா வந்து அரை மணி நேரம் காத்துக்கிடந்ததும் ஜெயலலிதா விழுப்புரம் வரவே இல்லை. திட்டமிட்டே சோனியாவைக் காக்க வைத்துவிட்டு, விழுப்புரம் செல்லாமல் ஜெயலலிதா புறக்கணித்துவிட்டார் என்று கூறப்பட்டது.

இதற்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. விழுப்புரம் கூட்டத்தில் சிறப்பு பேச்சாளராக யார் கடைசியில் பேசுவது என்று இருவருக்கும் பிரச்சினை எழுந்தது. இந்த கௌரவப் பிரச்சினையால்தான் ஜெயலலிதா விழுப்புரம் செல்லவில்லை என்பது ஒரு காரணம். அடுத்ததாக ஜெயலலிதா ஊழல் வழக்குகள் பற்றி முன்னாள் மத்திய மந்திரி மன்மோகன்சிங் கூறிய கருத்துக்களும் ஆத்திரத்தை ஏற்படுத்தியதால் ஜெயலலிதா விழுப்புரம் போகவில்லை என்பதும் ஒரு காரணமாகத் தெரிவிக்கப்பட்டது.

# மரியாதை குறைவாக நடந்துகொண்டார்

## - காங்கிரஸ் பிரமுகர் -

கடந்த ஞாயிறன்று சோனியா பேசிய விழுப்புரம் கூட்டத்துக்கு வராததன் மூலம் ஜெயலலிதா மரியாதைக் குறைவாக நடந்து கொண்டுள்ளார் என்று தமிழ் நாட்டுக்கான காங்கிரஸ் பார்வையாளர் லலித் மோகன் கூறினார். சென்னையில் அவர் நிருபர்களிடம் பேசுகையிலேயே இவ்வாறு கூறினார்.


சோனியா தேசிய அளவிலான தலைவர். ஜெயலலிதா தாம் தேசிய அளவிலான தலைவர் அல்ல என்பதை உணரவேண்டும். சக அரசியல் தலைவர்களையும் மதிக்கவேண்டும் என்பதை ஜெயலலிதா இனியாவது கற்றுக் கொள்ள வேண்டும் என்றும் லலித் மோகன் கூறினார். இரு தலைவர்களும் கூட்டாகப் பிரச்சாரம் செய்ய வாய்ப்பு உள்ளதா என்று கேட்டதற்கு அவர் பதிலளிக்கையில், சென்னை வந்த சோனியாவை விமான நிலையத்துக்கு வந்து ஜெயலலிதா சந்தித்திருக்கவேண்டும் என்றார். அப்படிச்செய்யாத நிலையில் கூட்டுப் பிரச்சாரத்துக்கு வாய்ப்பிருப்பதாகத் தாம் கருதவில்லை என்று அவர் கூறினார்.

# இலங்கையில் இந்தியப் படையினர் அநியாயமாக பலிகொடுக்கப்பட்டனர்

## - வாஜ்பாய்

கார்கில் சண்டையில் இந்திய வீரர்களை பாரதிய ஜனதா அநியாயமாக பலி கொடுத்தது என்று குற்றஞ்சாட்டும் காங்கிரசார் இலங்கையில் இந்திய வீரர்களை பலியிட்டது ஏன்? என்று பிரதமர் வாஜ்பாய் நேற்று காங்கிரஸ்காரரை நோக்கி கேள்வி எழுப்பியுள்ளார்.

பிரதமர் வாஜ்பாய் நேற்று குஜராத் மாநிலத்தில் தேர்தல் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். கபாத்வஞ்ச் என்ற ஊரில் தேர்தல் பிரசார கூட்டமொன்றில் பேசிய வாஜ்பாய், காங்கிரசை கடுமையாக குற்றம்சாட்டி பேசினார். 'கார்கில் போரில் இந்திய வீரர்களை பாரதிய ஜனதா அரசு பலிகொடுத்துவிட்டது என்று குற்றம்சாட்டும் காங்கிரசார், இலங்கை பிரச்சினையில் தேவை இல்லாமல் நுழைந்து அங்கு நமது வீரர்களை பலியாக்கியது ஏன்? என்ற கேள்வி எழுப்பினார்.



கார்கில் போரிலாவது இந்திய மண்ணுக்காக இந்திய வீரர்கள் போரிட்டு வெற்றி பெற்றார்கள். ஆனால் இலங்கையிலோ தேவையில்லாமல் இந்திய வீரர்கள் காங்கிரசினால் பலியாக்கப்பட்டனர். அந்த சண்டையில் இந்தியா தோல்வியை சந்தித்ததுதான் மிச்சம் என்று கடுமையாக காங்கிரசை சாடினார் வாஜ்பாய்.

தொடர்ந்து பேசிய வாஜ்பாய் கார்கில் தோல்விக்கு பிறகு கூட புத்தி வராமல் மீண்டும் பாகிஸ்தான் இந்தியாவிற்குள் தீவிரவாதிகளை ஊடுருவச் செய்கிறது. இதற்குத் தக்க பதிலடி கிடைக்கும் என்று பாகிஸ்தானை எச்சரித்தார். காஷ்மீர் பிரச்சினையில் மௌனம் சாதித்துவிட்டு இப்போது பாக் அந்த பிரச்சினையை எழுப்புவது ஏன் என்றும் மேலும் வினா எழுப்பினார் வாஜ்பாய்.

# உலகத் தமிழர்களுக்கான அமைப்பும் விதிகளும் உருவாக்க வேண்டும்

## பழ.நெடுமாறன் வேண்டுகோள்!

(28-08-99)

உலகத் தமிழர்களுக்கான அமைப்பு, நிதியம், கொடி, கீதம், தேசிய உடை உருவாக்கப்பட வேண்டும் என பழ.நெடுமாறன் கோரிக்கை விடுத்துள்ளார். சென்னையில் கடந்த வெள்ளிக்கிமை தொடங்கிய உலகத் தமிழ் பண்பாட்டு இயக்க வெள்ளி விழாவில், தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழநெடுமாறன் தொடக்கவுரை ஆற்றினார். அப்போது அவர் தெரிவித்தாவது:-

ஐக்கிய நாடுகள் சபையில் இடம்பெறத்தக்க அளவிற்கு உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் வளர்ந்துள்ளது ஒரு வரலாற்றுச் சாதனை. வணிகத்திற்காகவும் பண்பாட்டை வளர்க்கவும் தமிழர்கள் உலகம் முழுவதும் சென்றார்கள். நம் தாயகத் தமிழ் வளமானதாக மட்டுமின்றி வலிமையானதாகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் வெளிநாட்டு தமிழர்களுக்கு உதவமுடியும். தாய்த் தமிழ் நாட்டினர் குரல் கொடுக்காததால் பலநாட்டுத் தமிழர்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. மும்பை, டெல்லி, கல்கத்தா, ஆமதாபாத் போன்ற நகரங்களில் தமிழர்கள் எடுபிடிகளாகத்தான் வேலை பார்க்கின்றனர். உலகத் தமிழர்களுக்கான அமைப்பு, கொடி, கீதம், தேசிய உடை உருவாக்கப்பட வேண்டும் என்றார் அவர்.

சென்னையில் வாணி மகாலில் தொடங்கி இம்மாநாட்டில் சாலினி இளந்திரையன் கொடியேற்றினார். மாநாட்டு குழுச் செயலாளர் இளம்பிறை ரஹ்மான் அறிமுக உரையாற்றினார். மாநாட்டிற்கு தலைமை வகித்த இர.ந.வீரப்பனார் பேசியதாவது:-

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் தமிழையும் தமிழரையும் வாழவைக்கும் நோக்கத்து



டன் 1974-ல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது. நம் நாட்டில் மட்டும் 11 கிளைகள் உள்ளன. அரசியல், மதம் கலக்காத இவ்வியக்கத்திற்கு வேரும் நீரும் தமிழ்தான். உலகத் தமிழரிடையே நிறைய முரண்பாடுகள் காணப்படுகின்றன. தென்னாபிரிக்காவில் உள்ள 6 இலட்சம் தமிழர்களில் 6 பேர் மட்டுமே தமிழ் படிக்கின்றனர். பள்ளிப் பாடத் திட்டத்தில் தமிழை அந்நாட்டு அரசு நீக்கிவிட்ட போதிலும் அங்குள்ள தமிழர்கள் அதைக் கண்டுகொள்ளவில்லை. மேலும் பல நாடுகளில் தமிழர்கள் தமிழை மறந்துள்ளனர் இவை களையப்பட வேண்டும் என்றார் வீரப்பனார்.

# கூட்டணியில் ஒரு அங்கம் பா.ஜ.க.

## - வைகோ

தேர்தல் பிரச்சாரக்கூட்டம் திண்டிவனம் பகுதியில் நடந்த போது ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் உரையாற்றினார். அப்போது,

'எனது அன்பிற்குரிய இஸ்லாமிய சமுதாயத்து சகோதரர்களே, உங்கள் நலனில் கலைஞரைவிட -ராமதாசை விட- வைகோவை விட அக்கறை உள்ளவர்கள் யார் இருக்க முடியும் என்று நான் கேட்கிறேன். இங்கே அமைந்திருக்கக்கூடிய கூட்டணி



யில் பாரதிய ஜனதா கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம், உள்ளிட்ட பல கட்சிகள் அடங்கிய ஒரு கூட்டணி. அந்த கூட்டணியில் பாரதிய ஜனதா கட்சி ஒரு அங்கம். தலைமையேற்பவர் வாஜ்பாய். மதத்தின் பெயரால் இன்றைக்கு அரசியலை நடத்திக் கொண்டிருக்கும் சோனியாவுக்கு சொல்லுவேன். பாபர் மசூதியை தகர்ப்பதற்கு பூமி பூஜை நடத்துவதற்கு அனுமதி கொடுத்தவர் யார்? அந்த அரசு யாருடைய அரசு? 128 கம்பெனிகள் கை கட்டி வேடிக்கை பார்த்ததே- மசூதி உடைத்து நொறுக்கப்பட்டபோது-தரைமட்டமாக்கப்பட்டபோது உங்களுக்கு அரசு ஒரு கேடா? கேட்கவில்லையா நான்? மகாத்மாவின் மார்பிலே குண்டுகள் மூன்று பாய்ந்தபோது ரத்தம் குபுகுபுவென்று கொட்டியதே. அதைவிட கொடுமையான காட்சியல்லவா மசூதி இடிக்கப்பட்ட நிகழ்ச்சி என்று ராஜ்சபாவிலே பேசியவன் நான். லோக்சபாவில் மசூதி உடைக்கப்பட்டதற்கு கண்டனம் தெரிவிக்கிறேன். ஆறாத் துயரத்தைத் தெரிவிக்கிறேன்.

என்று சொன்னவர் வாஜ்பாய். இது உண்மை. பலர் புரிந்து கொள்வதில்லை. கரசேவைக்கு அனுமதி கொடுக்கவேண்டும். இல்லையேல் நான் வெளிநடப்பு செய்வேன் என்று சொன்னவர் ஜெயலலிதா. கரசேவைக்கு செங்கல்லையும் ஆட்களையும் அனுப்பி வைத்தவர். ஆகவே சிறுபான்மை மக்களைப் பற்றி பேசுவதற்கு அவருக்கு அருகதை கிடையாது.

### விருது

காங்கிரஸ் மத்தியில் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது ஆண்டுகளுக்கு சுமார் 40 ஆயிரம் பேர் மட்டுமே புனித ஹஜ் பயணத்திற்கு அனுமதிக்கப்பட்டனர். ஆனால் வாஜ்பாய் ஆட்சிப் பொறுப்பில் இருந்த 13 மாதங்களில் சுமார் 1 இலட்சத்து 30 ஆயிரம் பேருக்கு புனித ஹஜ் பயணத்திற்கான அனுமதி அளிக்கப்பட்டது. மேலும் காங்கிரஸ் கட்சி மத்தியில் ஆட்சிப் பொறுப்பில் இருந்தவரை இந்தியாவின் உயர்ந்த விருதான பாரத ரத்னா விருது இஸ்லாமியருக்கு வழங்கப்படவில்லை. வாஜ்பாய் இந்திய விஞ்ஞானி அப்துல் கலாமுக்கு பாரத ரத்னா விருது வழங்கி சிறப்பித்து மகிழ்ந்தார்.

தி.மு.க.விலிருந்து நாம் தனிக் குடித்தனம்தான் போனோமே தவிர தந்தை வீட்டை எவனாவது படையெடுத்து வந்து தாக்கிவிடலாம் என்று கருதினால் அதை தகர்க்கிற விதத்திலே ம.தி.மு.க. வந்து நிற்கும். கலைஞரை கண்ணனாகவும் வைகோவை அர்ச்சுனனாகவும் சித்தரித்து ஒரு ஓவியம் வரைந்திருந்தார்கள். நான் சொன்னேன் அர்ச்சுனனுக்கு ஏற்பட்ட நடுக்கம் வைகோவுக்கு ஏற்படாது. கண்ணனுக்கு வேலையளித்ததுபோல கலைஞருக்கு நான் அப்படிப்பட்ட வேலையளிக்க மாட்டேன். கலைஞர் கண் ஜாடை காட்டினால் போதும். இந்த களத்திலே எதிரிகள் எங்கே என்று எங்களுடைய கணைகள் தேடும் என்று வைகோ தனது உரையில் தெரிவித்துள்ளார்.

# கூட்டணி அரசமைக்க காங்கிரஸ் தயார்

## சோனியா அறிவிப்பு!

(27-08-99)

மக்களவைத் தேர்லில் எக்கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலை ஏற்பட்டால் கூட்டணி அரசமைப்பது குறித்து



காங்கிரஸ் பரிசீலிக்கும் என்று அதன் தலைவர் சோனியா காந்தி முதல்முறையாக அறிவித்துள்ளார். டெல்லியிலிருந்து தான் போட்டியிடும் பெல்லாரி தொகுதிக்கு செல்லும் வழியில் விமானத்தில் வைத்து பத்திரிகையாளரிடம் சோனியா இவ்வாறு தெரிவித்தார்.

சோனியாவின் இந்த அறிவிப்பு காங்கிரசின் தனிப் பெரும்பான்மை முழக்கத்திற்கு பின்னடைவாக இருக்கும் என்று அரசியல் நோக்குனர்கள் கருதுகின்றனர். அதே நேரத்தில் அதிக தொகுதிகளை கைப்பற்றி காங்கிரஸ் மத்தியில் தனிக்கட்சி ஆட்சி அமைக்கும் என்று நம்பிக்கையையும் அவர் தெரிவித்தார். பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்வீர்களா என பத்திரிகையாளர் கேட்டதற்கு கருத்து தெரிவிக்க அவர் மறுத்துவிட்டார். மத்தியில் பாஜக-வை ஆட்சிக்கு வராமல் தடுக்க, சோனியா அல்லாத காங்கிரஸ் அரசமைக்க ஆதரவளிக்க தயார் என்று தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார் அறிவித்துள்ளது குறித்து கேட்டதற்கு அவரது அறிவிப்பு மனப்பூர்வமானது அல்ல என்று கருத்து கூறினார் சோனியா.

ஆனால் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான பிரணாப் முகர்ஜி இந்திய தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் 'தேர்தலையடுத்து ஊசலாடும் மக்களவை அமைந்தால் கூட்டணி அரசை காங்கிரஸ் கட்சி அமைக்காது' எனக் கூறினார். அவர் மேலும் கூறுகையில் எங்கள் கட்சிக்கு பெரும்பான்மை கிடைக்காவிட்டால் பிற கட்சிகளின் பெரும்பான்மை ஆதரவுடன் அரசு அமைப்போம். ஆனால் பிற கட்சிகளுடன் ஆட்சியை பகிர்ந்து கொள்ள மாட்டோம். கூட்டணி அரசு அமைக்க மாட்டோம் என்பதைத் தேர்தல் அறிக்கையிலேயே குறிப்பிட்டுள்ளோம் என்றார் அவர்.

# ஏரியில் பயணிகள் பேருந்து மூழ்கியது 80 பேர் மரணம்!

(27-08-99)

இந்தியாவில் கர்நாடக மாநிலத்தின் ஏரியொன்றில் பேருந்து கவிழ்ந்ததில் 80-க்கும் மேற்பட்டோர் நீரில் மூழ்கி இறந்தனர். கோயில் திருவிழாவுக்கு சென்ற பேருந்தில் தங்கள் கிராமங்களுக்கு திரும்பிக் கொண்டு இருந்தவர்களுக்கு இந்த துயர முடிவு ஏற்பட்டது. இதுவரை 41 சடலங்கள் மூழ்கிய பேருந்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளன. பேருந்தில் மொத்தம் எவ்வளவு பேர் இருந்தார்கள் என்று உறுதியாக தெரியவில்லை.

ஒவ்வொரு பவுர்ணமி அன்றும் சக்தி தேவதை பூசைக்காக ஆயிரக்கணக்கான பக்தர்கள் உச்சங்கிதுர்கா செல்வது வழக்கம். நேற்று பவுர்ணமி ஆதலால் வழக்கம்போல் ஏராளமான கிராம மக்கள் அங்கு சென்றிருந்தனர். இந்த பக்தர்களை பேருந்தில் ஆடுமாடுகளைப் போல் அடைத்துக்கொண்டு திரும்பும் வழியிலேயே இவ்விபத்து நிகழ்ந்தது.


உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கலகரமான நிகழ்ச்சிகள், மற்றும் மேடை நிகழ்ச்சிகள் அனைத்திலும் இசைமழையில் நனைந்திட ஐரோப்பா புகழ்

* ஈழநிலா *

தொடர்புகளுக்கு:
இயக்குநர் எஸ்.எஸ். தில்லைச்சிவம்
Tel: 01 40 37 56 69




# கசகஸ்தான் மீது தடைகள் கொண்டுவர அமெரிக்கா யோசனை

(28.08.99)

சோவியத் யூனியனின் முன்னாள் அங்கத்துவ நாடான கசகஸ்தான் மேல் பொருளாதாரத் தடைகளைக் கொண்டு வர அமெரிக்கா யோசனை செய்து வருவதாக சர்வதேச செய்தி நிறுவனமொன்று அறிவித்துள்ளது.

கசகஸ்தான் அண்மையில் வடகொரியாவிற்கு 30 முதல் 40 வரையான மிக் 21 ரக போர் விமானங்களை விற்க இணங்கியது. 1960ம் ஆண்டில் இவ் விமானங்கள் தயாரிக்கப்பட்டிருந்தாலும் இன்றுவரை யுத்தப் பிராந்தியத்தில் அவை செயற்பட்டுவருகின்றன. கசகஸ்தானின் இந்த விமான விற்பனை முடிவை மீள் பரிசீலனை செய்யும்படி தென்கொரியாவும், ஜப்பானும் இம்மாதம் அந்நாட்டினைக் கோரின. ஆனால் இன்று வரை கசகஸ்தான் தரப்பிலிருந்து எந்தவித பதிலும் கிடைக்கவில்லை. இதற்கிடையே இரு தரப்பினருக்குமிடையே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தப்படி எண்ணிக்கை குறிப்பிட முடியாத விமானங்களின் தொகை ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதாயும் தற்போது புதிய விநியோகங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாயும் கசகஸ்தான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது இவ்வருடத்தின் இரண்டாவது விமான விற்பனை எனக் கூறப்படுகிறது. அண்மையில் கசகஸ்தானின் விமானமொன்றில் 6 மிக் 21 ரக விமானங்கள் பொருத்தப்படாத நிலையில் செக் குடியரசுக்கூடாக வடகொரியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இரண்டாவது புதிய விமான விற்பனை விவகாரம் தற்போது அமெரிக்காவின் ஆத்திரத்தையும் கிளறிவிட்டுள்ளது.

வடகொரியா புதிய ஏவுகணைப் பரிசோதனை ஒன்றை மேற்கொள்ளப்போவதாக அறிவித்துள்ள இவ்வேளையில் புதிய விமான விற்பனை விவகாரம் கிளம்பியுள்ளது. கிளின்டன் அரசின் அதிகாரிகள் இவ்விவகாரத்தின்பின் பேசியபோது கசகஸ்தான் அரசிற்கெதிராக பொருளாதாரத் தடைகள் கொண்டுவரப்படலாம் என்றும், அந்நாடு இவ்வருடம் 75 மில்லியன் அமெரிக்க உதவித் தொகையைப் பெற்றுக்கொள்ள இருந்தது. ஆனால் இந்த விமான விற்பனையால் இவ் உதவி வழங்கும் நடவடிக்கைகூட பாதிக்கப்படலாம் எனக் கூறியுள்ளனர்.

ரஷ்யாவின் மூன்று நிறுவனங்கள், கடந்த ஏப்ரல் மாதம் சிரியாவுக்கு விமான எதிர்ப்பு ஆயுதங்களை விற்பனை செய்ததால் அந்நிறுவனங்கள் ஒரு வருடத்திற்கு அமெரிக்காவுடன் வர்த்தக ரீதியான தொடர்புகளை வைத்துக்கொள்வது தடைசெய்யப்பட்டுள்ளது என அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

# ரஷ்யப் பிரதமர் டகஸ்தானுக்கு பயணம்

(28.08.99)

ரஷ்யப் பிரதமர் விளாடிமீர் புட்ரீன் கடந்த வெள்ளிக்கிழமை டகஸ்தானுக்கு விஜயம் செய்து அப் ப்குதியின் புதிய பாதுகாப்பு நிலமைகள் பற்றி ஆராய்ந்தார். யாரும் எதிர்பார்த்திராதவேளை ஆச்சரியப்படும் விதத்தில் அண்மையில் யுத்தம் நடந்துமுடிந்த ரஷ்யாவின் தன்னாட்சிக் குடியரசான டகஸ்தானுக்கு ரஷ்யப் பிரதமர் விஜயம் செய்து அங்கு மக்கள் மத்தியில் உரையாற்றினார்.

செச்சினியாவுடன் எல்லைகளைக்கொண்டு மலைகளுடனான குடியரசாக டகஸ்தான் உள்ளது. ரஷ்யக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இந்நாட்டினை இஸ்லாமியக் குடியரசாக பிரகடனம் செய்த செச்சேனிய ஆதரவுடனான இஸ்லாமியப் போராளிகள், ரஷ்யப் படைகள் மீது கடந்தவாரம் தாக்குதல் நடத்தினர். சுமார் 2000 இற்கும் மேற்பட்ட இஸ்லாமியப் போராளிகள் எல்லையுடனான பல கிராமங்களைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர்.

இதனையடுத்து டகஸ்தானின் தொண்டர் படையினரும் ரஷ்ய கூட்டமைப்பின் படையணிகளும் இணைந்து இஸ்லாமிய போராளிகளுக்கெதிரான தாக்குதல்களை மேற்கொண்டன. இறுதியில் பலத்த இழப்புக்களுடன் எஞ்சிய போராளிகள் மீண்டும் செச்சினியாவிற்கு விலகிக்கொண்டனர்.

ரஷ்யப் படைகளினால் மீட்கப்பட்ட பிராந்தியங்களுக்கும் புதிய பிரதமர் விஜயம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# யேமனில் குண்டுவெடிப்பு 10 பேர் பலி

யேமன் நாட்டின் தலைநகர் சானாவில் கடந்த வெள்ளியன்று பாரிய குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது. தலைநகரின் வெளிநாட்டு இராஜ தந்திர வட்டாரத்தில் நடந்த இக் கார் குண்டுவெடிப்பின் காரணமாக நான்கு பேர்கள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். அத்துடன் ஏராளமானோர் படுகாயங்களுக்கு உள்ளானார்கள். இறந்தவர்களின் தொகை 10 இற்கும் அதிகமாகும் என்று அந்நாட்டின் பாதுகாப்புத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் இக் குண்டு வெடிப்பினால் துருக்கித்தூதரகமும், பிரெஞ்சு தூதுவரின் இல்லமும் சேதமடைந்துள்ளன.

இவை தவிர இப்பகுதியில் அமைந்திருக்கும் வேறு பல தூதரக கட்டடங்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் இங்கு அமைந்திருந்த பல்பொருள் அங்காடியொன்று தீயினால் நாசமாகியுமுள்ளது.


இலாபநோக்கமற்ற 13வது வருட சேவையில்

## பாரிஸ் தமிழர் கல்வி நிலையம்

**Centre Parisien d'Education pour les Tamouls**

பிரெஞ்சு அரசால் அங்கீகரிக்கப்பட்டது.
N° d'Ordre 86 - 3394

கல்வித்துறையில் நாம் முன்னணியில் திகழ்வது தற்செயலானதல்ல.

* இலாப நோக்கமற்ற பொது ஸ்தாபனம்
* 13 வருட நிறைந்த கல்விச் சேவை
* ஆற்றல் அனுபவமுள்ள ஆசிரியர்கள்
* காலத்திற்கேற்ப மாற்றி அமைக்கப்பட்ட பாடத்திட்டங்கள்

ஏற்கனவே கல்வி கற்ற பல்லாயிரம் மாணவர்களுடன் நீங்களும் ஏன் பயன்பெறக் கூடாது?
குறுகிய காலத்தில் உங்களைத் தயார்செய்ய ஆரம்பமாகிறது

**1999 - 2000 ஆண்டு காலப் பகுதிக்கான வகுப்புகள்**

**புதிய பிரெஞ்சு வகுப்புகள்**

**ஆரம்ப வகுப்பு**
புதிதாக இங்கு வந்தவர்களுக்கானது.
அடிப்படை உச்சரிப்பு உரையாடல் இலக்கண வகுப்பு
காலம்: 4.9.99
பி.ப. 4.00 - 5.30

ஆசிரியர் கஜன்

**உயர்தர வகுப்பு**
இங்கு பிரெஞ்சு பாடசாலையில் கல்விகற்பவர்களுக்கும், ஏற்கனவே வேறு பாடசாலைகளிலும் பிரெஞ்சு கற்றவர்களுக்குமான உயர்தரவகுப்பு.
(உயர் இலக்கணக் கட்டமைப்பு)
காலம்:- 4.9.99 பி.ப. 2.30 - 4.00

**புதிய ஆங்கில வகுப்புகள்**
★ பிரெஞ்சு பாடசாலைகளில் கற்பவர்களுக்கான 6ème முதல் Bac வரையான ஆங்கிலப் பாடத்திட்டங்கள் பூர்த்திசெய்யப்படும்.
★ பிரெஞ்சு - தமிழ் மொழி மூலமான அடிப்படை இலக்கண விளக்கங்கள்
★ கடிதம் எழுதும் முறைகள் உச்சரிப்பு உரையாடல் அடிப்படை, உயர்தர இலக்கண வகுப்புகள்.
காலம்: 4.9.99 பி.ப. 2.30 - 4.00 (ஆசிரியர் அமல்)
காலம்: பி.ப. 4.00 - 5.30 (ஆசிரியர் றொனி)

**புதிய கம்பியூட்டர் வகுப்புகள்**
நேரம்: பி.ப. 3.00 - 5.00 (ஆசிரியர் சோபன்)
- 2000ஆண்டிற்கான நவீன கம்பியூட்டர் யுகத்திற்கு நீங்கள் இதுவரை தயாராகவில்லையா?
- சர்வதேச வாழ் தமிழ் உறவுகளுடன் Internet (இணைவலை) மூலம் தொடர்பு கொள்ள விரும்பவில்லையா?

இதோ இலாப நோக்கமற்ற கல்விநிலையத்தால் அறிமுகப்படுத்தப்படும் புதிய திட்டம்.
அனைவரிற்குமான கம்பியூட்டர் கல்வி - Informatique pour tous
- தேவைக்கு வேண்டிய கம்பியூட்டர் வாங்குவதற்கு ஆலோசனையும் அறிவுரையும்.

**தைவல், கேக் அலங்கார வகுப்புகள்**
இல்லத்தரசிகளே, பெற்றோர்களே, பாடசாலை மாணவிகளே!
இன்றைய உங்கள் முயற்சியில் நாளைய வெற்றி ஆரம்பமாகிறது
தகமை ஆற்றல் அனுபவமுள்ள ஆசிரியர்களால் தையல் பயிற்சி வகுப்புகள்

**தையல் வகுப்பு** Coupe, Couture
காலம்: 05.09.1999 (ஞாயிறு)
நேரம்: பி.ப. 1.00 - 4.00

**கேக் அலங்கார வகுப்பு (சனி)**
நவீன உத்திகளைக் கொண்டு கூடிய அலங்காரம்
காலம்: 04.09.1999 நேரம் 1.00 - 4.00

**தமிழ் பெற்றோர்களின் கவனத்திற்கு**
மொழியின் வீழ்ச்சி அவ்வினத்தின் வீழ்ச்சிக்கு வழிகோலும்
இங்கு வளரும் எமது சிறார்களுக்கான
**தமிழ் மொழி, பரத நாட்டிய, ஆங்கில வகுப்புகள்.**
சிறுவர் கல்விக்கான சிறப்புத்தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள்
சர்வதேச வாழ் தமிழ் சிறார்களுக்காக அமைக்கப்பட்ட பொதுப் பாடத்திட்டம்
பொதுப்பரீட்சை - பேச்சுப்போட்டி

சனி, ஞாயிறுகளில் அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:
**165, Rue de Charonne, 75011 Paris.**
**(M°: Alexandre Dumas *ou* Charonne)**
- நிர்வாகம்

இது விளம்பரமல்ல அறிவித்தல்

Pub.

# குண்டுத் தாக்குதலில் இருந்து தலிபான் தலைவர் உயிர் தப்பினார்

(27.08.99)

ஆப்கானிஸ்தான் ஆட்சியாளர்களான தலிபான் அமைப்பினரின் கோட்டை எனக் கருதப்படும் தென் பகுதி நகரான காண்டகாரில் கடந்த செவ்வாயன்று மிகவும் சக்திவாய்ந்த வாகனக் குண்டொன்று வெடித்தது. இக் குண்டுவெடிப்பு தலிபான்களின் தலைவரான முல்லா முகமட் ஓமாரின் வீட்டிற்கு அருகாமையில் நடாத்தப்பட்டுள்ளது. இதன் போது அவரது மூன்று மெய்ப் பாதுகாவலர் உட்பட 7 பேர் கொல்லப்பட்டனர். அத்துடன் பலர் காயமடைந்தனர்.


செவ்வாய் காலை 10 மணியளவில் தலிபான் தலைவரின் வீட்டிற்கு மிக அருகாமையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த வாகனமொன்றிலிருந்தே குண்டு வெடித்துள்ளது. குண்டுவெடிப்பு நடந்த சமயம் முல்லா முகமட் ஓமார் வீட்டில் இருக்கவில்லை என்றும் கூறிய தலிபான் பேச்சாளர், இச் சம்பவத்திற்கு நிச்சயமாக வெளிநாடொன்றின் தொடர்பு உண்டு எனக் கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் தனது நாட்டின் மேல் ஓசாமா பின் லாடன் விடயத்தில் அமெரிக்காவின் அழுத்தம் மிகவும் அதிகரித்துள்ளது. அமெரிக்கா தாமே ஓசாமா பின் லாடனை பாதுகாத்து வைத்திருப்பதாக குற்றம் சாட்டியுள்ளது. ஆகையால் அமெரிக்காவே இக் குண்டுவெடிப்பின் பின்னணியில் இருக்கலாமென நாம் சந்தேகிக்கிறோம். கடந்த வருடமும் இப்பிராந்தியத்தை நோக்கி அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டிருந்ததென அவர் மேலும் கூறினார்.

ஓசாமா பின் லாடனை அமெரிக்காவிடம் ஒப்படைக்க ஆப்கானிஸ்தான் மறுத்துவருகிறது. அவர் ஆப்கானிஸ்தானின் விருந்தினர் எனக்கூறும் தலிபான்கள் கைதிகளை நாடுகடத்தும் ஒப்பந்தம் எதுவும் அமெரிக்காவுக்கும் ஆப்கானிஸ்தானுக்குமிடையே இல்லையெனக் கூறியுள்ளனர்.

பாகிஸ்தானை மையமாகக் கொண்டியங்கும் மற்றுமோர் அமைப்பும் இக்குண்டுவெடிப்பில் அமெரிக்காவின் தொடர்பு உண்டு எனக் குற்றம்சாட்டியுள்ளது. ஆனால் கடந்த புதனன்று வெள்ளை மாளிகை விடுத்த செய்தியில் இக்குண்டுவெடிப்புடன் அமெரிக்காவிற்குத் தொடர்பில்லை என மறுத்துள்ளது.



கடந்த 22.08.99 அன்று ஹொங்கொங் விமான நிலையத்தில் கடும்மழையின் மத்தியில் தரையிறங்கும்போது சறுக்கி தலைகீழாக தடம்புரண்ட விமானம். ஒரு வாரத்தின் பின்பு மீட்கப்படும்போது...



## பாரிஸ் பேருந்துகளுக்கு ஒரு சீட்டு போதும்

பாரிசிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் சேவையில் ஈடுபடும் 'RATP' யின் பேருந்துகளில் பயணம் செய்ய ஒரு பயணச்சீட்டு மட்டுமே போதுமானது என அதன் நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

எதிர்வரும் 01.11.99 முதல் இம்முறை செயற்பாட்டுக்கு வரும். இதன்படி RATP யின் பேருந்துகளிலும் இதுவரைகாலமும் இருந்துவந்த நடைமுறையான பிராந்திய எண்ணிக்கையிலான பயண சீட்டுமுறை காலாவதியாகின்றது. இதுவரை எத்தனை பிராந்தியங்களுக்கு பயணம் செய்யவேண்டுமோ அதற்கு தேவையான சீட்டுக்களை பயன்படுத்தவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த சலுகை பாரிசில் இருந்து இரண்டு விமான நிலையங்களுக்குச் செல்லும் பேருந்துகள், மற்றும் சில விசேட தடங்களில் பயணம் செய்யும் பேருந்துகள் தவிர்ந்த மற்றெல்லா சேவைகளுக்கும் செல்லுபடியாகும்.

# அமெரிக்க காங்கிரஸ் குழு ஈராக் விஜயம்

(29.08.99)

அமெரிக்க காங்கிரசின் பிரதிநிதிகள் குழுவொன்று ஈராக்கிற்கு விஜயம் செய்துள்ளது. 1991-ம் ஆண்டு ஈராக்கினால் குவைத் ஆக்கிரமிக்கப்பட்டதன் பின் நடந்த யுத்தத்தைத் தொடர்ந்து இருநாடுகளுக்குமிடையிலான உறவுகள் முறிவடைந்தன. இந்நிலையில் யுத்தத்தின் பின்னான முதலாவது குழு இதுவென்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இக் குழுவினரை ஈராக்கிற்குச் செல்லவேண்டாம் என எச்சரித்திருந்தது. ஈராக்கியர் தற்போது அமெரிக்கர்களை விரும்புவதில்லை. அவர்களை ஆபத்தானவர்களாகவே பார்க்கிறார்கள். ஆகையினால் அங்கு செல்வது ஆபத்தானதென இராஜாங்கத் திணைக்களம் எச்சரித்திருந்த போதிலும் இப் பிரதிநிதிகள் குழு ஈராக் தலைநகரை வந்தடைந்தது. அமெரிக்காவினால் ஏற்படுத்தப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளினால் ஈராக்கியர் எவ்வளவு தூரத்திற்கு பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதைக் கண்டறியவும் எந்தவகையில் தற்போதைய சிக்கல்களை தீர்க்கலாம் என்பது குறித்தும் 'இக் குழுவினர் ஆராய்வார்கள். அமெரிக்க கொள்கைகளுக்கான அமைப்பின் ஓர் பிரதிநிதியான பீலிஸ் பெனிஸ் கருத்துத் தெரிவிக்கையில் தமக்கு ஈராக்கியர்களால் எந்தவித அச்சுறுத்தல்களும் ஏற்படவில்லை. ஆனால் அமெரிக்க விமானங்கள் குண்டுவீசுவதால் மட்டுமே தமக்கு பாதிப்புக்கள் ஏற்பட இடமுண்டு என்றார்.

இக் குழுவினர் ஈராக்கின் அரச உயர் மட்டத்தைச் சந்திக்காது என ஏற்கனவே கூறப்பட்டிருந்தபோதிலும் பின்னர் அரச தூதுக்குழு இப் பிரதிநிதிகளை ஞாயிறன்று சந்தித்து பேசியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சுதந்திரத்திற்கான வாக்கெடுப்புக்கள் கிழக்குத் தீமோரில் நடந்தன

(29.08.99)

கிழக்குத் தீமோர் இந்தோனேசியாவிடமிருந்து சுதந்திரம் பெற்றுக்கொள்ள வேண்டுமா? அல்லது சுய நிர்ணய உரிமையுடன் தொடரவேண்டுமா என்ற கேள்விகளுக்கான வாக்கெடுப்பு திங்களன்று இடம்பெற்றது. கிழக்குத் தீமோரின் 450.000 மக்களில் 85% இற்கு அதிகமானோர் இவ்வாக்கெடுப்பில் கலந்துகொண்டனர். 300 வருட கால போர்த்துக்கேய ஆட்சியிலிருந்தும் பின்னர் கால் நூற்றாண்டு கால இந்தோனேசிய ஆட்சியிலிருந்தும், கிழக்குத் தீமோர் முற்றாக விடுதலை பெறுமென அரசியல் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்தனர். கடந்த ஒரு வார காலத்தில் மாத்திரம் சுதந்திரம் வேண்டுபவருக்கும் இந்தோனேசிய ஆதரவாளர்களுக்குமிடையே இடம்பெற்ற மோதல்களில் 10 இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். வாக்கெடுப்பிற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் சகல தரப்பினரும் அழைக்கப்பட்டு வாக்கெடுப்பு அமைதியாக நடக்க உதவவேண்டுமெனக் கோரப்பட்டனர். இதனையடுத்து திங்கள் நடந்த வாக்கெடுப்பு குறிப்பிட்ட ஒரு சில சம்பவங்கள் தவிர பொதுவாக அமைதியாகவே நடந்தது. திங்களன்று மாலை வாக்கெடுப்பு முடிவடைந்தாலும் முடிவுகள் செப்டெம்பர் 7ம் திகதியே வெளியிடப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்குத் தீமோர் 1975-ம் ஆண்டு இந்தோனேசிய படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இன்றுவரை ஏற்பட்ட கலவரங்களில் 2 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். சுகார்ட்டோ இந்தோனேசிய அதிபர் பதவியில் இருந்து வெளியேற்றப்பட்டதன் பின் புதிதாகப் பதவியேற்ற ஹபிபி இந்தோனேசிய மக்கள் விரும்பினால் பிரிந்து போகலாம் என்ற கோட்பாட்டுடன் வாக்கெடுப்பு நடத்த இணங்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இறுதி மூன்று 'மிர்' விண் ஆய்வாளர்களும் பூமிக்குத் திரும்பினர்

(29.08.99)

வானில் வலம் வந்துகொண்டிருக்கும் ரஷ்யாவின் மிர் ஆய்வுக் கலத்தின் இறுதி மூன்று ஆய்வாளர்களும் கடந்த சனியன்று கசகஸ்தானுக்கு பாதுகாப்பாக வந்தடைந்தனர். இந்த இறுதிப் பயணத்துடன் சோவியத்தின் பலத்தின் வெளிப்பாடுகளில் ஒன்றாக இருந்த மிர்ரின் எதிர்காலமும் தீர்மானிக்கப்படவுள்ளது. இக்கலத்தைத் தொடர்ந்து இயங்கவைக்க ரஷ்யாவிடம் போதிய பொருளாதாரம் இல்லையெனச் சொல்லப்படுகிறது. வருடத்திற்கு 250 மில்லியன் டொலர் இதன் இயக்கத்திற்குத் தேவைப்படுகிறது. இப் பணம் வேறு ஏதாவதொரு வழியில் கிடைத்தால் இவ் விண் ஆய்வு கூடத்தைத் தொடர்ந்து இயங்க வைக்க முடியுமென ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். ரஷ்யக் கூட்டமைப்பும் எப்படியாவது இதனைத் தொடர்ந்து இயங்க வைக்கவே முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அதன்படி முதலில் இவ் ஆய்வுகூடத்தை விளம்பரத் தேவைகளுக்காக பயன்படுத்தலாமென ரஷ்யா கூறியது. பின்னர் அதுபற்றிய ஓர் திரைப் படம் எடுக்கலாமென முடிவு செய்யப்பட்டது. இதற்கிடையே பிரித்தானிய முதலீட்டாளர் ஒருவர் விண்ணுக்கான பயணங்களை ஏற்பாடு செய்து அதன்மூலம் பணம் திரட்ட முயற்சிசெய்த அத் திட்டமும் பின்னர் கிடப்பிலே போடப்பட்டது. ரஷ்யா எப்படியாயினும் மிர் ஆய்வு கூடத்தை தொடர்ந்து இயங்க வைக்கவே விரும்புகின்றது. இவ் விண்வெளி ஆய்வுகூடம் 1986-ம் ஆண்டு சோவியத் யூனியனால் அனுப்பி வைக்கப்பட்டது. அதன் ஆயுள் 5 வருடங்களே என நிர்ணயிக்கப்பட்டபோதிலும் அது கடந்த 13 வருடங்களாகத் தொடர்ந்து இயங்கிவருகின்றது. இவ் இடைப்பட்ட காலத்தில் 24 சர்வதேச விஞ்ஞான திட்டங்களும் 17000 விஞ்ஞான, தொழில் நுட்ப பரிசோதனைகளும் இதில் செய்துபார்க்கப்பட்டன. கடந்த ஒருசில வருடங்களாக இவ் ஆய்வுகூடத்தில் ஏராளமான தொழில் நுட்பக்கோளாறுகள் ஏற்பட்டன. ஆனாலும் இவ் ஆய்வுகூடம் 2003 முதல் 2005 வரை செயற்படும் நிலையிலேயே உள்ளது என ரஷ்ய விஞ்ஞான ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே அமெரிக்காவும் மற்றும் பல நாடுகளும் இணைந்து சர்வதேச விண்வெளி ஆய்வுகூடம் ஒன்றினை நிறுவும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளன. இதில் ரஷ்யாவும் பங்கேற்கிறது. மிர் ஆய்வுகூடத்தின் செயற்பாடுகளை நிறுத்தி அதனை அழித்துவிட்டு ரஷ்யா புதிய ஆய்வுகூடத்திற்கான செயற்பாடுகளில் இறங்கவேண்டுமென அமெரிக்கா விரும்புகிறது. அப்படி இவ் ஆய்வுகூடத்தின் செயற்பாடுகளை ரஷ்யா நிறுத்துமானால் அடுத்த வருட ஆரம்பத்தில் அதனை கீழிறக்கி பசுபிக் சமுத்திர வான்வெளியில் தீக்கிரையாக்க ரஷ்யா அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.


## A.S.C.E.S இன் புதிய வகுப்புக்கள்

**14 ஆசிரியர்களின் கல்வி புகட்டலால் எமது மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுகின்றனர்.**

பாடசாலை மாணவர்களுக்கான வகுப்புகள் நடைபெறும் ஒரே இடம் Bio,Chimie, Maths, Tamoul, English, Francais, Histoire, etc சனி பி.ப 1.30-ஞாயிறு காலை 10 மணி முதல்

**பிரெஞ்சு** 05.09.99 ஞாயிறு காலை 10 மணி
04.09.99 சனி மாலை 3.30 மணி
01.09.99 புதன் மாலை 3 மணி
07.09.99 செவ்வாய் 3 மணி

**ஆங்கிலம்**

**கம்பியூட்டர்**

**Win 95/98, Win Nt, Word. Excel. Hardwane** பயிற்சி
04.09.99 சனி காலை 10 மணி 1 மணி
05.09.99 ஞாயிறு காலை 10 மணி 1 மணி

**சிறுவர்க்கான தமிழ், பிரெஞ்சு, கணித -ஆங்கில வகுப்புகள்** பிரதி சனி.பி.ப 1.30 மணி முதல்

நடன வகுப்புகள்: ஞாயிறு பி.ப. 1.30 மணி

**சனி, ஞாயிறு வகுப்புகள் நடைபெறும் இடம்:**
*41, Rue Didot, 75014 Paris. - Tel: 01 42 57 23 56*
*Mo: Pernety (Dir N°:13)*
**திங்கள், செவ்வாய், புதன் வகுப்புகள் நடைபெறுமிடம்**
*2, Rue Esclagnon 75018 Paris*
*M°: Porte de Clignancourt*

# பாரிஸ் லாசப்பலில்

## கைத்தொலைபேசி இணைப்பு நிலையம்

# Titanic Com


**எமது வாடிக்கையாளர்களுக்கு 1 Fr உடன் அதி நவீன நீங்கள் விரும்பும் கைத்தொலைபேசியையும், இணைப்பையும் பெற்றுக்கொடுக்கிறோம்.**





★ அதி நவீன கைத்தொலைபேசிகள்
★ தொலைபேசி உதிரிப்பாகங்கள்
★ தொலைபேசி திருத்த வேலைகள்
★ Photocopy பிரதிகள்
★ Fax அனுப்பவும், பெற்றுக்கொள்ளவும்
★ Video, Audio கசற்றுகள் விற்பனைக்குண்டு
★ France, Telecom இன் Ticket தொலைபேசி அட்டைகள்




மேலும் மிக விரைவில் உங்கள் உறவுகளுடன் தொடர்பு கொள்ள அதிக நிமிடங்களுடன் Titanic Com இன் தொலைபேசி அட்டைகளும் வரவிருப்பதையும் மகிழ்வுடன் தெரிவிக்கிறோம்.





## 203, Rue de la Chaplle
## 75010 Paris.

**Tel: 01 53 26 36 10 / Fax: 01 53 26 36 12**

ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# கல்லோயாவும் பொன் விழாவும்

கல்லோயா திட்டத்தின் பொன்விழா நிகழ்வுகள் அம்பாறை சேனநாயக்கா சமுத்திரத்திற்கு அருகில் இடம்பெற்று வருகின்றன. இவ் விழாவில் கலந்துகொள்ள ஐ.தே. கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அம்பாறைக்குச் சென்றுள்ளார். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் 'விவசாயப் புரட்சி' என்ற பெயரில் கிழக்கு மாகாணத்தில் கல்லோயாவில் ஆரம்பிக்கப்பட்ட சிங்களக் குடியேற்றத்திட்டத்தின் பொன்விழா நிகழ்வே இது. பிரிட்டிஸ்காரரிடம் இருந்து இலங்கை விடுதலை அடைந்ததன் பின்னர் அமெரிக்க நிறுவனம் ஒன்றின் உதவியுடன் கல்லோயாவில் 'விவசாய அபிவிருத்தித் திட்டம்' என ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அத் திட்டத்திற்காக நூற்றுக்கணக்கான சிங்களக் குடும்பங்கள் கல்லோயாவிற்கு கொண்டு வந்து குடியேற்றப்பட்டதுடன், ஒவ்வொரு குடும்பத்திற்கும் சொந்தமாக நான்கரை ஏக்கர் காணியும் வழங்கப்பட்டு, அவர்களுக்குச் சொந்தமாக வீடுகளையும் கட்டிக்கொடுத்து. இக் குடியேற்றவாதிகளை கல்லோயா பகுதியில் குடியேற்றி அவர்களை அந்த மண்ணின் சொந்தக்காரர்களாக்கியது அன்று ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக்கட்சியும் அதன் தலைமையில் இருந்த டி.எஸ். சேனநாயக்காவுமே. இன்று அந் நில அபகரிப்பின் பொன்விழாவை வெற்றிவிழாவாக கொண்டாடவே அக் கட்சியின் தற்போதைய தலைவரான ரணில் விக்கிரமசிங்க அம்பாறைக்குச் சென்றுள்ளார்.

தமிழ் மக்களின் நிலத்தினை அபகரிக்கும் அதி உச்ச நிலை கல்லோயாவில் இருந்தே ஆரம்பமாகியது. அதன் பின்னர் 50 ஆண்டுகாலமாக மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்களத் தலைமைகள் அனைத்தும் தமக்குள் வேற்றுமையோடு நடந்துகொண்டாலும் தமிழ் மக்களின் மண்ணை அபகரிப்பதில் மட்டும் எந்தக் கட்சியுமே வேற்றுமையை காட்டியதில்லை. இலங்கை பிரிட்டிஸ்காரரிடம் இருந்து விடுவிக்கப்படும் முன்னர், கிழக்கில் ஆயிரக்கணக்கில் இருந்த சிங்களவர்கள் இன்று இலட்சங்களை தாண்டி நிக்கின்றார்கள், ஆனால் தமிழர்களோ இலட்சங்களில் இருந்து இன்று ஆயிரக்கணக்கில் வந்து நிக்கின்றார்கள் என்றால் அதற்கு கடந்த 50 ஆண்டுகாலமாக ஆட்சியில் இருக்கும் சிங்கள அரசியல் தலைமைகளே காரணம்.

ஆனால், அன்று சிங்களம் விரட்டியபோது ஓடி ஒதுங்கிய மக்கள், இன்று மீட்கப்பட்ட முல்லைத்தீவு, கிளிநொச்சி பிரதேசங்களில் போரெழுச்சி கொண்டு நிற்கின்றனர். போராளிகள், மக்கள் என்ற வேறுபாடின்றி சிங்கள ஆக்கிரமிப்பாளர்களின் ஆக்கிரமிப்பை எதிர்த்து ஒன்றுபட்டு ஆயுதமேந்தி போரிடும் ஒரு மக்கள் போராட்டமாக இன்று தமிழீழம் வளர்ந்துவிட்டது. உலக வரலாற்றில் அந்நியரால் ஆக்கிரமிக்கப்பட்டு, அபகரிக்கப்பட்ட எத்தனையோ நாடுகள் மக்கள் போராட்டமாக மாறியதன் பின்னரே விடுதலையைப் பெற்றன என்பது வரலாறு கூறும் உண்மை. இன்று தமிழீழத்தின் நிலையும் அதுதான். பல்வேறு திட்டங்களுடன் தமிழீழ மண்ணை அபகரித்துக் கொண்டிருக்கும் சிங்களப்படை நாளை இவர்களால் விரட்டியடிக்கப்படுவார்கள். அப்போது கல்லோயாவும் மீண்டும் தமிழர்களின் கரங்களுக்கே வரும் என்பதில் எந்த வித ஐயப்பாடும் தேவையில்லை.

ஆனால், தமிழீழத்தில் இன்று மக்கள் அனைவரும் போரை முகம் கொடுத்து நேருக்குநேர் சந்திக்க தயாராகி விட்ட பொழுதில், புகலிடத் தமிழர்களும் தங்கள் வரலாற்றுக் கடமையை உணர்ந்து செயற்பட வேண்டும் என்பதே இன்றுள்ள நிலை.

# தமிழர்களின் உரிமையை பறிக்கும் மன்னிப்புச் சபை

## பார்வை

சர்வதேச மன்னிப்புச் சபையின் சமீபத்திய நடவடிக்கை அனைவரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி உள்ளது. சம்பந்தர், ஆனந்தசங்கரி, ரவிராஜ் (யாழ் மேயர்) போன்றவர்களை பாதுகாப்பதற்கான மனுவை புலிகளுக்கு அனுப்பி வைக்கும்படி சபை கேட்டுள்ளது. சிறீலங்கா அரசின் இராணுவத் திட்டத்தினை அமுல்படுத்தும் அரசியல் பணியை மேற்கொள்ளும் இக் கனவான்களை புலிகள் அழித்துவிடுவார்கள் என மன்னிப்புச் சபை கருதுகின்றது. இவர்களை போரில் ஈடுபடாத தரப்பினர் என மன்னிப்புச் சபை அறிமுகப்படுத்துவதும் ஜெனிவா உடன்பாட்டின்படி மட்டுமே தாம் இவர்களைப் பாதுகாக்க முற்படுவதாக கூறுவதும் தமிழர்களுக்கு விசனம் தருவது.

1. சம்பந்தர் மற்றும் கூட்டணியினர் சிங்கள அரசின் போரிற்கான அரசியற் திட்டத்தை அமுல்படுத்துபவர்கள்.
2. போலித் தேர்தல்களில் பங்கேற்று பாரளுமன்றத்திற்கு சென்ற இவர்கள், இரகசியமாகவும் பகிரங்கமாகவும் சிங்கள போரிற்கு உதவினர்.
3. இனப்படுகொலையில் ஈடுபடும் இராணுவத்தால் இவர்கள் பாதுகாக்கப்படுபவர்கள்.

**இவர்களைப் பாதுகாக்க மன்னிப்புச் சபை முற்பட்டிருப்பது, தமிழர்களின் அரசியல் தலைமை தொடர்பான உரிமையை பறிப்பதும், கருத்து சுதந்திரத்தைப் பறிப்பதுமாகும்.**

**மன்னிப்புச் சபையின் சமீபத்தைய கவனங்கள் வன்னி உணவுச்சிக்கல் தொடர்பானதாகவோ அல்லது தொடரும் அரச பயங்கரவாதம் பற்றியதாகவோ அமையவில்லை. மாறாக கூட்டணியைப் பாதுகாப்பது, செம்மணியில் இடம் பெறும் 'திசைதிருப்புவதற்கான விசாரணைகளை நியாயப்படுத்துவது' என்றே அமைகின்றது. மன்னிப்புச் சபை தன் 'அர்த்தத்தை' இழக்கின்றது.**

கதிர்காமர், காலத்திற்குக் காலம் தன் ராணி விசுவாசத்தைக் காட்ட வீரதீர அறிக்கை விடுவது வழக்கம். அதன் தொடர்ச்சியாக கடந்த வாரம் கதிர்காமர் நடாத்திய செய்தியாளர் மாநாடு விசித்திரமானதாக அமைந்தது.

1 புலிகள் (தமிழர்கள்) நடாத்துவது, பழைய பாணியில் அமையும் இனக் குழுக்களுக்கு இடையிலான போர்.
2. புலிகளின் மனதை கணிக்க முடியாததால் (Imponderabes)* சமாதானம் ஏற்படுத்த முடியாது.
3. 2000 ஆண்டில் போரை வெல்ல வேண்டும் என்ற நோக்கம் உள்ளது. ஆனால் வெல்ல முடியுமா என்பது பிறிதொரு விடயம்.
4. இந்தியா தமிழீழத்தை ஏற்றுக்கொள்ளாது.
5. வன்முறையை நிற்பாட்டுமாறு பிரபாகரனைக் கேட்கின்றேன்.

மேற்கண்டவாறு கதிர்காமர் முரண்பாடுகள் நிறைந்த விடயங்களை கூறினார். சந்திரிகாவின் எடுபிடியாக நீலனால் நியமிக்கப்பட்டவரான இவர் சமாதானம் பற்றிய குரல் ஓங்கி ஒலிக்கையில், 'சமாதானம் சாத்தியமில்லை எனச் சொன்னமை' திட்டமிடப்பட்ட ஒரு விடயமாகவே இருக்கும்.

**தீர்வுப் பொதியை மையமாக வைத்து புலிகளுக்கு எதிராக ஒரு பரப்புரை வலிந்து தாக்குதலை உலகம் பூராவும் திட்டமிடும் இவர், சமாதானம் – புலிகள் இருக்கும் வரை சாத்தியமில்லை என முணுமுணுப்பது திட்டத்தின் இரண்டாம் பக்கத்தை வெளிக்காட்டவே ஆகும்.** புலிகளை சமாதானப் பொறியில் சிக்க வைத்து அழித்துவிடலாம் எனக் கருதும் சிங்கள புத்திசாலி அரசுக்கு, புலிகளின் புத்திசாலித்தனம் பற்றி எப்போதும் பயம் உண்டு. **பிரபாகரன் தன் தீர்க்கமான வழிகாட்டல் ஊடாக பொறிகளை தாண்டி போரை வெற்றிக்கு எடுத்துச் செல்லும் ஆற்றல் உள்ளவர் ஆதலால், முதலாவது தந்திர உபாயத்திற்கு சமாந்தரமாக இரண்டாவதை போட்டு வைக்கும் 'குயுத்தியே' இதுவாகும்.** புலிகளுடனான போர் தவிர்க்க முடியாதது என கதிர்காமர் தீர்க்கதரிசனம் சொல்வதும், பிரபாகரனை வன்முறையை நிறுத்துமாறு கேட்பதும் இந்தியாவின் பேச்சாளராக தன்னை மாற்றிக் கொண்டு பேசுவதும் 'இந்தப் பின்னணியில்' தானாகும்.

★ ★ ★

கதிர்காமர், இந்தியா தமிழீழத்தை அங்கீகரிக்காது எனக் கூறுகையில், வெற்றி பெறும் எனக் கருதப்படும் கூட்டணியின் தமிழக கூட்டணியான வைகோவின் மதிமுக உடன் சேர்ந்து டாக்டர் ராமதாஸின் பாமகவும் தமிழீழமே சரியான தீர்வு எனப் பிரகடனப்படுத்தியுள்ளனர். மேலும் கலைஞர் தமிழீழம் கிடைத்தால் மகிழ்வேன் எனக் கூறியவர். இவர்களுடன் ஜோர் பெர்னாண்டஸின் சமதாவும் மகராஸ்டிரத்தின் சிவசேனாவும் தமிழீழத்தை ஆதரிக்கக் கூடியவை என கூறப்பட்டுள்ளது.

இதற்கு பலம் சேர்ப்பதாக, 'சிறீலங்காவுக்கு ஏன் இராணுவத்தை அனுப்பினாய்' என பிரதமர் வாஜ்பாய் எழுப்பிய கேள்வி அமைகின்றது.

**மேற்கு நாடுகளின் ஆதரவுடன் இயங்கும் சிங்களம், இந்தியாவுடனான உறவுகளில் பேணும் இரட்டைத்தனம் தளம்பலடையக் கூடியது. மேற்குலகு ஆதரிக்கும் தீர்வுப் பொதி, இந்தியாவின் 13வது சட்டத்திருத்தத்தை முறியடிப்பதற்கான சதிதானே?**

★ ★ ★

செம்மணி நாடகத்தின் அடுத்த பாகம் ஆரம்பமாகி உள்ளது. இரகசிய புதைகுழிகளின் முதல் குற்றவாளியான ஜனாதிபதி சந்திரிகா, தன் பரப்புரைக்காக நடாத்தும் நாடகத்தை பார்ப்பதற்காக மன்னிப்புச் சபையுடன் 30 பிறநாட்டுத் தூதர்களும் அழைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**நீண்ட கால இழுத்தடிப்புக்கள் மற்றும் திட்டமிட்ட முறையிலான விசாரணை முறைகள் என்பன மூலம் செம்மணியை சிறப்பாக கையாளும் சந்திரிகா அரசு, இத் திட்டத்தின் உச்சக்** கனியாக போரிற்கு உதவுமாறு பிறநாடுகளை நெருக்குகின்றது.

முன்பு கண்டெடுக்கப்பட்ட எழும்புக் கூடுகளின் விசாரணைகளை முடுக்கிவிட்டு குற்றம்சாட்டப்பட்ட இராணுவத்தினரை சிங்களப் பொலிஸ் கைது செய்யவில்லை. வெறுமனே வாக்குமூலங்களைப் பதிவது, நீதிமன்றத்தை கூட்டுவது என்ற அரசியல் வித்தைகளையே அரசு நடாத்துகின்றது. எதுவரை இவர்கள் செல்கின்றார்கள் என இவர்களை விட்டு விட்டு 'இராணுவம்' பார்த்துக் கொண்டுள்ளது. எல்லையைத் தாண்டாமல் நாடகம் ஆடலாம்.

*– ராஜா*




நன்றி: 'தினக்குரல்'

# தமிழகத் தேர்தல்


*மீண்டுமொருமுறை உலகின் பெரிய ஜனநாயக நாடு தனது பொதுத் தேர்தலைச் சந்திக்கப் போகிறது. 1952-ம் ஆண்டில் இந்திய தேசம் தனது முதலாவது பொதுத் தேர்தலைச் சந்திக்க ஆரம்பித்து 1999 இல் மீண்டும் வந்து நிற்கிறது. இக் காலப்பகுதிகளுக்கிடையே இந்திய அரசியலில் எத்தனையோ மாற்றங்கள் வந்தும் போயுமுள்ளன. கடந்த 50 வருடங்களில் இந்தியா சந்தித்த பொதுத் தேர்தல்களையும் தமிழகத்தின் அப்போதைய நிலையினையும் இக்கட்டுரை கோடிட்டுக் காட்டுகிறது. இந்திய தேர்தல் காலத்தில் "தேர்தல் களத்தின்" இக்கட்டுரை பொருத்தமானதெனவே தோன்றுகிறது. சில வாரங்கள் இது தொடராக வரும்.*

— ஆர்.

# கடந்த 50 ஆண்டுகளின் ஒரு நோக்கு

❷

1952,1957-ல் நடந்த தேர்தல்கள் போட்டியிடும் வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் தனித்தனி சின்னம் போட்ட பெட்டி ஒதுக்கப்பட்டது. ஓட்டுச்சீட்டு ஒரு ரூபாய் அளவுக்கு சிறியதாக இருக்கும். ஓட்டுப்பெட்டிகள் வைக்கப்பட்டுள்ள இடம் திரையினாலோ,



நேரு

தட்டியாலோ மறைக்கப்பட்டிருக்கும், வாக்காளர்தான் தேர்ந்தெடுக்க விரும்பும் வேட்பாளர் சின்னம் உள்ள பெட்டியில் வாக்கைப் போட்டுவிட வேண்டும். வாக்காளர் பெட்டியில் போட்டாரா இல்லையா என்பது தெரியாது. இதை சாதகமாக்கிக்கொண்டு, ஓட்டுகள் வழங்கப்பட்டன. எப்படி என்றால் வாக்காளர், தனக்குக் கொடுத்த வாக்குச்சீட்டை பெட்டியில் போடாமல் மறைத்து எடுத்துக் கொண்டு வெளியில் விற்றுவிடுவார். இப்படி பத்தோ பதினைந்தோ வாங்கிக்கொண்டு, வேட்பாளர் நியமித்த ஏஜெண்டுகள், தன் வாக்கைப்போடும்போது வழங்கப்பட்ட வாக்குகளையும் சேர்த்துப்போடுவார். ஆக, தேர்தலில் வெற்றிக்காக பணம் விளையாடினது உண்மைதான். இது, 1962-ல் தற்போது உள்ளதுபோல் வாக்காளர் சீட்டில் வேட்பாளர் பெயருக்கு முன் உள்ள சின்னத்தில் முத்திரையிடும் முறை கொண்டுவரப்பட்டது.

1962-ல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி ஒன்று நடந்தது. உலகத்தின் மிகப்பெரிய நாடுகளில் அளவாலும் மக்கள் தொகையில் முதலிடம் கொண்டதுமான சீனாவை, அமெரிக்க வல்லரசு ஐக்கிய நாடுகள் அவையில் இடம் கொடுக்காதபடி தடுத்துவந்தது. உலக நாடுகள் அமெரிக்க சார்பு, ரஷ்யா சார்பு என்று இரு பிரிவாகப் பிரிந்து பனிப் போர் உச்சக்கட்டத்தை அடைந்திருந்த காலம் அது. எந்த நேரத்திலும் மூன்றாம் உலகப் போர் வெடித்து, ஆயிரக் கணக்கில் இரண்டு முகாம்களிலும் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் அணு குண்டுகள் வீசி எறியப்பட்டு உலகமே அழிந்து போகும் என்ற அச்சம் நிலவியகாலம் அது. அந்தக் காலகட்டத்தில் பிரதமராக இருந்த நேரு, இரு அணிகளையும் சேராத நாடுகளை ஒருங்கிணைத்து அணி சேரா நாடுகள் என்ற அமைப்பை உருவாக்கி, சீனாவிற்கு ஆதரவாக உலக அரங்கில் வலுவான குரலை ஒலித்துக்கொண்டு வந்தார். சீனாவைக்கொண்டு 'பஞ்சசீல'க் கொள்கையைத் தந்த, உலக அமைதிக்காக இந்திய வெளிநாட்டுக்கொள்கையை உருவாக்கினார்.

நேரு எந்த சீனாவை முழுக்க முழுக்க நம்பினாரோ, அந்த சீனாவே இந்தியாவின் வடகிழக்கு எல்லையில் தன் படையை அனுப்பி, பெருமளவு பிரதேசத்தை எடுத்துக் கொண்டது. இதை இந்திய கம்யூனிஸ்ட்டுகள் 'சீனா' செய்தது தவறில்லை என்று ஒரு பிரிவும் தவறு என்று மற்றொரு பிரிவும் சொல்லவே, கட்சி இரண்டாக உடைந்தது. அதாவது, வலதுசாரி கம்யூனிஸ்ட், இடதுசாரி கம்யூனிஸ்ட்டு என்று பிளந்தது இன்று வரையில் ஒன்று சேரவே இல்லை.

இந்தியாவின்மேல் சீனா நடத்திய படை எடுப்பால் 38 ஆயிரம் சதுர கி.மீ. நிலப்பரப்பை அது கைப்பற்றிக்கொண்டது. இந்திய இராணுவத்தினர் 1383 பேர்கள் வீரமரணமடைந்தனர்; 1696 பேர் காணாமல் போயினர்; 1968 வீரர்கள் போர்க்கைதிகளாயினர். இந்த நம்பிக்கைத் துரோகம் நேருவின் உடல் நலத்தை மிகவும் பாதித்தது. எனவே, அவர் நீண்டகாலம் உயிர் வாழமுடியாமல் மரணமடைந்தார். சீன ஆக்கிரமிப்பு நேரத்தில் தேசப் பாதுகாப்பு நிதிக்காக அன்றைக்கே ரூ.75 ஆயிரத்தை முதன்முதலாகத் தந்தவர் புரட்சி நடிகர் எம்.ஜி. ஆர்

# இந்திய-சீனப் போரும் தேர்தலும்

என்பது குறிப்பிடத்தக்கது.

நேருவிற்குப் பின் இந்தியாவின் ஜனநாயகம் செத்துப்போய்விடும்; எனவே, இந்தியநாடு துண்டு துண்டாகிவிடாமலிருக்க காங்கிரஸ்கட்சி தேவை என்ற கருத்து திட்டமிட்டு பரப்பப்பட்டது. சீனா படையெடுப்பிற்குப் பிறகு தி.மு.க.வின் 'திராவிட நாடு' பிரிவினைக் கொள்கையை கைவிட்டுவிட்டதாக அண்ணா அறிவித்தார். இதற்கு முன்பே பிரிவினை கேட்கும் அரசியல் கட்சிகளை தடைசெய்ய வேண்டும்; பேசுபவர்களைச் சிறையில் அடைக்க வேண்டும் என்று சட்டத்தைக் கொண்டுவர காமராசர் காத்திருந்த போது, அண்ணாவின் அறிவிப்பு காங்கிரசிற்கு தமிழ்நாட்டிலுள்ள எதிர்ப்பு குறையும் என்று கணித்தார். அவர்களுடைய ஒரே ஆயுதமான பிரிவினையை எறிந்துவிட்ட பிறகு தி.மு.கவின் செல்வாக்கு குறைந்து தேய்ந்துபோய்விடும் என எதிர்பார்த்தார். ஆனால் அண்ணாவோ 'பிரிவினையை நாங்கள் கைவிட்டோமே தவிர, பிரிவினைக்கான காரணங்கள் அப்படியேதான் இருக்கின்றன' என்றார்.

மாநிலங்களுக்கு அதிகாரங்கள் இல்லை; எல்லா அதிகாரங்களுமே மத்தியில் குவிக்கப்பட்டிருக்கின்றன; வடமாநிலங்களில்தான் மத்திய அரசு பெரும் முதலீடுகள் செய்து தொழிற்சாலைகள் நிறுவப்படுகின்றன; பதினான்கு மொழிகளைப்பேசும் இந்தியாவில் இந்தி ஒன்றுதான் ஆட்சி மொழியாக இருந்து, அது தமிழர்கள் மேல் திணிக்கப்படுகிறது. இவைதான் பிரிவினைக்கான காரணங்கள் என்றார். எந்த இராஜாஜி இந்தியைக் கட்டாய பாடமாக தமிழ்நாட்டுப் பள்ளிகளிற் கொண்டு வந்தாரோ அவரே எதிர்க்கத் தொடங்கினார். பல மேடையில் ஆணித்தரமான வாதங்களை எடுத்து முன்வைத்துப் பேசினார்; கட்டுரைகள் எழுதினார்; ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு அறிக்கைகள் கொடுத்தார். இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பாக கல்கத்தாவில் இந்தி எதிர்ப்பு மாநாடு கூட்டினார். ஆக, இந்தி எதிர்ப்பால் திராவிட இயக்கம் குறுகிய மனப்பான்மை கொண்டது என்ற குற்றச்சாட்டு இராஜாஜியின் முழக்கத்தால் நீக்கப்பட்டது.

அப்போது 'ஆங்கிலம், இந்தி பேசாத மக்கள் விரும்பும்வரை கால வரம்பின்றி இந்திய அரசின் ஆட்சிமொழியாக இருக்கும் என்று நேரு வாக்குறுதி கொடுத்தார். அதற்கு மாறாக இந்தியை ஆட்சி மொழியாக்குவதில் காங்கிரசு கட்சி முனைப்பாக செயல்பட்டபோது, இந்தியை எதிர்க்கும் நீண்ட வரலாறுடைய தமிழ்நாடு 1965-ம் ஆண்டு ஜனவரி 26-ம் நாளை துக்க நாளாக -கருப்பு நாளாக தி.மு.க. அறிவித்தது. இதையடுத்து தமிழகத்தில் மாணவர் போராட்டம் வெடித்தது. இதை அடக்க நடந்த துப்பாக்கிச் சூட்டால் மாணவர்கள் இறந்தனர். அன்றைய முதலமைச்சராக இருந்த பக்தவச்சலம் துப்பாக்கிச் சூட்டை நியாயப்படுத்தினார். காங்கிரசின் பெயர் கெட ஆரம்பித்தது.

அப்போது, காங்கிரசுக் கட்சியை பலப்படுத்த அக்கட்சியின் மூத்த தலைவர்கள் 'காமராசர் திட்டத்தினால்' தம் அமைச்சர் பதவிகளையும் அதி



அண்ணா

காரங்களையும் துறந்து கட்சிப் பணியில் ஈடுபட்டனர். காமராசர் முதலமைச்சர் பதவியைத் துறந்ததினால், பக்தவச்சலம் முதலமைச்சரானார். மிகவும் திறமை வாய்ந்த நிர்வாகி என்றும் அப்பழுக்கற்றவர் என்றும் பெயர் பெற்றவரான பக்தவச்சலம், மாணவர் போராட்டத்தை சரியாக சமாளிக்கவில்லை என்ற காரணத்தினால் 1967 தேர்தலில் தோல்வி அடைந்தார். காங்கிரசு கட்சியும் தோல்வி அடைய நேர்ந்தது.

1967-ல் காங்கிரஸ் கட்சி தமிழ் நாட்டில் ஆட்சிப்பீடத்தை இழந்ததை இன்றும் பிடிக்கவில்லை. உணவுப் பொருள் கொள்முதலைக் காங்கிரஸ் ஆட்சி கைவிட்டதால் 'நாட்டில்' உணவுப்பஞ்சம் தலைவிரித்து ஆடிற்று. இந்நிலையில், தி.மு.க.வின் முழக்கங்கள் கூர்மை அடைந்தன. அடுக்குமொழி வசனங்கள் மக்களைக் கவர்ந்தன. 'காங்கிரஸ் ஆண்டது போதாதா, மக்கள் மாண்டது போதாதா' என்று வசனம் உணவுப் பஞ்சத்தால் அவதியுறும் மக்களின் செவிகளைத் தாக்கியது. மக்கள் ஒரு நாளைக்கு உண்ணா நோன்பிருந்தால், நாட்டுக்கும் நல்லது; உடல் நலத்திற்கும் நல்லது என்று ஆட்சியிலுள்ள காங்கிரசுக் கட்சி அறிவுரை வழங்கியதால், மக்கள் மேலும் எரிச்சல் அடைந்தனர். 'காங்கிரசை நம்பினால் கல்லறைக்குப் போக வேண்டியதுதான்'

'மாடாக உழைத்தோர் ஓடாகத் தேய்கிறார். என்ற அண்ணாவின் பேச்சுக்கு மக்கள் செவிசாய்த்தனர். 'அள்ளிப்போட்டார்கள் உலையில்-பிறகு காங்கிரஸ் ஆட்சியில் அளந்து போட்டார்கள்; பிடித்துப் போட்டார்கள்; இப்போது எண்ணிப் போடுகிறார்கள் அரிசியை' என்ற தி.மு.க. பொதுச் செயலாளர் நெடுஞ்செழியனின் பேச்சு மக்களிடையே காட்டுத் தீபோல் பற்றிக்கொண்டது.

தி.மு.க. -கம்யூனிஸ்டு - சுதந்திரா- முஸ்லிம் லீக் ஒரு அணியாக நின்று காங்கிரசை எதிர்த்தது. தி.மு.கவை ஆட்சிப்பீடத்தில் ஏற்றிவிட்டுத்தான் நான் என் கண்களை மூடுவேன் என்று இராஜாஜி சூளுரைத்தார். கொதித்தெழுந்த காமராசரோ 'நான் படுத்துக்கொண்டே வெற்றிபெறுவேன்' என்றார். ஆனால் அவரோ நாட்டிற்கு அறிமுகமாகாத தி.மு.க. மாணவத் தலைவரால் விருதுநகரில் தோற்கடிக்கப்பட்டார்.

பொதுத்தேர்தலில் ஆரோக்கியமில்லாத போக்கை, நாட்டின் மூத்த கட்சியான காங்கிரஸ் ஏற்படுத்தியது. அதாவது தொகுதியில் இருக்கும் வாக்காளர்கள் எந்தச் சாதியைச் சேர்ந்தவர்களாக பெருவாரியாக உள்ளார்களோ, அவர்களிலிருந்தே வேட்பாளரை நிறுத்திவைத்தது. சாதிக்கு அரசியல் பரிமாணம் என்றதோர் வலிமை கூடியது. தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் சாதிக்கலவரங்கள் வெடித்ததற்கு இதுவும் ஒரு காரணமாயிற்று என்று சொல்லலாம். கம்யூனிஸ்ட் கட்சியைத் தவிர மற்றைய அரசியல் கட்சிகளும் காங்கிரசின் இந்தத் தேர்தல் வெற்றிச் சூத்திரத்தையே கையில் எடுத்துக்கொண்டன. 1967-ல் காங்கிரசின் இருபதாண்டு கால ஆட்சி தமிழ் நாட்டில் மறைந்துபோயிற்று. அப்போது வீழ்ந்தது இன்றுவரை, எழமுடியவில்லை.

1967-ம் ஆண்டு தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றில் ஒரு மாபெரும் திருப்பத்தை பேரறிஞர் அண்ணாவின் தி.மு.க. உருவாக்கிக்காட்டியது.

சுதந்திரக்கட்சித் தலைவர் மூதறிஞர் இராஜாஜியும் தி.மு.க. தலைவரான பேரறிஞர் அண்ணாவும் இணைந்து ஒரு முன்மாதிரியான கூட்டணியை உருவாக்கினர். அதுதான் காங்கிரஸ் அல்லாத கட்சிகளின் மாபெரும் முற்போக்குக் கூட்டணியாகும்.

இந்த அணியில் தி.மு.க.சுதந்திராக்கட்சி, கம்யூனிஸ்ட், பார்வர்டு பிளாக், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், தமிழரசுக்கட்சி, நாம் தமிழர் இயக்கம், பிரஜா சோசலிஸ்ட் போன்ற கட்சிகள் இடம்பெற்றன.

1967-ம் ஆண்டு பொதுத்தேர்தலுக்கு முன்னோடியாக தி.மு.க.



காமராஜர்

சார்பில் நடைபெற்ற விருகம்பாக்கம் மாநாட்டில் கூட்டணிக்கட்சித் தலைவர்களெல்லாம் கலந்து கொண்டனர்.

பேரறிஞர் அண்ணா, மூதறிஞர் இராஜாஜி, காயிதேமில்லத் முகமது இஸ்மாயில், கல்யாண சுந்தரம், சிலம்புச் செல்வர் ம.பொ.சி., மூக்கையா தேவர், சி.பா. ஆதித்தனார் போன்றவர்கள் ஒரே மேடையில் பங்கேற்றுப் பேசியது, தமிழக மக்களிடையே ஒரு பரபரப்பையும் முன் எப்போதும் காணாத பிரமிப்பையும் ஏற்படுத்தியது.

தமிழ்நாட்டில் இதுபோல் காங்கிரஸ் அல்லாத கட்சிகள் ஒரே மேடையில் தோன்றி காங்கிரஸ் கட்சியை ஆட்சியைவிட்டு அப்புறப்படுத்துவது என்ற ஒரே முழக்கத்தை ஒட்டுமொத்தமாக எழுப்பியது இம்மாநாட்டின் புதுமையும் புரட்சியுமாகும்.

60-க்கும் மேற்பட்ட இடங்களைத் தமது கட்சிக்கு ஒதுக்கவேண்டுமென்று எஸ்.எஸ் இராமசாமி படையாச்சி வற்புறுத்திக்கொண்டிருந்ததற்கு விருகம்பாக்கம் மாநாட்டில் அண்ணா வெகு அழகாக விடை சொன்னார்.

'உங்கள் பலமறிந்து-எங்கள் தரமறிந்து தொகுதிகளைக் கேட்க வேண்டும், இரயில்வே கைடை கையில் வைத்துக்கொண்டு தொகுதிகளைக் கேட்கக்கூடாது' என்றார்.

'நான் படுத்துக்கொண்டே ஜெயிப்பேன்' என்று பெருந்தலைவர் காமராசர் பேசியதற்கு இந்த மாநாட்டில் மூதறிஞர் இராஜாஜி பதிலளிக்கும் போது 'நீங்கள் படுக்கப்போவது நிச்சயம்; ஆனால் ஜெயிக்கப்போவது நிச்சயமில்லை' என்று அவர் சொன்னதுதான் அந்தத் தேர்தலில் நடந்தது.

(தொடரும்)

# மூன்று முயற்சிகளிலும் தோல்வியடைந்த சிக்சர்




கொக்குத்தொடுவாய்க்கு நேரடி விஜயம் செய்து டென்சில் கொப்பேக்கடுவாவும், கமில்டன் வனசிங்காவும் கொடுத்த போர் தந்திரோபாயங்களையும், மனோரீதியான உற்சாகங்களையும் பெற்றுக்கொண்ட படையினர் புதிய பாதையொன்றினூடாக முன்னேறத் தொடங்கியிருந்தார்கள். தங்கள் தாக்குதல் வலைக்குள் விழும் வரை பொறுமையாக காத்திருந்தனர் போராளிகள். திடீரென, முன்னேறிக்கொண்டிருந்த படையினரை ஊடறுத்து புலிகளின் கொமோண்டோ அணி தாக்கத் தொடங்கியது. ஆனையிறவு தளத்தில் சாதனைகள் பல படைத்த போராளிகள் இக் கொமோண்டோ அணியில் இடம்பெற்றிருந்தனர். புலிகள் இவ்வாறுதான் தாக்குதலை மேற்கொள்வார்கள் என்று கணக்கு போட்டு பாடம் கற்றுக்கொடுத்த தளபதிகளின் திட்டமிடல்களோடு வந்த படையினர், திடீரென தமக்குள்ளேயே போராளிகள் ஊடுருவி தாக்கத் தொடங்கியதும் தமது தளபதிகளின் கட்டுப்பாட்டையும் மீறி நாலாபக்கமும் சிதறி ஓடத் தொடங்கினார்கள். சிதறி ஓடிய படையினரை ஏனைய பகுதிகளில் நின்ற போராளிகளின் அணிகளுஞ் தாக்கத் தொடங்கின. எதுவும் செய்யமுடியாத நிலையில்



2ம் லெப்.ஆனந்தன் | 2ம் லெப்.கெங்கை | கப்டயஸ் மணாளன் | கப்.உருத்திரா | லெப். ஆனந்தகுமார் | லெப். பிரியன் | லெப். தங்கன்

மீண்டும் இழப்புக்களுடன் முகாமிற்கு தப்பி ஓடத் தொடங்கினார்கள். தப்பியோடிய படையினரை போராளிகள் விரட்டிவிரட்டித் தாக்கினார்கள். காட்டினுள் நுழைய முனைந்தால் இதுதான் நடக்கும் என்பதை இச் சமரிலும் படையினர் மனதில் மீண்டும் ஆழமாக பதியவைத்தனர் புலிகள். இம் முன்னேற்ற நடவடிக்கையிலும் ஏராளமான படையினர் கொல்லப்பட்டதுடன், எல்.எம்.ஜி. உட்பட பல பெறுமதியான ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

★ ★ ★

'என்ரை மகன் வீரனாய் சாகிறதைத்தான் நான் விரும்புகிறன். என்ரை பிள்ளைக்கும் இந்த மண்ணிலை சமாதி உருவாகிறதை பார்த்து நான் பெருமைப்படுறன். என்ரை பிள்ளையின்ரை படம் ஒண்டிருந்தால் தாருங்கோ, அதைப் பாத்துக்கொண்டே நான் காலத்தை கழிச்சிடுவன்.' மட்டக்களப்பு இலுப்பையடிச் சேனையில் இருந்து சிங்களப் படைகளின் கண்களில் அகப்படாமல் ஐந்து நாட்களாக இரவு பகலாக நடந்து மணலாற்றை வந்தடைந்தாள் தாயொருத்தி. பல இன்னல்களை தாண்டி காட்டினை வந்தடைந்திருந்தபோது அவளது மகன் லெப். புலித்தேவனோ (செல்வன் செல்வேந்திரன்— பன்குடாவெளி மட்டு.) இரண்டு நாட்களின் முன் (19.03.92) நடந்த சிக்சரில் கொமோண்டோ அணியாக ஊடுருவி படையினரை அடித்துவிரட்டிவிட்டு சமாதியில் உறங்கிக்கொண்டிருந்தான். நீண்ட காலமாக காணாத தன் மகனின் முகத்தை பார்ப்பதற்காக ஆசையோடு வந்

**'என்ரை மகன் வீரனாய் சாகிறதைத்தான் நான் விரும்புகிறன். என்ரை பிள்ளைக்கும் இந்த மண்ணிலை சமாதி உருவாகிறதை பார்த்து நான் பெருமைப்படுறன்.**

துள்ள அந்தத்தாயிடம் என்ன சொல்வதென்று புரியாமல் விழித்த போராளிகள், இறுதியில் அந்த தாயை போராளியின் சமாதியடியில் கொண்டு சென்று விடுகின்றனர். அப்போது அத்தாய் கூறிய வார்த்தைகளே இவை. புறநானூற்று தாய்களைப் பற்றி பெருமையோடு கூறிக் கொள்ளும் நாம், இன்று நம் கண் முன் வாழும் இத்தாய்களை எந்த நானூற்றில் பதியப்போகிறோம்?

இப் போராளியுடன் அன்று படையினரை அடித்து விரட்டும் சமரில், கொமோண்டோ அணியாக ஊடுருவி தாக்கிய கப்டன் உருத்திரா (சற்குணநாதன் ஜீவரத்தினம் — மயிலிட்டி யாழ்ப்பாணம்), இத் தாக்குதலில் படையினரிடம் இருந்து ஒரு எல்.எம்.ஜியை கைப்பற்றியே தீருவேன் என உறுதிபடச் சொல்லிவிட்டு சென்று, சொன்னது போலவே அதனைக் கைப்பற்றிய லெப்.ஆனந்தகுமார் (சீனித்தம்பி கனகரட்ணம்— பழுகாமம் மட்டக்களப்பு), வயதில் சிறியவனாக இருந்தாலும் இச்சமரில் தனக்கும் ஒரு சந்தர்ப்பம் தர வேண்டும் என தளபதியிடம் அடம்பிடித்து இறுதியில் உதவியணியாக செயற்பட அனுமதி பெற்று சென்ற தமிழ்மாறன் (அந்தோனிப்பிள்ளை லோறன்ஸ்- தண்ணீரூற்று முள்ளியவளை), இவர்களுடன் இணைந்து போரிட்ட சித்தன் (பொன்னுச்சாமி ஜெயராம் - பூவரசங்குளம் வவுனியா), நீண்ட நாட்களாக தானே வேவுபார்த்து தனது அணியை வழி நடாத்தி சென்ற லெப். தங்கன் (நடராசா விமலநாதன்- கோப்பாய் யாழ்ப்பாணம்), மாங்குளம், முல்லைத்தீவு, ஆனையிறவு என பல களங்கள் கண்ட 2ம் லெப்.ஆனந்தன் (சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை - தம்பிலுவில் அம்பாறை) ஆகிய போராளிகள் வீரச்சாவை தழுவிக் கொண்டனர்.

★ ★ ★

## மூன்றாவது முயற்சி

இரண்டாவது முயற்சியிலும் முன்னேற முடியாது இழப்புக்களுடன் தப்பியோடிய படையினரை மீண்டும் ஒருங்கிணைத்த இராணுவத் தளபதிகள், நான்கு நாட்கள் திட்டமிடலின் பின் இன்னொரு புதிய பாதையொன்றினூடாக முன்னேறுவதற்கான திட்டங்களை வகுத்தனர். 23.03.92 அன்று சிக்சர் நடவடிக்கையின் மூன்றாவது முயற்சி அப்புதிய பாதையினூடாக ஆரம்பமாகியது. அந்தப் பகுதியினூடாக படையினர் பெரிதாக முன்னேற முனையமாட்டார்கள் எனக்கருதி, அப்பகுதியில் கப்டன் டயஸ் தனது அணியிலுள்ள மூன்று போராளிகளுடன் மட்டுமே காவல் இருந்தான். ஆனால் அப் பகுதியினூடாக ஐநூறுக்கும் மேற்பட்ட படையினர் முன்னேறி வருவதைக் கண்ட நான்கு போராளிகளும் உடனடியாக சிறப்பு தளபதிக்கு தகவல் கொடுத்துவிட்டு படையினர் மீது எதிர்த் தாக்குதலை தொடுத்தனர். படையினருடனான சமர் தொடங்கியதும் முகாமிலிருந்து தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதலை பல திசைகளையும் நோக்கி நடாத்தத் தொடங்கினார்கள். சிறப்பு தளபதி தனது அணியினருடன் வந்து சேர்வதற்கிடையில் படை



மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ


யினரின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்தி கப்டன் டயஸ் மணாளன் (சண்முகநாதன் சிறீராம் - சுழிபுரம் யாழ்ப்பாணம்), லெப். பிரியன் (மதிவதனன் தயானந்தன்- மாணிக்கவாசகர் வீதி திருமலை), 2ம் லெப்.கெங்கை (சுப்பிரமணியம் அசோக்குமார் - நுவரெலியா), சிலோட்சன் (கந்தவனம் தேவராசா- வாகரை மட்டக்களப்பு) ஆகிய நான்கு போராளிகளும் வீரச்சாவைத் தழுவிக் கொண்டிருந்தனர். இதேவேளை படையினரும் அப் பகுதியினூடாகவும் முன்னேற முடியாது இழப்புக்களுடன் தமது முன்னேற்ற நடவடிக்கையை கைவிட்டு முகாமிற்கு மீண்டும் தப்பியோடியிருந்தனர். தப்பியோடிய படையினர் முகாமிலிருந்து தொடர்ச்சியான எறிகணை வீச்சுக்களை மேற்கொண்டனர். அவர்களுக்கு உதவியாக கடலில் இருந்தும் பீரங்கிப் படகுகளும் குண்டுகளை வீசித்தள்ளின. அவர்கள் வீசிய குண்டொன்று உதவியணியாக செயற்பட்டுக் கொண்டிருந்த பெண்கள் அணியினரின் பகுதியில் வீழ்ந்து வெடித்தபோது, கோட்டை, ஆனையிறவு, மின்னலென பல களங்கள் கண்ட லெப்.நளினியுடன் (சாந்தி செல்லையா — முள்ளியவளை முல்லைத்தீவு), மான்விழி (சிவகெங்கை செல்வராசா - அல்வாய் யாழ்ப்பாணம்), தர்சினி (வனிதா கந்தசாமி — வாழைச்சேனை மட்டக்களப்பு), சிறீமதி, ஆண்டாள் ஆகிய ஐந்து போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

சிக்சர் நடவடிக்கையின் மூன்று முயற்சிகளிலும் முன்னேற முடியாது இழப்புக்களைச் சந்தித்த படையினர், தமது நாயாறு, அலம்பில் பகுதிகளைக் கைப்பற்றும் நடவடிக்கையை தற்காலிகமாக கைவிட்டனர். இன்னொரு முகாமான முல்லைத்தீவில் இருந்து இதற்கான முயற்சியை மேற்கொள்ளும் திட்டத்துடனே இந் நடவடிக்கை கைவிடப்பட்டது என்பதை படையினர் மேற்கொண்ட தொடர்ந்து நடவடிக்கைகள் நிரூபித்தன. ஆனால் அதற்கிடையில் புலிகளோ மண்கிண்டிமலை முகாமை முற்றாக தாக்கியழிப்பதற்கான வேவுப்பணிகளை தீவிரப்படுத்த தொடங்கியிருந்தனர். ஏராளமான வேவுப்புலிகள் இந் நடவடிக்கைக்காக படையினரின் முகாங்களின் உள்ளேயே நடமாடிக்கொண்டிருந்தனர்.

(தொடரும்)

எஸ்.தீரன்

# தமிழர் விளையாட்டு விழா




தமிழீழ மண்ணை விட்டு புலம்பெயர் மண்ணிற்கு வந்து இயந்திரங்களோடு இயந்திரமாக வாழும் எம்மவர்கள் அந்த இறுக்கமான வாழ்வை விட்டு தங்கள் குடும்பத்துடன் மகிழ்வோடும், தமிழீழ நினைவோடும் வாழ்ந்த ஒரு இன்பமான நாளாக இருந்தது தமிழர் விளையாட்டு விழா-99. தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட தமிழர் விளையாட்டுவிழா, பிரான்ஸ் ஸ்தான் மைதானத்தில் கடந்த 22.08.99 ஞாயிற்றுக்கிழமை காலை 10.40 மணியளவில் பிரெஞ்சுப் பணியகப் பிரதிநிதி தேசியக்கொடியை ஏற்றிவைக்க தொடர்ந்த அமைதி வணக்கத்துடன் ஆரம்பமாகியது. சிறுவர் முதல் முதியோர் வரை விளையாட்டுக்களைப் பார்க்கவும் அதில் பங்குபற்றவும் மிகுந்த ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும் காணப்பட்டனர்.

எமது மக்களின் பாரம்பரிய விளையாட்டுக்களான கயிறு இழுத்தல், கிளித்தட்டு, முட்டி உடைத்தல், தலையணைச் சண்டை போன்ற விளையாட்டுக்களில் எல்லாம் பலரும் பங்குபற்றி வெற்றிபெற்றதைப் பார்க்கும்போது பிரான்சில் ஸ்தான் மைதானத்தில் நிற்கும் ஞாபகமே இல்லாமல், எம் தாய் மண்ணில் இருப்பதுபோன்ற ஓர் உணர்வே எல்லோரிடத்திலும் காணப்பட்டது. உதைபந்தாட்டம், துடுப்பெடுத்தாட்டம், கரப்பந்தாட்டம், சங்கீதக்கதிரை, மற்றும் சிறுவர்களின் விளையாட்டுக்கள் ஒரு புறமும், குறிபார்த்துச் சுடல் இன்னொருபுறமும் நடைபெற்றுக்கொண்டிருந்தது.

இதற்கெல்லாமிடையே வந்தவர்களின் பசி, தாகத்தைப்போக்க தமிழீழ உணவகம் தமிழீழ பாரம்பரிய உணவுகளான ஒடியற்கூழ், அப்பம், தோசை என்பவற்றுடன் நிறைந்த சுவை மிக்க சிற்றுண்டி வகைகள், குடிபானங்கள் போன்றவற்றையும் விற்பனைசெய்துகொண்டிருந்தது.

நடைபெற்றுக்கொண்டிருந்த விளையாட்டுக்களில் கயிறிழுத்தல், முட்டியுடைத்தல், கிளித்தட்டு மறித்தல் போன்றவை இங்கு புலம்பெயர் வாழும் சிறுவர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றதோடு அவர்களுக்கு எம் தாய்மண்ணின் சில நிகழ்வுகளை நினைவுபடுத்தியதாகவும் அமைந்திருந்தது.

அத்தோடு இவ்வருடம் இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் முதற் தடவையாக 14 வயதிற்கு உட்பட்டவர்களுக்காக நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப்போட்டியும் பல பெற்றோர்களின் மனதைக் கவர்ந்திருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. இதேபோலவே கயிறிழுத்தல் போட்டியிலும் பெண்களுக்கான கயிறிழுத்தல் இம்முறையே முதல் தடவையாக நடைபெற்றதென்பதும் குறிப்பிடத்தக்கது.

மைதானத்தின் ஒருபுறம் ஈழமுரசு, தமிழ்ச்சோலை போன்றவற்றால் நடாத்தப்பட்ட பொது அறிவுப்போட்டிகளும் பலரது வரவேற்பையும் சம்பாதித்துக் கொண்டன.

இவையெல்லாவற்றிற்கும் மேலாக அங்கு வந்திருந்தோர் அனைவரையும் தன்வசம் ஈர்த்திருந்தார் சுவிஸ் ஈழநாதம் புகழ் திரு. திருநாமசிங்கம் அவர்கள். ஏனெனில் தொடர்ந்து மூன்றுமணி நேரத்திற்கும் மேலாக கொழுத்தும் வெய்யிலில் தன் உடலை வருத்தி ஓர் சிலையைப்போல் காட்சிகொடுத்து எம் தமிழீழத்தில் அல்லல்படும் மக்களுக்காய் நிதி சேகரித்தார். பொதுவாக அங்கு வந்திருந்தோர் அனைவரும் அன்று மகிழ்ச்சியை அனுபவித்துக்கொண்டிருந்த போதும் இவர் தனித்துநின்று தன்னை எம் தேசமக்களுக்காய் வருத்திய விதம், மிகுந்த பாராட்டை மட்டுமல்ல; பலருக்கும் தம்மைத்தாமே சிந்திக்கத் தூண்டவும் வழிவகுத்தது.

இத்தோடு இவ்விழாவில் இன்னொரு நிகழ்ச்சியாக ஈழநிலா இசைக் குழுவினரால் நடாத்தப்பட்ட இசை நிகழ்ச்சி பலரது கரகோசம் நிறைந்த பாராட்டுக்களையும் பெற்றிருந்தது.

இறுதியில் அன்றைய தினம் அங்கு குழுமியிருந்தவர்களிற்கு மட்டுமல்லாது தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நல்வாய்ப்புப் பரிசான புதிய Citron Saxo மகிழுந்து (கார்) தமக்குக் கிடைக்குமா என எதிர்பார்த்த அனைவருக்குமே விடையைக்கொடுத்தது நல்வாய்ப்புச் சீட்டுத்தெரிவு. இந் நல்வாய்ப்புச் சீட்டுத்தெரிவில் நல்வாய்ப்பாளராக 0541 என்ற இலக்கத்தையுடைய நபர் அன்று மைதானத்தின் நடுவே அலங்கரிக்கப்பட்டபடி நின்ற புதிய மகிழுந்தை தனதாக்கிக்கொண்டார். இறுதியில் தேசியக்கொடி இறக்கும் வைபவத்துடன் அன்றைய விழா இனிதே முடிவுற்றது.

*- கவிப்பிரியன்*

**பிரான்ஸ் தமிழர் விளையாட்டு விழாவின்போது ஈழமுரசு வெளியிட்ட சிறப்பிதழில் தவறுதலாக விடுபட்ட ஏனைய பிரான்ஸ் விளையாட்டுக்கழகங்கள்**

**நல்லூர் ஸ்தான் விளையாட்டுக் கழகம்:** பிரதான விளையாட்டு கிறிக்கெட் போட்டிகளில் பல வெற்றிகளை எடுத்துள்ளார்கள்.
Champion du France B Division இல் 1997ம் ஆண்டில் வெற்றி பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

**வள்ளுவன் விளையாட்டுக் கழகம்:** பிரதான விளையாட்டு - கரப்பந்தாட்டம். இவர்கள் மாவீரர் வெற்றிக்கிண்ணம் உட்பட பல வெற்றிகளை தமதாக்கிக்கொண்டார்கள்.

**தீப ஜோதி விளையாட்டுக் கழகம்:** பிரதான விளையாட்டு - கரப்பந்தாட்டம்.

**த.ஐ.விளையாட்டுக்கழகம்:** பிரதான விளையாட்டு - கரப்பந்தாட்டம் இவர்கள் பல வெற்றிகளை எடுத்துள்ளார்கள்

**யங்கீஸ் விளையாட்டுக் கழகம்:** பிரதான விளையாட்டு - மென்பந்து துடுப்பெடுத்தாட்டம். இவர்கள் பல வெற்றிகளை பெற்றுள்ளார்கள்.

**தமிழர் விளையாட்டுக் கழகம் 95:** இவர்கள் பல சிறந்த மெய்வல்லுநர்களை தங்கள் வசம் வைத்துள்ளார்கள்.

**றிம்மஸ் விளையாட்டுக் கழகம்:** பிரதான விளையாட்டு மென்பந்து துடுப்பெடுத்தாட்டம். இவர்கள் பல முறை இறுதி ஆட்டத்திற்குச் சென்றுள்ளார்கள்.



இவ் வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்வன் டன்சன் வசந்தன், செல்வி யுவானி குணாளன் ஆகியோரை பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

## குறள் முற்றம்

'கேடு இல் விழுச் செல்வம் கல்வி
ஒருவர்க்கு மாடு அல்ல மற்றயவை'


நாம் தேட வேண்டிய பெரும் செல்வம் அழியாத கல்விச் செல்வம் ஆகும். மற்ற செல்வங்களோ செல்கின்ற செல்வங்களே ஆகும்.

## உங்கள் கைவண்ணம்

**செல்வி சாருமதி செல்வநேசன்**

*வயது: 07 (20.01.1992)*

*கம்பேர்க், ஜேர்மனி*



நாய்

1. நாய் வீடு மிருகம்.
2. நாய் வீட்டைக் காக்கும்.
3. நாய் நன்றியுள்ள மிருகம்.
4. நாய் குட்டி போடும்.
5. நாய் இறைச்சி சாப்பிடும்.

## அறிவியல் முற்றம்

**சொற்சிதறல் எண் - 45**

பிள்ளைகளே! சொற்களைக் கண்டுபிடிக்க முயன்று பாருங்கள். முடியாவிட்டால் விடை அடுத்தவாரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | ╳ 3 | 4 | 5 |
| 6 | ╳ 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 |
| ╳ 16 | 17 | 18 | ╳ 19 | ╳ 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 |

1. 1–2 இனிய இசை தரும் வாத்தியம் ஒன்றின் பெயர்.
2. 4–5 சத்தம் என்றும் சொல்லலாம். ஒலி என்றும் சொல்லலாம்.
3. 8–10 குடம் என்றும் சொல்லலாம். தாளம் போடவும் உதவும்.
4. 12–15 தளபதி கிட்டுவும் சக தோழர்களும் உயிர்த் தியாகம் புரிந்த கடல். இங்கு எழுத்துக்கள் குழம்பியுள்ளன.
5. 17–18 சிறிய நீர்த் தடாகம். இங்கு வலமிருந்து இடமாக உள்ளது.
6. 24–25 கனடாவில் இருக்கும் ஒரு நகரம்.
7. 1–11 நாங்கள் இது உடையவர்களாக இருக்கவேண்டும் கோழைகளாக இருக்கக்கூடாது.
8. 12–22 பொறி என்றும் சொல்லலாம். இங்கு எழுத்துக்கள் குழம்பியுள்ளன.
9. 8–23 கிழக்கு ஐரோப்பாவில் உள்ள ஒரு நாடு.
10. 4–14 படகு என்றும் சொல்லாம்.
11. 5–15 இந்து சமயத்தில் உள்ள ஒரு பிரிவு. இங்கு எழுத்துக்கள் குழம்பியுள்ளன.

**சொற்சிதறல் எண் நாற்பத்தி நான்கின் விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| ண | | த | ரா | சு |
| பா | ர | வ | ண் | டி |
| சோ | | ளை | ப | ய |
| ம | ழை | | ரு | கு |
| ம் | வா | ன | ம் | ர |




## குட்டிக்கதை படிப்போம்

### ஒட்டகச்சிவிங்கியின் ஆசை

(கடந்தவாரத் தொடர்ச்சி...)

நூற்றுக்கணக்கான குருவிகள் கூடுகட்டும் வேலையில் இறங்கின. அடுத்த முப்பது நிமிடங்களில் ஒரு பெரிய கூடு ஒட்டகச்சிவிங்கியின் கழுத்தில் அழகாகத் தொங்கியது.

'நன்றி குருவிகளே! வருகிறோம்!' என்ற ஒட்டகச்சிவிங்கி கீழே குனிந்து கூட்டைத் தரைக்கருகில் கொண்டுவந்து, 'ஏ! குட்டி! இதோ நீ கேட்ட கூடு! ஏறிக்கொள்!' என்றது.

குட்டிச் சிவிங்கியும் மகிழ்ச்சியுடன் அந்தக் கூட்டில் ஏறி உட்கார்ந்துகொண்டது. தாய்ச் சிவிங்கி கழுத்தைத்தூக்கி நடக்க ஆரம்பித்தது. அப்பொழுது அந்தப் பெரிய கூடு அசைந்து ஆடியது. தாய்ச் சிவிங்கி நடக்க நடக்க, அந்தக் கூடும் விடாமல் ஆடிக்கொண்டே வந்தது. அது குட்டிச் சிவிங்கிக்கு வேடிக்கையாக இருந்தது.

சிறிது நேரத்திற்குப் பின் மாலைப் பொழுது வந்துவிட்டது. மழை வருவதற்கு அடையாளமாக இருட்டிக்கொண்டுவந்தது. கூண்டில் குட்டிச்சிவிங்கியைத் தூக்கிக் கொண்டு தாய்ச் சிவிங்கியால் வேகமாக நடக்க முடியவில்லை. வழியும் கரடு முரடாக இருந்தது.



அப்பொழுது திடீரென ஒரு பெரிய கர்ஜனை; காடே அதிரும்படியான கர்ஜனை. அப்படி கர்ஜித்தது ஒரு பெரிய சிங்கம்! அந்த கர்ஜனையைக் கேட்டதும் ஒட்டகச்சிவிங்கி பயந்து நடுநடுங்கி வேகமாக ஓட முயற்சித்தது! ஆனால் அதனால் வேகமாக ஓட முடியவில்லை!

கர்ஜித்துக்கொண்டுவந்த சிங்கம், ஒட்டகச் சிவிங்கி தூரத்தில் போய்க்கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டது. உடனே துரத்த ஆரம்பித்துவிட்டது. ஒட்டகச் சிவிங்கி முடிந்தவரைக்கும் வேகமாக ஓடியது. ஆனால் சிங்கமோ ஒட்டகச் சிவிங்கியின் அருகில் வந்துவிட்டது. ஒட்டகச்சிவிங்கி பயந்து இன்னமும் வேகமாக ஓட முயல, அதன் கழுத்திலிருந்த கூடும் வேகமாக ஆட ஆரம்பித்தது. அந்த ஆட்டத்தில் கூண்டிற்குள் இருந்த நார்களும், குச்சிகளும் கொஞ்சம் கொஞ்சமாகக் கலைந்து தளர்ந்துபோய் விட்டன. அதனால் கூட்டிற்குள் ஓட்டைகள் ஏற்பட, குட்டிச் சிவிங்கி 'தொப்' பென்று கீழே விழுந்துவிட்டது. இதுதான் நல்ல சமயமென்று சிங்கம் சிவிங்கிக்குட்டியின்மீது பாயத் தயாரானது!.....

'ச்சோ... சிங்கம் சிவிங்கிக் குட்டிமீது பாய்ந்துவிட்டதா?.....' இல்லை! ஏன் தெரியுமா?... திடீரென்று ஆகாயத்திலிருந்து பல தீப்பந்தங்கள் எரிந்தபடியே, அந்தச் சிங்கத்தின் முகத்தில் விழுந்தன. சிங்கம் எரியும் தீப்பந்தங்களைக் கண்டு பயந்து திரும்பி ஓடிவிட்டது. அப்படி அந்தத் தீப்பந்தங்களை சிங்கத்தின்மீது எறிந்தது யார் தெரியுமா?

கீழே விழுந்த சிவிங்கிக் குட்டி திரும்பிப் பார்த்தது. ஓடிக் கொண்டிருந்த தாய்ச் சிவிங்கியும் திரும்பிப் பார்த்தது. தீப்பந்தங்கள் விழுவதையும், சிங்கம் பயந்து ஓடியதையும் அவை பார்த்து ஆச்சரியப்பட்டன. எதிரே தூக்கணாங்குருவிகளின் தலைவன் தன் கூட்டத்துடன் வந்து கொண்டிருந்தது.

'ஒட்டகச் சிவிங்கியாரே! நாங்கள் கூடு கட்டித் தர மறுத்தபோது, எங்களைக் கோபித்தீர்கள். ஆனால் உங்களுக்கு இப்படி ஏதாவது ஆபத்துவரும் என்று எங்களுக்குத் தெரியும். மரத்தின் மேலேயிருந்து உங்களைப் பார்த்துக்கொண்டேயிருந்தோம். இந்தச் சிங்கம் வருவதையும் பார்த்தோம். உடனே சிங்கத்தை விரட்ட எங்கள் பழைய கூடுகளைக் குச்சிகளில் மாட்டி, நெருப்பில் கொளுத்தி நாங்கள்தான் சிங்கத்தின்மேல் போட்டோம்!' என்றது.

'அம்மா! இப்படியெல்லாம் நமக்கு ஆபத்து வரும் என்று தெரிந்திருந்தால் நான் இந்தக் கூட்டிற்கு ஆசைப்பட்டிருக்க மாட்டேன்' என்றது குட்டிச்சிவிங்கி.


'குருவி நண்பர்களே! பாசத்தால் இந்தக் குட்டிச் சிவிங்கி கேட்டதையெல்லாம் தரவேண்டும் என்று ஆசைப்பட்டேன். அதனால் தான் உங்கள் புத்திமதியையும் கேட்கவில்லை! உருவத்திலும் வலிமையிலும் சிறிய அற்பப் பறவைகள் என்று நினைத்து உங்களைக் கோபித்துவிட்டேன். உண்மையில் நீங்கள்தான் புத்திசாலிகள்! நீங்கள் மட்டும் வராமலிருந்தால் அந்தச் சிங்கத்திற்கு நாங்கள் பலியாகியிருப்போம். எங்களைக் காப்பாற்றிய உங்களுக்கு நன்றி!' என்றது தாய்ச் சிவிங்கி.

(முற்றும்)

## கோள்களின் அட்டவணை

| கோள்கள் | சூரியனிலிருந்து சராசரித் தூரம் கோடி கிலோ மீற்றர்களில் | சூரியனைச் சுற்றும் காலம் | | சந்திரன்களின் தொகை | தன்னைத் தானே சுற்ற எடுக்கும் காலம் |
|---|---|---|---|---|---|
| | | வருடம் | நாள் | | |
| புதன் (Mercury) | 5.8 | - | 88 | - | 88 நாட்கள் |
| வெள்ளி (Venus) | 10.8 | - | 225 | - | 25 மணித்தியாலங்கள் |
| புவி (Earth) | 14.9 | - | 365 1/4 | 1 | 24 மணித்தியாலங்கள் |
| செவ்வாய் (Mars) | 22.8 | 1 | 322 | 2 | 24 மணி 37 நிமிடம் |
| வியாழன் (Jupiter) | 77.8 | 11 | 315 | 16 | 9 மணி 55 நிமிடம் |
| சனி (Saturn) | 142.7 | 29 | 167 | 17 | 10 மணி 14 நிமிடம் |
| யூரேனஸ் (Uranus) | 287.0 | 84 | 7 | 5 | 10 மணி 48 நிமிடம் |
| நெப்டியூன் (Neptune) | 449.7 | 164 | 289 | 2 | 15 மணி 40 நிமிடம் |
| புளூட்டோ (Pulto) | 590.0 | 248 | 255 | 1 | 6 நாள் 9 மணி |

## கண்டுபிடியுங்கள்



சென்ற வார விடை 14 தொப்பிகள்

## அறிவித்தல்

கடந்த 22.08.99 அன்று பிரான்சில் நடைபெற்ற தமிழர் விளையாட்டுவிழாவில் ஈழமுரசு 'உங்கள் இல்லம்' சிறுவர்களுக்காக நடாத்திய பொது அறிவு – சித்திரப் போட்டிகளின் முடிவுகள் அடுத்த வார ஈழமுரசில் வெளியாகும் என்பதை அறியத்தருகின்றோம்.




**யாழ்.சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியைச் சேர்ந்த த.பிரபாகரன் எழுதிய இச் சிறுகதை, அகில இலங்கை தமிழ் மாணவர்களுக்கான சிறுகதைப்போட்டியில் முதல் இடத்தைப் பெற்றுக்கொண்டது**

# கனவுகள் மெய்ப்படும்

'டாண்... டாண்... டாண்'

பாடசாலைமணி மும்முறை அடித்து ஓய்ந்தது. எனது சைக்கிளைப் பாடசாலை வளாகத்தினுள் நிறுத்திவிட்டு அதிபரின் அலுவலகத்தினை நோக்கி நடந்தேன். எனது இதயம் பட்டாம் பூச்சியாய்ப் படபடத்தது.

அதற்குக் காரணமிருக்கின்றது. ஏனெனில் இன்றுதான் நான் ஆசிரியத்தொழிலுக்கு அடியெடுத்து வைக்கின்ற முதல்நாள். இதுவரை நான் சந்தித்திராத அனுபவமென்பதால் உள்ளூர ஒரு சிறு நடுக்கம். அதிபர் அலுவலகத்திலிருந்த ஆசிரியர் வரவேட்டினில் கையொப்பத்தை வைத்துவிட்டுப் பாடநூல்களை எடுத்துக்கொண்டு தரம் எட்டு வகுப்பறையினுள் நுழைந்தேன்.

'குட் மோர்னிங் சேர்!'

முப்பத்துமூன்று பிள்ளைகளின் குரலும் சுருதி பிசகாமல் ஓங்கி ஒலித்தன.

'குட் மோர்னிங். பிள்ளையள் ஏன் நிக்கிறியள்? இருங்கோ' எனக் கூறியவாறு மெதுவாய்ப் புன்னகைத்தேன். மாணவர்கள் கதிரையில் அமர்ந்ததும் ஒருமுறை அனைவரையும் நோட்டமிட்டேன். புதிய ஆசிரியரைக் கண்ட மகிழ்ச்சி அனைவரின் முகத்திலும் அப்பட்டமாய்த் தெரிந்தது.

'பிள்ளையள்! என்ர பேர் கௌசிகரன். நான் அண்மையிலிருந்து உங்களுக்குத் தமிழ்ப்பாடம் படிப்பிக்க வந்திருக்கிறன். அதால பாடத்தைப் படிக்கமுதல் உங்கட எல்லாற்ற பேரையும் ஒருக்காச் சொல்லுங்கோ' எனக் கூறிவிட்டுக் கதிரையில் அமர்ந்துகொண்டேன்.

'ஓம்! ஓம்! சொல்லுறம் சேர்!'

மாணவர்களின் குரல் உற்சாகமாய்க் கிளம்பியது.

'தம்பி! உமக்கென்ன பேர்?'

'ரமேஷ் சேர்'

'என்ர பேர் கண்ணன்'

'குமார் சேர்'

எல்லோரும் வரிசையாய் தங்களின் பெயரை என்முன்னே ஒப்பித்துக் கொண்டு வருகையில், கடைசி வாங்கில் சுவரோரமாய்த் தூங்கி விழுந்துகொண்டிருந்த 'அவனை' அப்போதுதான் முதன் முதலாகப் பார்த்தேன். எல்லோரும் தத்தமது பெயரைக்கூறி முடித்து, தன்னுடைய முறை வந்ததுகூடத் தெரியாமல் கடைவாயில் இருந்து உமிழ்நீர் வடிய அவன் தூக்கத்தில் மிதந்து கொண்டிருந்தான்.

'ரமேஷ்! அந்தப் பெடியன் ஏன் படுத்திருக்கிறான். ஏதாவது வருத்தமோ?'

என ரமேஷ் என்கின்ற மாணவனை வினாவினேன்.

'இல்லை சேர்! இவன் நெடுகலும் இப்பிடித்தான். ஒழுங்காப் பள்ளிக்கூடமும் வாறதில்லை. வந்தாலும் பாடமொண்டும் வடிவாப் படிக்காமல் நித்திரை கொள்ளுறதுதான் இவன்ர வேலை. இதால இவனை நாங்கள் 'நித்திரைச்சாமி' எண்டுதான் கூப்பிடுறனாங்கள்' அவன் கூறி முடித்ததும் வகுப்பறை முழுவதும் 'கொல்' லென்ற சிரிப்பலை கிளம்பியது. அந்தச் சிரிப்புச் சத்தம்கேட்டு 'நித்திரைச்சாமி' மலங்க மலங்க விழித்தவாறு எழுந்து நின்றான்.

'தம்பி உமக்கென்ன பேர்?'

'சுமார்... சேர்'

தயங்கித் தயங்கி அவன் வார்த்தைகள் வெளிவந்தன.

'சுகுமார்! வகுப்புக்கு நான் வந்ததைக் கூடக் கவனிக்காமல் படுத்திருக்கிறீர். ஏதாவது வருத்தமோ?'

..........

பதிலேதும் பேசாமல் நீதிமன்றக் கூண்டில் நிற்கும் குற்றவாளி போன்று தலைகுனிந்தான். சில நிமிடங்கள் மௌனம் அங்கு தன் ஆட்சியை நிலைநிறுத்தியது. திமரென அந்த மௌனத்திரையை என் கடுமையான வார்த்தைகள் கிழித்தெறிந்தன.

'சுகுமார்! நான் கேட்டது காதில விழேலையோ?'

............

அதற்கும் பதிலில்லை. ஆனால் அவனுடைய மேசைமீது ஒன்றன் பின் ஒன்றாக நீர்த்துளிகள் விழத்தொடங்கின. அழுகின்றான்போலும். 'சே! இந்தப் பெடியனை வீணாய் அழ வைச்சிட்டனே! மனதுக்குள் ஒருமுறை என்னை நானே சபித்துக்கொண்டேன்.

மெதுவாய் அவன் நிமிர்ந்தான். அவன் கன்னத்தில் கண்ணீர் இருகோடுகளை வரைந்துவிட்டிருந்தது.

'ராத்திரி முழுக்க நான் நித்திரை முழிப்புசேர்'

'ஓ! அப்ப ராத்திரி முழுக்கப்படம் பாத்திருக்கிறாய் போல. என்ன படம்? படையப்பாவோ?'

'இல்லை சேர்! நான் ராத்திரி பேக்கரியில வேலை செய்தனான். நான் அங்க வேலை செய்யாட்டி எங்கட குடும்பம் இருந்த இடத்தில புல்லு முளைச்சிருக்கும் சேர்' இன்னமும் அவன் கண்களிலிருந்து நீர் ஊற்றெடுத்துப் பாய்ந்துகொண்டிருந்தது.

'அப்ப உன்ர அப்பா... அம்மா....?'

'நவாலிச் 'சேர்ச்சில்' புக்காரா குண்டுபோட்டு, அதில அப்பா செத்திட்டார். ஆறுமாசத்துக்கு முந்தி மிதிவெடியில அம்மான்ர ரண்டு காலும் போட்டுது. அம்மாவையும் தங்கச்சியையும் நான் வேலை செய்துதான் காப்பாத்தவேணும்.

அவன் கூறி முடித்ததும், என் விழியோரங்களிலும் இலேசாக நீர்த்துளிகள் எட்டிப்பார்த்தன. நெஞ்சுக் கூட்டுக்குள் இனம் புரியாத வலியொன்று எழுந்தது.

'சுகுமார்! நீ மட்டும் உழைச்சு உன்ர குடும்பத்தைக் காப்பாத்த முடியுமோ?'

'முடியும் சேர்! நான் உழைச்சு என்ர தங்கச்சியை நல்லாய் படிக்க வைப்பன்.'

அந்தப் பிஞ்சுள்ளத்தின் எதிர்காலக்கனவுகள் என் காதில் பலமாக எதிரொலித்தன. தொடர்ந்து பாடத்தைக் கற்பிக்கும் மனோநிலை எனக்கில்லை. மாணவர்களைப் புத்தகத்தை எடுத்து வாசிக்கும்படி கூறிவிட்டு மெதுவாய்க் கதிரையில் அமர்ந்தேன். என் சிந்தனைச் சூழல் முழுவதும் சுகுமாரைச் சுற்றியே வந்தது. பாவம்! இந்தச் சின்ன வயசில இவனுக்கு இவ்வளவு பெரிய சுமையா? முதலாம் பாடம் முடிந்து நான் அந்த வகுப்பறையைவிட்டு வெளியேறும் வரையில் இந்தக் கேள்வியே என்னைச் சுற்றி வட்டமிட்டது.

* * *

இடைவேளை நேரம். ஓய்வறையில் அமர்ந்து 'பிளாஸ்க்கில்' கொண்டுவந்த தேநீரை அருந்திவிட்டு, பாடசாலையைச் சுற்றி வந்துகொண்டிருந்தேன். அப்போதுதான் அந்தக் காட்சி என் கண்ணில் பட்டது. 'கன்ரீனில்' மாணவர்கள் விதவிதமாகத் தின்பண்டங்கள் வாங்கி உண்பதைச் சுகுமார் ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.



'சுகுமார், இஞ்சவா'

மெதுவாகச் சுகுமாரை அழைத்தேன். பவ்வியமாக என்னருகில் வந்து நின்றான். பொக்கற்றிலிருந்து ஒருபத்துருபாய்த்தாளை எடுத்து நீட்டினேன். அவன் ஒன்றும் புரியாமல் என்னைப் பார்த்தான்.

'இதைக்கொண்டுபோய்க் கன்ரீனில் ஏதாலும் வாங்கிச்சாப்பிடு'

'வேண்டாம் சேர்!'

'சுகுமார்! காலமை சாப்பிடாமல் வந்திருப்பாய். ஏதேனும் வாங்கிச் சாப்பிடு'

'இல்லை சேர் சாப்பிட்டுட்டுத்தான் வந்தனான்'

அவன் சொல்வது பொய் என்பதை பசிநிரம்பிய அவன் விழிகள் எடுத்துரைத்தன. நான் வலுக்கட்டாயமாக அவன் கையில் காசைத் திணித்தேன். நன்றியுடன் என்னைப்பார்த்துச் சிரித்துவிட்டு வகுப்பை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

'சுகுமார்! 'கன்ரீனுக்குப்' போகேலையோ?'

'இல்லை சேர்! தங்கச்சி இண்டைக்குக் கொப்பி வாங்கோணும் எண்டு சொன்னவள். இந்தக் காசில வாங்கிக் குடுக்கப்போறன்'

கூறிவிட்டு விரைந்தான். 'இந்தச் சின்ன வயசில தன்ர சின்னச்சின்ன ஆசையைக்கூடத் தூக்கியெறிஞ்சிட்டு இவனால எப்பிடி இருக்கமுடியுது?' நான் வியந்துபோய் நின்றேன். பின்னர் அதிபரின் அலுவலகத்திற்குச் சென்று என் நியமனம் சம்பந்தமான சில படிவங்களை நிரப்புவதில் மூழ்கியதால் நேரம் போனதே தெரியவில்லை.

'டாண்... டாண்... டாண்' எனப் பாடசாலை மணி ஒலித்தபோதுதான் கடிகாரத்தைப் பார்த்தேன். நேரம் இரண்டுமணி முப்பது நிமிடம். பாடசாலை முடிவடைந்ததால் வெள்ளைப் புறாக்களாய் மாணவர்கள் வெளியேறிக் கொண்டிருந்தனர். நான் எனது கைப்பையினைச் சைக்கிளில் வைத்துக்கொண்டு பாடசாலை வாசலை அண்மித்த போதுதான் அது நிகழ்ந்தது. காற்றைக் கிழித்துக்கொண்டு விரைந்து வந்துகொண்டிருந்த 'மினிபஸ்' ஒன்று, வீதியைக் கடக்க முயன்ற பாடசாலை மாணவர்கள் மீது மோதாமலிருக்க வீதி யோரமாகச் சடாரெனத் திருப்ப, வீதியோரமாச் சென்ற மாணவனொருவன் மீது பஸ் சட்டென்று ஏறியது.

'அம்...மா... ஆஆ!' என்ற அவல ஒலி காதில் விழ, இரத்தத் துளிகள் என்முகத்தில் விசிறப்பட்டன. ஓடிச்சென்று அடிபட்ட மாணவனைப் பார்த்தேன். அது... அது... சுகுமார்! பார்த்தவுடனேயே அவன் இறந்து விட்டானென்று புரிந்தது. தலைசிதறி, மூளை பிதுங்கி, இரத்த வெள்ளத்தில் தான் கண்ட கனவுகளைப் போலச் சின்னாபின்னமாய் சுகுமார் சிதறியிருந்தான். ஆனால் அவனது கையில்மட்டும் நான் கொடுத்த பத்தூ ருபாய்த் தாள் படபடத்துக் கொண்டிருந்தது.

'தங்கச்சிக்குக் கொப்பி வாங்கப்போறன் சேர்' அவன் சொன்ன வார்த்தைகள் என் காதில் மீண்டும் மீண்டும் ஒலித்தன. சுகுமார்! நீ செத்தாலும் உன்ர கனவுகள் சாகக்கூடாது! உன்ர தங்கச்சியை வளர்த்து, ஆளாக்கிப், படிப்பிக்க வைக்கிறது என்ர பொறுப்பு' என்ற முடிவினை மனதில் எடுத்துக்கொண்டு சுகுமாரின் சடலத்தை இருகரங்களாலும் தூக்கியவாறு கூட்டத்தை விலக்கி நடக்கத் தொடங்கினேன்.

# சினிமாப் பாடல்களின் தரம் தாழ்ந்தது ஏன்?

*'தமிழ்ச் சினிமாப் பாடல்களின் வரலாறு முதல் பாடல் ஆசிரியரான மதுர பாஸ்கரதாஸில் ஆரம்பித்து சுமார் 650 பேர் வரை அணிவகுத்துள்ளனர். சினிமாப் பாடல்கள் ஒன்றும் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டதல்ல! சிவபெருமான் எழுதிய பாடலிலேயே குற்றம் கண்டுபிடித்த நக்கீரன் பரம்பரை நம்முடையது. என் பாடல்கள் எம்மாத்திரம்! என்று சொல்கிறவர் வைரமுத்து. சினிமாப்பாடல்கள் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிய சிறிய கண்ணோட்டம் இது!'*

கணபதி கணேசன்

உலக சினிமா வரலாறு தன் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடி விட்டது. இந்திய சினிமா கொஞ்சம் தாமதமாகத்தான் ஆரம்பமானது. இந்தியாவுக்கு வந்த முதல் சினிமாப்படம் 'ஏசு சிறிஸ்து' அவர் இந்தியாவுக்குள் நுழைந்த வருடம் 1886.

ஏசுநாதரைத் திரையில் பார்த்த இந்தியர்கள் வாய் பிளந்து நின்றனர். அவர்களது ஆசை எல்லாம் தங்கள் கடவுளான இராமரையும், கிருஸ்ணரையும், சிவனையும் இதே மாதிரித் திரையில் கண்டு பக்திப் பரவசம் அடைய முடியுமா என்பதே! அப்படி ஏங்கிய ஒருவர்தான் இந்தியாவின் திரைப்படத் தந்தை என்று இன்று வர்ணிக்கப்படும் தாதா சாகேப்பால்கே.

ஆதியில் வந்த படங்கள் பேசாத படங்கள். மௌனமாய்த் திரையில் நகரும் காட்சிகளுக்கேற்ப வசனங்களை எந்த ஊரில் காட்டுகின்றார்களோ அந்த ஊரின் மொழியில் எழுதிக் காண்பித்தார்கள். முதலில் இந்தியாவுக்கு வந்த பேசாத படம் 'ராஜா ஹரிச்சந்திரா'

தமிழ்நாட்டில் மௌனப்படத்தை அறிமுகம் செய்து வைத்தவர் ஆர்.நடராஜா முதலியார். தமிழ்த் திரைப்படத்தின் வரலாறு இங்குதான் ஆரம்பமாகின்றது.

1919-ல் தமிழில் வாசகங்களை எழுதிக் காட்டி வெளியிட்ட திரைப்படம் 'கீசகவதம்' ஆங்கிலம், இந்தி, தமிழ் ஆகிய மொழிகளில் இவை எழுதிக்காண்பிக்கப்பட்டன. அக்காலக்கட்டங்களில் புராண இதிகாசக் கதை



வாலி

களே படங்களாக எடுக்கப்பட்டன. காரணம் கதை மக்களுக்கு ஏற்கனவே தெரிந்திருந்தமையாகும்.

கீசகவதத்தை அடுத்து லவகுசா, ருக்மணி சத்தியபாமா, மார்க்கண்டேயா' என்று வரிசையாய்ப் புராணப்படங்கள். இப்படி மௌனப் படங்களாக இந்தியாவில் வெளிவந்த படங்கள் 147.

திரைப்படத் துறையின் முன்னோடிகளான மேலை நாடுகளில் 1920-களின் கடைசிப் பகுதியில் படங்கள் பேச ஆரம்பித்தன. 1929-ல் இந்தியாவில் பேசும் படம் அறிமுகமாயிற்று. 1931 மார்ச் 14-ம் திகதி பம்பாய் மெஜெஸ்டிக் தியேட்டரில் இந்தியாவின் முதல் பேசும் படம் திரையிடப்பட்டது. படம் 'ஆலம் அரா' அதே ஆண்டின் அக்டோபர் 31-ம் திகதி சென்னை மாகாணம் 'சென்ட்ரல்' தியேட்டரில் 'காளிதாஸ்' திரையிடப்பட்டது. இத்திரைப்படம் பேசியது மட்டுமல்லாமல் பாடவும் ஆரம்பித்தது. இத்திரைப்படத்தின் விளம்பரத்தை 22.10.1931 சுதேச மித்திரன் இதழில் இப்படி விளம்பரம் போட்டிருந்தார்கள். 'உயர்ந்த கீர்த்தனங்களும் தெளிவான பாடல்களும் நிறைந்த தமிழ், தெலுங்கு பாசைகளில் தயாரிக்கப்பட்ட முதல் பேசும் படம்.

அதில் ஒலித்த பாடல்கள்:

'எந்தரா நீதானோ'

'சுராக சுதா'- இவை இரண்டும் தெலுங்குக் கீர்த்தனைகள்.

'ராட்டினமாம் காந்தி கைப் பாணம்' என்று தமிழ் பாடியது திரையில்.

'கதர்க்கொடி கப்பலில் தோணுதே' இவை இரண்டு பாடல்களை எழுதியது மதுர பாஸ்கரதாஸ் எனும் 'மதுரை வீரன்' இவரே தமிழின் முதல் திரைப்படப்பாடலாசிரியன். இவரது இயற்பெயர் 'வெள்ளைச்சாமி! சிறந்த காந்தியவாதியான இவர் தேசபக்தி நிறைந்தவராக இருந்தமையால் 'வள்ளி திருமணம்' என்னும் புராணப் படத்தில்கூட ஆங்கில ஆட்சியை எதிர்த்து 'வெட்கங்கெட்ட வெள்ளைக் கொக்குகளா? விரட்டி அடித்தாலும் வாரீகளா?' என்று எழுத முடிந்தது.

மதுர பாஸ்கரதாஸ் ஆரம்பித்து வைத்து திரைப்படப் பாடலின் பாதையில் இன்று வரை சுமார் 650 பேருக்கும் மேற்பட்ட பாடலாசிரியர்கள், கவிஞர்கள், வந்துபோய்க் கொண்டிருக்கின்றனர்.

மௌனப்படங்கள் பேச ஆரம்பித்த காலங்களைத் தொடர்ந்து பாட ஆரம்பித்தன. பாடத் தெரிந்தவர்களே நடிக்கவும் முடியும் என்று எழுதப்படாத விதி அமைக்கப்பட்டது. நல்ல சரீரமும், உடற்கட்டும் கொண்ட பலர் திரைப்படங்களில் பவனி வரத்தொடங்கினர்.

பி.யு சின்னப்பா பாகவதர், தியாகராஜ பாகவதர், கேபி சுந்தராம்பாள், டி.ஆர் மகாலிங்கம் என்று பட்டியல் நீண்டது. தியாகராஜ பாகவதர் 'ஏழிசை மன்னர்' ஆனார். தமிழ்த் திரைப்படத்தின் முதலாவது 'சூப்பர் ஸ்டார்' இவர்தான். இவர் பாடி நடித்த 'ஹரிதாஸ்' மூன்று ஆண்டுகள் தொடர்ந்து ஒரே தியேட்டரில் ஓடியது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

அப்பொழுதெல்லாம் ஒரு திரைப்படத்தில் 40,50 திரைப் பாடல்கள் ஒரே படத்தில் இடம் பெறும். பாடல்களே படத்தின் தரத்தை நிர்ணயம் செய்தன. அதனால் பாடகர்கள் சிறந்த நடிகர்களாகவும், சூப்பர் ஸ்டாராகவும் உருவாக்கப்பட்டார்கள். 'பவளக்கொடி' திரைப்படத்தில் 55 பாடல்கள். 'பக்த ஜெயதேவா' வில் 43 பாடல்கள். இது பாடல்கள் அரசோற்றிய காலம்.

தமிழர்தம் வாழ்க்கை பாடல்



களோடும், இசையோடும் பின்னிப் பிணைந்தவை. இவற்றை யாராலும் தடுக்கவோ பிரிக்கவோ முடியாமல் போய்விட்டது. பாடல்களை விட்டுப் பிரிய முடியாமல் தமிழன் வாழ்வு பாடல்களுக்குள் மூழ்கிப் போனது.

இவன் வாழ்வு தாலாட்டில் ஆரம்பமாயிற்று, விளையாட்டு, தெம்மாங்கு, கும்மி, காவடி, நலுங்கு, தெருக்கூத்து, இப்படியாகத் தொடர்ந்து அவன் வாழ்வு ஒப்பாரியில் முடிந்தது.

தியாகராஜ பாகவதர் காலத்தில் பாபநாசம் சிவனின் கொடி உயர்ந்தது. இவரே ஒரே படத்தின் அத்தனை பாடல்களையும் எழுதினார்.

'தீன கருணாகரனே நடராஜா நீலகண்டனே'

'கிருஷ்ணா! முகுந்தா! முராரே!'

'வதனமே சந்தர பிம்பமே!'

'மன்மத லீலையை வென்றார் உண்டோ?' பாபநாசம் சிவன் முதலில் பாட்டு எழுதிய படம் 'சீதா கல்யாணம்' இது 1935-ல் வந்த படம். 1977 வரை இவர் பாடல்கள் எழுதிக்கொண்டிருந்தார்.



பழனி பாரதி

அக்காலப் பாடல்களில் பக்தி மணம் கமழும் காதல் இருக்கும். ஆனால் காமம் இருக்காது. எப்போதும் எல்லோரும் பாடத் தக்கதான பாடல்கள் அப்போது இயற்றப்பட்டன. கர்நாடக இசையை அறிந்திராதோர்கூட அதன் இசை லயத்தில் வயப்பட்டிருந்தனர்.

'நான் தமிழிசைக்கு என்னால் இயன்ற தொண்டு புரிந்து வந்திருக்கின்றேன். எனக்குச் செய்யப்படும் கௌரவம் தமிழன்னைக்குச் செய்யப்படும் கௌரவமாகவே கருதுகிறேன்' என்று அன்று அடக்கமாகச் சொன்னார், ஆயிரம் பாடல்கள்வரை எழுதியிருந்த பாபநாசம் சிவன்.

ஆனால் தற்காலப் பாடலாசிரியர் வைரமுத்துவோ- தமிழருக்கான கிரீடம் எனக்கே என்கிறார். நோபல் பரிசுக்குத் தமிழை உயர்த்தப் போகிறேன் என்கிறார். ஆனால், பாடல்களின் தரம்?!

அன்றைய படப் பாடல்கள் புராணப் பாடல்களாக இருந்தாலும், தமிழ்ப் பாடல்களைக் காதுகுளிரக் கேட்க முடியாமலே இருந்தது. 'குடில குந்தள குவலய தள நீல கோபாலா' என்ற பாடல் தமிழ்தானா என்கிறார் பிற்காலத்தில் தமிழில் பாடல் எழுதிய கவிஞர் நா. காமராசன். இவரே பிற்காலத்தில் 'வௌக்கு வைக்கும் நேரத்திலே வந்தானம்மா?' என்று பாடல் எழுதியது வேறு விடயம்.

பேசும் படங்கள் வந்த காலத்தில் புராணப் படங்களாகவே இருந்ததால் ஆபாசம் என்று தனியாகக் காட்ட வேண்டிய ஆபாசம் திரையில் இருந்ததில்லை. புராணப் படங்கள் காலம் மாறிச் சமூகப் படங்கள் ஆரம்பமான போதுதான் ஆபாசத்தின் தோற்றம் ஆரம்பமாயிற்று என்கிறது. தமிழ்த்திரைப்படவரலாறு.

முதல் தமிழ்ச் சமூகப் படமான 'மேனகா'வில் நடித்த டி.பி ராஜலட்சுமி 1936-ல் ஒரு படத்தைத் தானே தயாரித்தார். இதன் கதை வசனம், நடிப்பு, இயக்கம் முதலியவற்றோடு பாடல்களும் இவரே. முதல் சகலகலா வல்லவ்ரும் இவர்தான் போலும்.

இவர் இப்படத்தில் எழுதிய பாடல் 'ஆசைவச்சேன் உன் மேல நான் ஆளானேன் மாசி மாதம்' நம்புங்கள் இது ஒரு பெண்ணே எழுதியது. அதுவும் பிராமணப்பெண். இதுதான் ஆரம்பமாகவும் இருத்தல்கூடும்.

காதலன் காதலியைப் பார்த்துப்பாடும் பாடலாக

'பேசுவது கிளியா? இல்லை
பெண்ணரசி மொழியா?
கோவில் கொண்ட சிலையா?
கொத்து மலர் கொடியா?'

என்று அன்றைய கவியரசர் பாடல் எழுதினால், இன்றைய கவியரசர்.

'டெலிபோன் மணிபோல் சிரிப்பவள் இவளா? மெல்போன்...' என்கிறார்.

கண்ணதாசன் காலத்திலேயே மிக நல்ல பாடல்களை எழுதிய வாலி 'லைலா லைலா லைட்டா தான் அடிப்பாசைட்டு!' என்கிறார்.

'இது ஒரு பொன்மாலைப் பொழுது' என்று ஆரம்பமான வைரமுத்துவின் திரைப்படத்தின் வரலாறு இப்போது மன்மதக் கவிஞராகி விட்டாரோ என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. அதற்கு இவர் பயன் படுத்திய மன்மதன். காமன் போன்ற சொற்களே சான்றாக இருத்தல் கூடும்.

'மன்மதன் தம்பி, மன்மதவேதம், மன்மதக்குயில்கள், மன்மதக் கடல், மன்மத இரவு, மன்மத மல்லிகை, மன்மதக் கனவு, மன்மதன் வாரிசு, மன்மத அம்புகள் மன்மத வேளை, மன்மத நேரம், மன்மத விழா, மன்மதச் சங்கம், மன்மதன் பேரன், மன்மதக்காற்று, மன்மத நாடு, மன்மதச்சேதி, மன்மதலீலை, காமதேவன் கலை, காமன் காலை, காமன் பூவில், காமன் யாத்திரை, காமன் வேதம், காமன் குளம், காமன் கோவில், காமன் வழக்கு, காமன் வீட்டு தென்றல், காமன் தோட்டம், காமன் கணை, காமன் மகள், காமன் தம்பி, காமன் நாடு, காமன் விதி, காமன் கட்சி, காமன் தேசம் என்று 37 திரைப் படங்களில் பாடல்கள் எழுதியதாக திரைப்பாடல் ஆய்வாளர் சண்முகசுந்தரம் தன் ஆய்வு நூலில் குறிப்பிட்டுள்ளார். இது 1989-ல் சொல்லப்பட்டது.

இப்போதைய பாடல்களில் சமஸ்கிருதம் மட்டும் அல்லாமல் ஆங்கிலச் சொற்களே அதிகம் அரசோச்சுகின்றன. ஆங்கிலச் சொற்களுக்கு இடையே தமிழைத் தேடவேண்டி இருக்கிறது.

'மடோனா பாடலா நீ



வைரமுத்து

மும்பாயின் மாடலா நீ
டயானா சாயலா நீ' என்று பாடல் எழுதியிருக்கிறார் வாலி. இதில் எத்தனை சொற்கள் தமிழ்! இவரேதான் 'ராசாத்தி உன்னைக் காணாத நெஞ்சு காத்தாடி போலாடுது' என்றும் 'எப்படி எப்படி?' என்றும் கொச்சையாகவும் எழுதினார்.

'சிலர் ஆசைக்கும், தேவைக்கும் வாழ்வுக்கும் வசதிக்கும் ஊரார் கால் பிடிப்பார்
ஒரு மானமில்லை அதில் ஈனமில்லை - அவர் எப்போதும் வால் பிடிப்பார்'

அவரைப் பற்றியே இவரே விமர்சனம் செய்தது போல் இருக்கிறதல்லவா?

'திரைப் பாடல்கள் என்பவை என்னவோ ஏழு கடல்களைத் தாண்டிப்போய்கொண்டு வருகின்ற சமாச்சாரமாக இவர்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்' என்று எல்லாப் பாடலாசிரியர்களையும் கேள்விகேட்ட அறிவுமதி அண்மைய பாடல் ஒன்றில்,

(தொடர்ச்சி 22-ம் பக்கம்)

## நித்தி வாகன சேவை

உங்களின் வீட்டுத் தளபாடங்களை பெரிய 20M³ வாகனத்தில் பாதுகாப்பாக ஒரே தரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் லோர்த், ஐரோப்பிய நாடுகளுக்குமான வாகன தேவைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.



நித்தி:
0148050214
0613342518
0607348051 / 0148385825

Pub Fr 23032

## ஈழமுரசு

Eelamurasu Weekly

ஐரோப்பிய வணிக சேவை

உங்கள் அன்புக்குரியவர்களின்

★ பிறந்த நாள் வாழ்த்துக்கள்
★ திருமண அழைப்பிதழ்கள்
★ நிகழ்ச்சி அரங்கேற்றங்கள்
★ அறிவித்தல்கள் - நினைவஞ்சலிகள்

என்பவற்றை வரலாற்றுப் பதிவாக்க நாங்கள் தயாராக உள்ளோம்

## ரவி வாகன சேவை

உங்கள் அனைத்து வாகனத் தேவைகளுக்கும் நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது

தொலைபேசி: 0148765190
0607622689



Pub Fr 23034

உத்தியோகபூர்வ

## மொழிபெயர்பு சேவை

கிருஷ்ணபிள்ளை மாயவன்
15 ஆண்டுகளாக அரச அங்கிகாரம் பெற்று சட்ட ஆலோசனைகள் மொழிபெயர்ப்புகள் சேவையாற்றிவருகிறோம்

39, bd de la Chapelle
75010 Pari s
M°: LA CHAPELLE OU GARE DU NORD
TEL/FAX: 0140345341

எம்.ஜி.ஆர் வீடியோ & ரெக்ரைல்ஸ் நிறுவனத்தின் உள்ளே

Pub Fr 23035

## P.S வாகன சேவை

உங்கள் தேவைகளுக்கு
24 மணி நேர சேவை

தொடர்புகட்கு:
ஜேர்மன் - T.P: 01717489297
பிரான்ஸ் - T.P: 0164721143
கொர்னலியூஸ் (Cornelius) குமார்



Pub Fr 23037

## தென்றல் இல்லம்

உங்கள் இல்லங்களில் நடைபெறும் வைபவங்களுக்கு வேண்டிய அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்வதுடன், சுவை மணம் குன்றாத உடன் கோப்பித்தூளும் பெற்றுக்கொள்ள

60, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle
Tel: 01 42 09 36 09

Pub Gra.

## Lune

LUNE
ELECTRONIQUE INFORMATIQUE



3590F

- Processeur CYRIX 300
- Carte Mère TX PRO II
- Disque Dur 3,2 Go Ultra DMA
- SDRAM 32 Mo Pc 100
- Carte Video 4 Mo AGP
- Carte Son 16 Bits PCI
- Lecteur CD ROM 40X
- Lecteur Disquette 3,5"
- Ecran 15" MPR II
- HP PMPO 160 W
- Clavier 105 Touches PS/2
- Souris PS/2
- Botier Alim Moyan Tour ATX

GARANTIE 2 ANS

**உங்கள் வீடுகள், வர்த்தக நிலையங்களில் சகல விதமான திருத்த வேலைகளுக்கும் காத்திருக்கின்றார்கள்.**

## 'VICTOR SARL'

கட்டட, மின்சார, தண்ணீர், கழிப்பறை திருத்த வேலைகளை மிகக் குறைந்த கட்டணத்துடன் திறமையான தொழிலாளர்களைக்கொண்டு அமைத்துக்கொள்ள

**VICTOR SARL**
43, Rue de la Reunion, 75020 Paris
Tel: 01 44 93 90 30

## சிவாசினி வாகன சேவை

*Chivashini Transport*

வாகன தேவைகளுக்கு
24 மணி சேவை

தொடர்புகட்கு:சிவாஜினி வீடியோ

06 14 61 69 84
01 42 09 23 59
01 49 37 26 03
01 42 05 44 04



Pub Fr 23036




*Réseau*

## WWA

உலகம் உங்கள் கைகளில்




## மீண்டும் அதிகரித்த நிமிடங்களுடன் உங்கள் சேவையில்!

**Maghrab** 80 Mn
**Afrique** 50 Mn
**Asie** 50 Mn

Surcharge : 3F à chaque connexion.

**KING Telecom**
92, Rue de Bellville,
75020 Paris.
(M°: Pyrénées)
Tél.: 01 44 62 93 96
Fax: 01 44 62 94 96

**WWA**
86, Rue de Bellville,
75020 Paris.
(M°: Pyrénées)

**KING Telecom**
33, Place de Général de Gaulle
60100 Creil.
(Place de la Gare)
Tél:03 44 55 41 59
Fax: 03 44 55 42 51

வர்த்தகர்களுக்கு விசேட கழிவுண்டு

அனைத்துத் தொடர்புகளுக்கும்: 01 43 15 17 17 - விற்பனையின் பின்னான சேவைகளுக்கு: 01 43 15 17 18

# கலைந்த சொற்கள் எண்: 38

கீழ் உள்ளவற்றில் 130 சொற்கள் கலைந்திருக்கின்றது. சொற்கள் நேர்கோட்டிலும் இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ், கீழிருந்து மேல், மூலைப்பக்கம் என இருக்கும். இச் சொற்களை கண்டு பிடித்து கோடிடவும். இச் சொற்களில் சேராத சில எழுத்துக்கள் மேலதிகமாக உள்ளன.

| | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ந | டு | நா | ள் | ம் | த | ள் | தா | க | பு | து | இ | ல் | ல | ம் | தீ |
| க | ள் | க | ங் | க | ட | க | வ | ப் | த் | ல் | ல் | க | ப | ம் | ய |
| நீ | ட | க | பி | மு | ர் | ர் | ர | ப | ல | ம | யி | ரு | னி | ண | க |
| ச | தி | ன் | க் | ழு | பு | வ | வி | ம் | ம் | ட | ட் | தி | று | கு | ம் |
| ன் | ன | மா | மா | ம | ப் | ய | ய | து | பை | ப | ப | டு | டு | ற் | ளை |
| ர் | ர | வீ | ன் | தி | தா | தி | ல் | றி | ய | வ | ர | ம் | ந | ச | பு |
| கை | ன் | ன | யி | தி | த் | பு | ப | சி | சி | ர் | ப | ம் | ப | க | ல் |
| ன | வ | ள் | த் | ப | ம | பு | ப் | யா | வ | ஸ் | து | ம | வெ | ல் | ர் |
| ன் | ர் | தி | க | ங் | சு | ப | க | னி | த | ப் | பா | ன | து | ய | ர் |
| பு | ப் | டு | க | க் | ம் | றை | மு | ன் | வ | ம் | பு | ம் | ப் | வ | க |
| பு | க | ள | ம் | க | மா | சா | ல் | ச | ர | க | வி | டு | ப | டு | ம் |
| ன் | ம் | ழ் | ங் | ர | யி | ற் | க | அ | ம் | ப | ல | ம் | க | ப | பீ |
| அ | ட | ள | ச் | ன் | ரு | று | ய | ப | பு | இ | க | ப் | ம் | ள | ர |
| இ | க | ழ் | ச் | சி | த் | த | ளி | ர் | த் | த | ல் | வி | பு | ட | ம் |
| க | வி | ல | ந | த | த | ல் | கு | பு | தி | தி | லூ | ப் | ல | ர் | இ |
| ழ் | இ | சி | ல் | க | ல் | ந | க் | ன் | மா | ம | ரி | ப் | பு | க | ந |
| த | நெ | த | ல | ப | ம் | ம் | ர | நே | ன் | பி | ரி | கை | ல் | ர | ல் |
| ல் | ய் | ர் | வ | ம் | ட | ப | ச | ப | ற | வை | த | க் | த | த | வ |
| செ | த | ய | ர் | ம் | ப | ல் | வி | னை | ச் | சொ | ல் | க | த் | தி | ர |
| ப | ல் | லி | க் | ண | லி | ன் | ப | டு | றை | மு | ன் | வ | ல | பு | வு |
| மை | லா | ல் | க | ய | ல் | வி | ழி | ழ் | த | இ | உ | ச | அ | க | ம் |
| மை | ன் | மெ | ம் | ப | ரு | வ | ம் | ச | ம் | லை | க | ம் | ப | ள | ம் |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சன்னியாசி | சற்குணம் | சடுதியில் | கவனிப்பு | வன்முறை | சிப்பம் | யாப்பு | பசுங்கதிர் | புத்திமான் | புத்தியினன் | தித்திப்பு |
| மங்களம் | கடுப்பு | மன்னவன் | பின்னர் | புன்னகை | கரசல் | வரம்பு | கம்பளி | கயிறு | தளிர்த்தல் | பத்திரிகை |
| பிரிப்பு | சிவப்பு | தப்பானது | மத்தாப்பு | பத்தியம் | சிறிது | புதியவர்கள் | கறுத்தல் | வர்க்கம் | தகரம் | வரப்பு |
| கரம்பை | கப்பம் | புயல் | சிறியவர்கள் | முனிவர் | நீதிமான் | களங்கம் | மாக்கள் | விபத்து | முகம் | தும்மல் |
| பம்பரம் | கப்பல் | கடகங்கள் | மக்கள் | முழுமதி | சிவபதி | திட்டம் | மட்டுநகர் | இல்லம் | திருகல் | மதுவம் |
| அகலல் | விகடம் | துயர் | புகழ்ச்சி | கரன்சி | இகழ்ச்சி | நடுநாள் | நல்லவர் | நல்கல்* | செய்தல் | கணனி |
| சிலம்பன்* | அம்பலம் | கலப்பு | கல்லூரி | விடுபடு | விம்பம் | அன்பு | பின்நேரம் | நம்பல்* | பயறு | நெய்தல் |
| மெல்லியர்* | கல்லாமை* | இகழ்தல் | பல்வினை | சல்லியம்* | கயல்விழி | பயணம் | பருவம் | சரக்கு | பல்லி | |
| கைக்கவசம் | உவத்தல்* | புலவன் | அலத்தல்* | விடுதலை | வம்சம் | நகம் | கம்பளம் | மரிப்பு | விலகல் | தரகர் |
| கம்பீரம் | பம்பல் | கபம் | தீயகம்* | படம் | வல்லை | மென்மை | இதழ் | பறவை | பிரிகை | கத்தி |
| அகம் | இடம் | களம் | பசளை | புற்று | பகல் | பணம் | வீரர் | நீசன் | கடன் | நல்வரவு |
| அரம் | வஸ்து | மனம் | தவம் | குடும்பஸ்தன் | பறைசாற்றுதல் | | தாவரவியல்வினைச்சொல் | | சும்மாயிருத்தல் | |
| வெதுப்பகம் | | | | | | | | | | |

பெயர்: ..................................................

முகவரி: ..................................................

..................................................

..................................................

பிறந்த நாள்: ..................................................

சந்தாதாரராயின் சந்தா எண்: ..................................................


கலைந்த சொற்கள் எண்-38 இற்கான விடைகள் வந்துசேர வேண்டிய கடைசி நாள்: **10.09.1999**

(போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி:

கலைந்த சொற்கள்
**Eelamurasu**
**22, Rue Perdonnet, 75010 Paris, France.**

## கலைந்த சொற்கள் எண்–37 விடைகள்



ஈழமுரசின் சென்ற எண் கலைந்தசொற்கள் பகுதிக்கு 235 இற்கும் மேற்பட்ட வாசகர்கள் விடையெழுதி அனுப்பியிருந்தார்கள். அவர்களில் சரியான விடையெழுதிய வாசகர்களில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து வாசகர்களின் விபரங்கள் வருமாறு.

1) தியாகபாலன் துமிலன்
93160 Noisy le Grand,
France.

2) ச. இராசன்
5012 Schonewerd (SO),
Switzerland.

3) வி. பிரசன்னா
70199 Stuttgart,
Germany.

4) மைதிலி யோகலிங்கம்
0586 Oslo,
Norway.

5) சஜி சங்கர்
7430 Ikast,
Denmark.

**இவர்களுக்கு *Lune International* நிறுவனத்தினரால் பெறுமதி மிக்க நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.**

**இந்த கலைந்த சொற்கள் எண்-38 இற்கான சரியான விடையும், கலைந்த சொற்கள் எண்- 39ம், 16 - 22 செப்டெம்பர் 99 ஈழமுரசில் வெளிவரும்.**

* இவ்வடையாளம் இட்டப்பட்ட சொற்களுக்கான விளக்கம். இச்சொற்கள் தமிழ் மொழியகராதியிலிருந்து எடுக்கப்பட்டவை.

| | | |
|---|---|---|
| நல்கல் | - | ஆசைப்பெருக்கம், ஈதல் |
| சிலம்பன் | - | குறிஞ்சி நிலத்தலைவன் |
| நம்பல் | - | நம்புதல் |
| மெல்லியர் | - | மாதர் |
| கல்லாமை | - | அறியாமை |
| கபம் | - | கோழை |
| சல்லியம் | - | ஆயுதநூனி, முள், எழும்பு |
| உவத்தல் | - | மகிழ்தல் |
| அலத்தல் | - | துன்புறல் |
| தீயகம் | - | நகரம். |

தயாரிப்பு: சவேயூ சவுந்தரராஜா

(20-ம் பக்கத் தொடர்ச்சி)

## சினிமாப் பாடல்களின் தரம் தாழ்ந்தது ஏன்?

மூச்சுவிடும் தாஜ்மகாலை
நான் பார்க்க
விட்டுவிட்டு தாமரைகள் தாம்
பூக்க
மச்சம் மட்டும் தொட்டுக்
கொள்ள நீ கேட்க,
மிச்ச இடம் கோபப்பட்டு
நான் பார்க்க' என்கிறார்.

மொத்தத்தில் எல்லாப்பாடல் ஆசிரியர்களும் தட்டுக்கு முட்டையிடும் கோழிகள் ஆகிப் போன கேவலம்தான் திரைப் படத் துறையில் நடந்தேறி இருக்கிறது!

'நீ சிந்தும் வேர்வை தீர்த்த மாகும்!' (காதலன்)

'தேவதை நீ குளித்த நீரைத் தீர்த்தமென்றே நான் குடிப்பேன்!' (ஜீன்ஸ்)-என்று பாடல் எழுதிப்புறப்பட்டு விட்டார் வைரமுத்து.

பழனி பாரதியோ நான் ஆங்கிலத்தில்தான் பாட்டெழுதுவேன். தமிழில் எழுதமாட்டேன் என்பதுபோல் பாடல்கள் எழுத ஆரம்பித்துவிட்டார். அப்படியே தமிழில் எழுதினால் 'சிக்கிக்கிச் சம்மா! சிக்கிக்கிச்சம்மா! கூடைக்குள்ளே கோழி ஒண்ணு சிக்கிக்கிச்சம்மா! என்றுதான் எழுதுவேன் என்கிறார்.

ஆபாசமாக எழுதுவதில் அன்றைய கவியரசர்களும் சரி, இன்றைய கவியரசர்களும் சரி சளைத்தவர்கள் இல்லை என்றுதான் தோன்றுகின்றது.

'எட்டி எடு ஏழு பைசா- நான் தொட்டுத் தந்தா எட்டு பைசா' என்று கண்ணதாசனும்,

'பஞ்சு மிட்டாய் அஞ்சு ரூபா நீ பாதி தின்று தந்ததாலே லட்சரூபா! என்று வைரமுத்துவும் எழுதுகின்றனர்.

தொட்டுத்தந்தா ஒரு பைசாதான் அதிகமாக இருந்தது அப்போது, இப்போது லட்சமாகி இருக்கிறது, இதைவிடப் பெரிய மாற்றம் ஒன்றும் இல்லை.

இடையே சில நல்ல பாடல்கள் வந்துபோகாமல் இல்லை. தாஜ் மகாலைக்கூட 50KG தாஜ் மகால் என்று வைரமுத்துவும் மூச்சுவிடும் தாஜ்மகால் என்று அறிவு மதியும் சொல்கிறார்கள்.

தாஜ்மகால் காதலின் சின்னம் என்று போற்றப்பட்ட போதிலும் அதன் பின்னணியில் உள்ள அடக்குமுறை தாஜ்மகாலைக் கட்டி எழுப்பிய தொழிலாளிகளின் சோகத்தை இதுவரை எந்தப் பாடலாசிரியரும் சொன்னது இல்லை. மதுர பாஸ்கரதாஸில் ஆரம்பித்து திரைப்பாடல் வரலாறு தற்போது 650 பாடலாசிரியர்களைத் தாண்டி வந்தபோதும் ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தி இருப்பதாகக் கருதவேண்டியிருக்கிறது. கவியரசு வைரமுத்து தன் கவியரசு பட்டத்தைத் துறந்திருக்கிறார். தமிழுக்குச் 'சோறு' போடுவதாக அவர் வடித்துக் கொட்டிய ஆபாசத்தை என்ன செய்வார்? அடுத்த காலங்களில் அதைப்பற்றிச் சிந்திப்போம்!

நன்றி: செம்பருத்தி




# இரண்டாவது பால்

## 50 வருடங்களின் முன் வெளிவந்த சர்ச்சைக்குரிய பெண் விடுதலை நூல்

1930களின் பின் குடும்ப உறவை மையமாக வைத்து ஐரோப்பியரைத் தழுவிய கருத்துக்கள் ஆட்சிசெய்தன. ஆணும் பெண்ணும் இணைந்த குடும்ப அலகை ஊக்குவிப்பதற்காக அரசின் சிறப்பு உதவிகள் வழங்கப்பட்டன. இச் சிந்தனைகளின் மத்தியில் 1949ல் சீமன் டீ பேவோர் எனும் பிரெஞ்சுப் பெண் எழுத்தாளர் The Second sex எனும் நூலை வெளியிட்டார்.

தாய்மை பற்றிய அக்கால சிந்தனைகள் பெண்ணை புறம் தள்ளுவன என விவாதித்தார். ஆண் பெண் உறவுகள் பற்றிய பல்வேறு கருத்துக்களை எதிர்த்த இந் நூல் ஐரோப்பாவை உலுக்கியது. வத்திக்கான் இந்நூலைத் தடை செய்தது. இந் நூலை பெண்ணியல் அடங்காத்தனம் எனவும் பெண்ணியல்வாதிகளின் பாலியல் நூல் எனவும் ஆபாச நூல் எனவும் விமர்சனங்கள் எழுந்தன.

ஆனால் இவ் விமர்சனங்கள் நூலின் விற்பனையை அதிகப்படுத்தியது. மேலும் சீமன் ஒரு சிறந்த நாவலாசிரியரும் எழுத்தாளருமானதால் அவரது எழுத்துக்களை ஒதுக்க முடியவில்லை. ஆனாலும் .அக்காலத்து பெண்ணியல் இயக்கங்கள் மௌனம் சாதித்தன. இடதுசாரிகள் மௌனம் சாதித்தன.

ஆனால் நூல் பெண்களைச் சென்றடைந்த போது வரவேற்புக்கள் அதிகரித்தன. பல பெண்கள் குடும்பம் பற்றிய சிந்தனையை மீள ஆராய்ந்ததாக எழுதினர். அவ்வாறு எழுதப்பட்ட பல கடிதங்கள் இன்றும் பிரெஞ்சு தேசிய நூலகத்தில் உள்ளன. பெண்களுக்கு அப்போது வாக்குரிமை அற்ற சுவிஸில் வரவேற்பு கூடுதலாக இருந்தது. ஸ்பெயினில் மக்கள் இந்நூலை இரகசியமாக வாசித்தனர். எனெனில் இது அங்கு தடை செய்யப்பட்டிருந்தது.

1970களில் இந் நூல் பெண்ணியல்வாதிகளின் பிரதான வேதமாகப்பட்டது. வேலைக்குப் போகும் பெண் கருஅழிப்பு உரிமை என்பன பற்றி சீமனின் வாதம் பெண்ணியல்வாதிகளால் உயரப்பிடிக்கப்பட்டது.

இக்காலத்தில் சீமன் ஏராளமாக எழுதினார். தன் The Second Sex பற்றிய கருத்துக்களை சற்று மெதுமைப்படுத்தினார்.

இப் பெண்கள் எழுச்சி வரலாற்றின் முக்கிய நூலின் 50வது ஆண்டில் உலகம் பூராவும் சீமனின் எழுத்துக்கள் நினைக்கப்படுகின்றன.

*ஆதாரம்: Le Monde Diplomatique*

## ஆக்க சக்தி அவள்

கண்ணியம் காத்திடுவாள்
கடமைகள் செய்திடுவாள்
பெண்ணியம் பேசிடுவாள்
பெருமைதனைச் சேர்த்திடுவாள்

புத்தியைத் தீட்டிடுவாள்
புரட்சிகள் செய்திடுவாள்
புவிக்கு புதியதோர்
ஒளியே பாய்ச்சிடுவாள்

வீட்டு நலனுடனே
தேச நலன் பேசிடுவாள்
பெண்ணினத்தையே மோதும்
சிறுமைதனை போக்கிடுவாள்

புதுமைப்பெண் இவள்
பெரும் ஆக்க சக்தி இவள்

ஆக்கம்: நளாயினி தாமரைச்செல்வன்

# குத்துச்சண்டை வாரிசு

குத்துச்சண்டை ரசிகர்களுக்கெல்லாம் ஓர் புது வரவாகக் களத்தில் இறங்கியுள்ளார் லைலா அலி எனும் இளைய வீராங்கனை.

இந்த 21 வயதான லைலா அலி பிறந்ததே உலகின் மிகப் பிரபலமான குத்துச் சண்டை வீரர் முகமது அலிக்குத்தான். இப்படி இவர் பிறந்த இடமே இத் துறையில் சாதனைகளைப் படைத்தவர்கள் மத்தியில்தான் என்பதாலோ என்னவோ இந்த லைலா அலியின் குத்துச் சண்டையையும் மக்கள் மிகுந்த ஆவலுடன் பார்த்து ரசிக்கத் தொடங்கி விட்டார்கள். தற்போது அமெரிக்காவில் நிகழ்ந்துவரும் பெண்களுக்கு இடையேயான குத்துச். சண்டைப் போட்டிகளில் இந்த லைலா அலியின் திறமை பல இடங்களில் முத்திரை பதித்துள்ளதாம். இதைப் பற்றி லைலா அலி கருத்துத் தெரிவிக்கையில், என் அப்பா மூன்று முறை உலக சாம்பியன் விருதைப் பெற்றவர். ஆனால் என் குடும்பத்தில் என்னோடு 9 குழந்தைகள் இருந்த போதும் யாருக்கும் எங்கள் அப்பாவின் பெயரைக் காப்பாற்ற வேண்டும் என்ற நினைப்பு வரவில்லை. ஆனால் எம் குடும்பத்தின் கடைசி வாரிசான எனக்கு அப்பாவின் வழியில் தொடர்ந்துசெல்ல ஆசை. அதனால்தான் இத்துறையில் ஆவேசமாய் களம் இறங்கியுள்ளேன் என்கிறார் லைலா.



இவ்வாறு வெற்றிகளைத் தொடர்ந்து பெறுவது மட்டுமல்ல என் நோக்கம் அத்தோடு அதைவிடப் பெரிதாக உலக பெண்களுக்கான குத்துச்சண்டைப் போட்டியில் முதல் தர விருதையே எனதாக்க வேண்டும் என்பதுதான் தன் இலட்சியம் என்கிறார் இவர்.

ஆக வரவிருக்கும் 21-ம் நூற்றாண்டில் குத்துச்சண்டை உலகம் லைலாவின் வெற்றியைச் சொல்லும்.

# ஆதரவைத் தேடும் அரும்புகள்

மேற்குலக நாடுகள் மத்தியில் ஆண் குழந்தைகள் பிறந்தாலும் சரி பெண் குழந்தைகள் பிறந்தாலும் சரி அவர்களை அவர்களின் பெற்றோர்கள் பார்க்கும் நோக்கு ஓர் வடிவம்தான். ஆனால் ஆசியப் பகுதியில் உள்ள பெரும்பா



லான நாடுகளில் பிறக்கும் குழந்தைகள் மத்தியில் இவ்விடயம் தொடர்பாக பலதரப்பட்ட அனுபவங்களும் குழந்தைகளுக்கு நேரலாம்.

குறிப்பாக பெண் குழந்தைகளுக்கு துன்பமான அனுபவங்கள் நேரவாய்ப்புண்டு. இவையெல்லாம் தொலைக்காட்சி மூலமாகவோ பத்திரிகை மூலமாகவோ இங்குள்ள பெண்கள் மத்தியில் சேரும்போது . இவர்களில் ஓர் சிலர் மிகவும் வேதனையடைகின்றனர். அக்குழந்தைகளுக்கு தம்மால் ஏதாவது செய்ய முடியுமா எனவும் யோசித்துக்கொள்கிறார்கள்.

இப்படியான மென்மையான இதயமுள்ளவர்களில் ஒருவர் தான் பிரிட்டனைச் சேர்ந்த மில்ஸ் என்னும் பெண்மணியும். இவர் ஒருமுறை தொலைக்காட்சியொன்றில் சீனாவில் பெண் குழந்தைகளை ஒதுக்கும் பெற்றோரையும் அக்குழந்தைகள் ஒதுக்கப்படும்போது ஆதரவற்ற நிலையில் வாழும் பரிதாபத்திற்குரிய காட்சியையும் கண்ணுற்றார். அதன்பிற்பாடு அவரால் அந்நிகழ்ச்சியை மறக்க முடியவில்லை. தமக்கு ஏற்கனவே குழந்தை இருக்கும்போதும் அங்குள்ள பெண் குழந்தைகளில் ஒன்றை எடுத்துவளர்க்க விரும்பினார். அதன் பிரதிபலனாக அங்குள்ள அமைப்புகளுடன் தொடர்புகொண்டு தனக்குரிய குழந்தையைப் பெற சீனாவுக்குச் சென்றார்.

இவ்வாறு சீனாவிற்குச் சென்று ஓர் குழந்தையை தத்தெடுத்தது மட்டுமல்லாது, அக்குழந்தையைப் போலுள்ள வேறு பல குழந்தைகளும் வாழும் காப்பகங்களுக்குச் சென்றார். அப்போதுதான் அவர் தான் நேரடியாகக் கண்ட அப் பெண் குழந்தைகளின் துயரமான வாழ்வை வெளியுலகிற்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

அதாவது சீனாவில் குழந்தை கருவில் இருக்கும்போதே இது பெண் குழந்தை எனத் தெரிந்தாலே அவற்றை இல்லாமல் செய்யவே பெரும்பாலும் தாய்மார்கள் விரும்புகிறார்கள் என்றும் அதையும் மீறி பிரசவிக்க வேண்டிய நிலை வந்துவிட்டால் வைத்தியசாலையிலேயே அக் குழந்தையை தன்னந்தனியாக விட்டுவிட்டு தாம் மட்டும் வீடு சென்றுவிடுகிறார்கள். இதன் பின் அவ் வைத்தியசாலையில் உள்ளவர்கள் அக் குழந்தைகளை இவ்வாறான குழந்தைகள் வாழும் அரச காப்பகங்களிற்கு அனுப்பிவைக்கிறார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.


இவ்வாறு அரச காப்பகங்கள் என்று சொல்லப்படும் இந்த ஆதரவில்லாச் சிறுமிகள் வாழும் இல்லத்தைத் தாம் பார்வையிடும்போது அது முற்றிலும் ஓர் காப்பகம்போல் தென்படவில்லை என்றும் மாறாக வைத்திய சாலை போலவே காட்சியளிக்கிறதென்றும் கூறுகிறார் திருமதி மில்ஸ்.

ஆகவே தன்னைப்போலவே இங்குள்ள வேறுபலரும் அக் குழந்தைகளை தத்தெடுத்துக்கொண்டால் அவர்கள் வாழ்வு சந்தோஷமாக மலரும் எனவும் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

# சீன சமூக நலத்துறையில் பெண்கள்

சீனாவில் பெண்கள் சூறையாடப்படுவது மட்டுமின்றி ஏராளமான களவு, கொலை, கடத்தல், மோசடிகள் என்ற குற்றச்சாட்டுகளும் அதிகரித்து வருகின்றதாம். கடந்த ஆண்டு முதல் 6 மாதத்திற்குள்ளேயுமே கொலை, கொள்ளை, கடத்தல், கலப்படம் என 2,11,000 குற்றச்சாட்டுகளும் வழிப்பறிக்கொள்ளை, மோசடி என 6,81,000 குற்றச்சாட்டுக்களும், பதிவாகியுள்ளதாம். இதனால் குழப்பமடைந்த அரசு நாட்டில் சமூக நலனைப்பேணவும், இக்குற்றச்சாட்டுகளைக் குறைக்கவும் ஏராளமான பெண்களைக் கொண்டு புதிய காவல் படையை உருவாக்கி வருகிறது. இதனால் தற்போது ஏராளமான பெண்கள் பயிற்சி முகாம்களில் இணைக்கப்பட்டு பயிற்சி பெற்று வருகிறார்களாம். எனவே சீனாவின் இந்தப் புதிய முயற்சி அங்குள்ள பெண்களைச் சிறந்த முறையில் வாழவைக்க முடியும் என்பதை நிரூபிக்குமா என்பதே இங்கு முக்கியம்.






# பறக்கும் தட்டு

# கட்டுக்கதையா? முற்றிலும் உண்மையா?

(சென்ற வாரத் தொடர்ச்சி)

லியனார்டோ டாவின்சியே மோனாலிசா என்ற அதிசய ஓவியத்தையும் தீட்டியவர் ஆவார். ஒரே வாழ்க்கையில் தனி மனிதராக இவர் நிகழ்த்திய சாதனைகளை நம்ப முடியாமல் இருக்கிறது. ஓவியம், சிற்பம், கணிதம், பொறியியல், கட்டடக் கலை, விஞ்ஞானம், இசை, எழுத்துப் போன்ற துறைகள் ஒவ்வொன்றிலும் தனது திறமையின் முத்திரையை அவர் பதித்துள்ளார்., அவர் வரைந்த பொறியியற் படங்கள் இன்றும் விஞ்ஞானிகளுக்கு உதவுகின்றன. கேலிச்சித்திரங்களையும் முதன் முறையாகத் தயாரித்த புகழ் இவருக்கு உண்டு.

என்றோ ஒருநாள் மனிதன் மிகவும் சாதாரணமாக விண்ணிற் பறப்பான் என்று டாவின்சி எதிர்வு கூறியுள்ளார். அவர்



பிறந்த காலத்தில் தொழில் நுட்ப வசதி இல்லாவிட்டாலும் உலங்கு வானூர்தி விமானத்தில் இருந்து பாயும்குடை (Para Chute) பறக்கும் பலூன் (Baloon Craft) போன்றவற்றிற்கான வரைபடங்களை அவர் தீட்டி வைத்துள்ளார். பறக்கும் ஊர்திகள் காற்றில் சந்திக்கும் பொறியியற் பிரச்சினைகள் ஏரோடைனமிக்ஸ் (Aero Dynamics) எனப்படும். தரையில் ஓடுங்கார் சந்திக்கும் காற்று உதைப்பிற்கும், பறக்கும் விமானம் எதிர்க்கும் காற்றின் உதைப்பிற்கும் வித்தியாசம் இருக்கிறது. 50 மைல் வேகக்காற்றில் பறக்கும் 300 மைல் வேக விமானம் உண்மையில் 250 மைல் வேகந்தான் எடுக்க முடியும். இது போன்ற பொறியியல் விடயங்களை டாவின்சி கருத்தில் எடுத்துள்ளார். விமானங்கள் வடிவமைக்கும்போது ஏரோடைனமிக்ஸ் தரவுகள் முதற்கண் கவனிக்கப்படுகின்றன. இன்றைய தலை முறைக் கார்கள் கூடி இதைக் கவனத்தில் எடுத்துத் தயாரிக்கப்படுகின்றன. நீண்ட சுரங்கப் பாதையில் அதிவேகமாகக் காற்றைச் செலுத்திச் செய்யப்படும் பரீட்சைகளால் (Wind Tunnel Experiments) விமானத் தயாரிப்பில் பெரும் முன்னேற்றங் காணப்படுகிறது. கார்களும் இந்த வகையில் வடிவமைக்கப்படுகின்றன. விமானத் தயாரிப்பின் தலையாய குறி பறப்பவர்களின் பாதுகாப்பு என்பது கண்கூடு.

பிற உலகத்தோர் பயன்படுத்தும் பறக்குந் தட்டுக்கள் பற்றிய செய்திகள் ஒரு புறம் இருக்கட்டும். இரண்டாம் உலகயுத்தத்தைத் தொடர்ந்து உலகிற் தலைதூக்கிய அமெரிக்கா, ரஷ்யா ஆகிய இரண்டு வல்லரசுகளும் பறக்கும் தட்டுக்களை வடிவமைப்பதில் ஈடுபட்டதிற்குச் சான்றுகள் அண்மையிற் கிடைத்துள்ளன. அமெரிக்கா தனது திட்டங்களைக் கைவிடாது தொடருகின்றது. பெரும் தெருக்கடிளைச் சந்திக்கும் ரஷ்யா தொடர்வது துர்லபம். பன்னெடுங் காலமாகப் பறக்கும் தட்டுக்கள் பற்றி மனித இதய அடிப்பாகத்திலும், நாக்கின் நுனியிலும் அறிய வேண்டும் என்ற ஆசை இருந்து வருகிறது. ஆனால் இன்றைய நூற்றாண்டின் நடுப்பகுதியிற்தான் உலகளாவிய ரீதியில் ஒரு பேரார்வங் கிளம்பியுள்ளது.

பறக்கும் தட்டுக்களைப் பொது மக்கள் வானிற் கண்டதாகத் தெரிவிக்கும் செய்தித்தாள் தகவல்கள் முதன் முறையாக 1947-ல் காணப்படுகின்றன. இது போன்ற செய்திகள் மிகக் கூடுதலாக 1950 இற் பிரசுரமாகியுள்ளன. இரண்டு அரசுகளும் இச் செய்திகளை அடித்து மூடுவதிலும் மழுப்பி மறைப்பதிலும் ஈடுபட்டுள்ளன. இரண்டு நாடுகளும் பரீட்சார்த்தமாகத் தட்டுக்கள் போன்ற கலங்களைப் பறக்க விட்டிருக்கின்றன என்பது இப்போது நிரூபணமாகிவிட்டது. அமெரிக்காவின் விமானப் படையும், விண்வெளி நிறுவனங்களும் பறக்கும் தட்டுச் சம்பந்தமான பத்திரிகைச் செய்திகளைப் புளூபுக் (Blue Book) என்ற பதிவேட்டில் எழுதி வைத்ததோடு மக்கள் கண்டவற்றை அடையாளங் காண முடியாத அந்நியப் பொருள்கள் (U.F.O Unidenti Fied Fortign Objects) என்றும் பெயர்சூட்டியுள்ளனர். இது வொரு மறைக்கும் நடவடிக்கை என்று பத்திரிகையாளர்கள் இப்போது உணர்ந்துள்ளனர்.

அமெரிக்காவின் நெவாடா (Nevada) மாகாணத்தில் ஆதிகால நீர் வற்றிய நதிப்படுக்கையில் உலகின் மிக நீளமான விமான ஓடுபாதை காணப்படுகிறது. எங்கு நோக்கிலும் பொறியியலாளர், விமான ஓட்டிகள், சிப்பந்திகள் போன்றோரின் தங்குமிடங்கள் இங்கு அமைந்துள்ளன. இராட்சதக் கட்டடங்களுக்குள் விமான ஆராய்ச்சிகள், நிர்மாணங்கள் நடந்தபடி உள்ளன. பொது மக்கள் நெருங்க முடியாத ஆக்கூடுதற் பாதுகாப்பான தளமாக இது இருக்கிறது. கடந்த நான்கு தசாப்தங்களில் இங்கு தயாரிக்கப்பட்ட பிரத்தியேக விமானங்கள் சில 50 களிற் பிரபலமான யூ2 (U 2) உளவு விமானம், 60 களில் அமெரிக்கா உலகைக் கண்காணிக்கப்பயன்படுத்திய எஸ் ஆர் 71 (SR 71) உளவு விமானம், 80களில் றாடர் திரையில் படாமற் தாக்கும் திறன் மிக்க எ: 117 ஏ (F 117 A) போர் விமானம். பத்திரிகையாளர்கள் இங்கு என்ன நடக்கிறது என்று அமெரிக்க அரசைக்கேட்டபோது கிடைத்த பதில். 'அங்கு நாட்டின் பாதுகாப்பிற்கு அவசியமான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படுகின்றன. அதற்கு மேல் சொல்வதற்

## புதிய செய்திகளும் தொழில்நுட்பத் தகவல்களும்

கில்லை'

இன்று உளவு விமானங்களின் வேலையைச் செய்மதிகள் மிகவும் திருப்திகரமாகச் செய்கின்றன. ஆகவே நெவாடாத் தளத்தில் பறக்கும் தட்டு வடிவமைக்கும் வேலைகள் நடக்கின்றன என்று ஊகிக்க இடமுண்டு. அமெரிக்காவின் லொக்கீட் நிறுவனம் அரசிடமிருந்து பெற்ற ஒப்பந்தத்தின் காரணமாக இங்கு ஆராய்ச்சியும், கட்டுமானப் பணியும் நடத்துவதாக நம்பப்படுகிறது. அடையாளங்காண முடியாத அந்நிய பறக்கும் பொருள்கள் விண்ணில் அல்ல அமெரிக்க மண்ணில்தான் என்று அமெரிக்கப் பத்திரிகையாளர்கள் கூறுகின்றனர். பறக்கும் தட்டுத் தலைநகரம், உலகின் மிக இரகசியமான விமானத்தளம் என்ற பெயர்கள் நெவாடாவுக்குச் சூட்டப்பட்டுள்ளன.



பத்திரிகையாளர்கள் பழைய தினசரிகளைப் புரட்டிப் பார்க்கின்றனர். 1947-ம் ஆண்டு யூன் மாதம் தனது சொந்த விமானத்தில் வாஷிங்ரன் நகரில் கெனத் ஆர்னொல்ட் (Kenneth Arnold) என்பார் பறந்துகொண்டிருந்தார். மணிக்கு 1700 மைல் வேகத்தில் அவருடைய விமானத்தை முந்திக்கொண்டு 9 பறக்குந் தட்டுக்கள் சென்றன. பெரும் வர்த்தகரும் முன்னாள் காவற்றுறை அதிகாரியுமான ஆர்னொல்ட் உடனே தன்னுடைய குறிப்பேட்டில் யாவற்றையும் பதிந்துள்ளார். தரையிறங்கிய பின் விபரங்களைப் பத்திரிகையாளருடன் பகிர்ந்துள்ளார். அமெரிக்க விமானப்படை அதிகாரிகள் பத்திரிகைச் செய்திகளை நிராகரித்ததோடு ஆர்னொல்டின் புத்திக்கூர்மையை சந்தேகிப்பதாகவும் தெரிவித்துள்ளனர். இப்போது காட்சி மாறிவிட்டது என்று பத்திரிகையாளர்கள் மகிழ்ச்சி அடைகின்றனர். அமெரிக்கா பறக்கும் தட்டு ஆய்வில் தொடர்ந்து ஈடுபடுவதற்கு வேறு புறச் சான்றுகளுங் கிடைத்துள்ளன.

நீண்ட செட்டை உள்ள விமானத்தின் படிமுறை வளர்ச்சி வட்டத்தட்டு என்ற இறுதி நிலையில் முடியலாமென்று விண்வெளிப் பொறியியலாளர்கள் நம்புகின்றனர். வட்ட வடிவான விமானங்கள் தளம்பல் என்ற பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.. ஒரு வட்டத் தகரத்தைச் சுற்றி எறியும்போது அது எதிர்பாராத திசையிற் பறந்து மண்ணை நோக்கித் திரும்புவது இயல்பு. இதே பிரச்சினை பறக்குந்தட்டுகளுக்கும் உண்டு. ஒலியிலும் மிக மிகக் கூடிய வேகத்தைத் தட்டுக்க்ளை அமைப்போர் எதிர்பார்க்கின்றனர். அதுவரை திட்டங்கள் யாவும் இரகசியமாக வைக்கப் பட்டிருக்கும் என்று பத்திரிகையாளர்கள் நம்புகின்றனர். இங்கிலாந்து நிறுவனம் அவ்ரோ (Avro) கனேடிய அரசுடன் கூட்டாக 9 வீ(9V) அவ்ரோ கார் (Avrocar) என்ற வட்ட வடிவ விமானத்தைச் செய்துள்ளது. ஆனால் பங்காளிகளுக்குத் திருப்தி ஏற்படவில்லை. ரஷ்யா தான் தயாரித்த தேர்மோபிளேன் (Thermo Plane) என்ற பறக்குந்தட்டு பற்றிய செய்திகளை அண்மையில் வெளியிட்டுள்ளது. இதுவும் பெரும் பொருட்செலவு செய்தும் வெற்றியளிக்கவில்லை என்று ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

1953-ம் ஆண்டளவிலேயே லொக்கீட் நிறுவனம் தாம், 'நடுவில் செங்குத்து அமைப்புள்ள வட்ட உருவமான விமானத்தை வரைபட நிலையில்' வைத்திருப்பதாக அறிக்கை விடுத்துள்ளது. இது பறக்குந் தட்டைத் தயாரிக்கிறோம் என்று கூறும் சங்கேத மொழி என்பதில் ஐயமில்லை. இன்று கணிப்பொறி முன்னேற்றம் பல விமானங்கள் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு முடிவு கட்டியுள்ளன, பறக்குந் தட்டுகளின் அதிவேகத்தில் தளம்பற் பிரச்சினையை கணினி உதவி வடிவமைப்பு (CAD) அலகுகள் தீர்த்து வைக்கும் என்று நம்பப்படுகிறது. வில்லியம் பிளேக் (William Blake) என்ற இளைப்பாறிய விமானப்படைப் பொறியியலாளர் எமது குறிவேகம் மாத்திரமல்ல என்றுள்ளார். ஒரு மில்லியன் இறாத்தல் எடையைத் தூக்கியபடி வேகமாகப் பறக்குந் தட்டுத்தான் எமது தேவை என்பது அவருடைய கூற்று. இத்தகைய சாதனைக்கு நிச்சயம் அணு சக்தியில் இயங்கும் எந்திரம் தேவைப்படும். விமானத்தின் உருவம் மாறும்போது எரிபொருளும் மாறுவது அவசியம்.

பிற உலகிலிருந்து எமது பூமியைப் பார்க்க வந்தவர்கள் பற்றிய செய்திகள் ஆதாரமற்றவையா? அவர்கள் பயன்படுத்திய விண்வெளிக் கலம்தான் எமது பணிக்கு ஆதாரம் என்கிறார் மேற்கூறிய வில்லியம் பிளேக். அடுத்த நூற்றாண்டில் விமானங்களின் யுகம் முடிந்து தட்டுக்களின் காலம் ஆரம்பிக்கலாம் என்று வில்லியம் பிளேக் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஆதாரம்-பொப்பியூலர்

**தமிழில்: கலாநிதி க. சோமஸ்கந்தன்**

# ஜே.என்.டிக்ஸிற்றின் வாக்குமூலம்

**'அசைன்மென்ட் கொழும்பு' என்ற நூலில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தொகுக்கப்பட்டது.**

## ஆப்கானிலிருந்து சிறீலங்கா

எனது 3½ வருடக் கஷ்டப்பட்ட ஆப்கானிஸ்தான் வாழ்க்கையின் பிற்பாடு, எனக்கு ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கு இந்தியத் தூதராக மாசி 1985 இல் செல்ல எனக்கு ஒரு வெகுமதி கிடைக்கும் என்று எண்ணியிருந்தேன். ஆப்கானில் பணிபுரியும்போது, அங்கு பல அரசியல் சிதறல்களும், உயிருக்கு பல எதிர்பாராத அபாயங்களும் உண்டு என்பது உண்மை. காபூலில் உள்ள எமது தூதரகம், ஓர்வித எதிர்பாராத விளைவுகள் ஏற்படாதவண்ணம், ஆப்கானிஸ்தான் உள்நாட்டுத் தூதரகத்திற்கு அருகாமையில் அமைந்திருந்தது. தூதுவரது இருப்பிடம் பாதுகாப்புக் காரணமாக ஒலி,ஒளி அஞ்சல் நிலையங்களுக்கு அருகாமையிலும், ஆளும் அரசியல் கட்சித்தலைமையகத்திற்கும், ஜனாதிபதி மாளிகைக்கும் இடையிலும் இருப்பது குறிப்பிடத்தக்கது. அப்போது உள்ள காலகட்டத்தில் ஏவுகணைகள் வெடித்துச் சிதறுவதைப் பார்க்கும் எமக்கு, விரக்தியின் காரணமாக, இவ் இடத்தைவிட்டு ஐரோப்பாவில், முக்கியமாக ஜெனீவாவில் பதவி மாற்றம் எடுக்கவேண்டும் என்ற ஆசை எழுந்தது. அப்போது இருந்த தூதுவர் றாஸ் கோத்திராவுக்கும், திருமதி இந்திரா காந்தி அம்மையாருக்கும் 1984 கோடைகாலத்தில் தெரிவித்தேன். எனது விருப்பத்தை மந்திரியோ, அன்றிப் பிரதம மந்திரியோ நான் மேற்கத்திய நாடுகளில் பதவி புரிவதற்குத் தடையாக என்றும் இருக்கவில்லை. ஆனால் விதி விளையாடிவிட்டது. திருமதி. இந்திராகாந்தி விரோதிகளால் 31.10.84 இல் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியானதால், சகல அரசியல் வேலைமாற்றங்களும் ஸ்தம்பிதம் அடைந்தன.

திரு. ராஜீவ்காந்தி அரசியலுக்கு வந்த தருணத்தில் அவர் இந்திய வெளிநாட்டுச் சேவையில், அவதானத்தைச் செலுத்தி, நான் விரும்பிய இடத்திற்கு தை 1985 இல் என்னை இடமாற்றம் செய்வார் என எதிர்பார்த்தேன்; ஆனால் அப்படி உத்தரவு ஒன்றும் வரவில்லை. இவ்வாறிருக்க, எனக்கு ஆப்கானிஸ்தானில் இருக்க விருப்பமேயில்லை. அப்படியிருந்தபோதும் டெல்லியில் ஓர்வித அக்கறையும் இல்லாது இருந்தது. 1985 மாசியில் என்னை வேறோர் இடத்துக்கும் மாற்றப்போகின்றார்கள் என்பதை உணரக்கூடியதாக இருந்தது.

எனது மனைவி திருமதி விஜயா–27.02.85 டெல்லியிலிருந்து காபூலுக்கு வந்து சேர்ந்தார். நாங்கள் விமான நிலையத்தில் இருந்து வீடு திரும்பிக்கொண்டிருக்கும்போதுதான் நம்பிக்கையானவர்களின் மூலம் அறிந்தது, என்னைக் கொழும்பு, சிறீலங்காவுக்கு இந்தியத் தூதுவராக அனுப்பப் போகின்றார்கள்' என்று உரைத்தார். எனது மனைவி திருமதி விஜயா கூறியது சரி என்பதைப் பின்பு உணர்ந்தேன். வெளிநாட்டுக் காரியதரிசி திரு றொமேஸ் பண்டாரி, என்னைப் பிரதம மந்திரி கொழும்பிற்கு, S.J.S சட்டுவால் இருந்த இடத்திற்கு மாற்றியுள்ளார் என்பதைத் தெரிவித்தார். 1982 தொடக்கம் திரு. S.J.S சட்டுவால் கொழும்பில் பல அவதூறுகளை அனுபவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆரம்ப விளக்கங்களுக்காக என்னைப் பங்குனி 8 –ம் திகதி வரும்படி உத்தரவு பணிக்கப்பட்டது. நான் 6 நாட்கள் டெல்லியில் நின்றேன். அப்போது, பிரதம மந்திரி அப்போதைய உள்நாட்டு வெளிநாட்டு மந்திரி குருசிட் அலம்கான், வெளிநாட்டுக் காரியதரிசி, மனித முன்னேற்ற மந்திரி -P,V நரசிம்மராவ், காரியதரிசிகள் பாதுகாப்பு மந்திரி அலுவலகம், மற்றும் அதிபர்கள் எல்லோருடனும் ஆலோசனைகள் நடாத்தினோம். என்னை வைகாசி 1985 ல் பதவி ஏற்குமாறு பணிக்கப்பட்டுள்ளது. அக் காலகட்டம் மட்டும் என்னை காபூலில் சில முக்கிய விஷயங்களைக் கவனிக்குமாறு கூறப்பட்டுள்ளது.

நான் பங்குனி மாதம், சித்திரைமாதம் நடுப்பகுதிவரை டெல்லியில் முக்கிய கூட்டங்களுக்குச் சமூகம் அளித்தபடியால், அப்போது உள்ள திட்டங்களை வரையறைவு செய்தவர் திரு G. பார்த்தசாரதியேயாகும் என்பதை அறிந்தேன். இவர் திருமதி இந்திரா காந்தியுடைய வெளிநாட்டுத் திட்டங்களைப் பொறுப்பேற்கும் பொறுப்புள்ள உயர் பிரமுகர் என்பது குறிப்பிடத்தக்கது. நான் முன்பு பூட்டானிலும், பங்களாதேஷிலும், ஆப்கானிஸ்தானிலும் இருக்கும்போது பலபல துன்பங்களை அனுபவித்ததை அறிந்து, பின் நிதானித்தே என்னைத் திரு. பார்த்தசாரதி அவர்கள் கொழும்பிற்கு அனுப்பலாம் என்ற யோசனையை திரு ராஜீவ் காந்திக்கு ஆலோசனை கூறியதாகவும், எனக்கு தெற்காசிய நாடுகளில் நல்ல அனுபவம் உள்ளதாகவும் முதல் காரணமாக கொழும்பு எனக்கு நல்ல பொருத்தம் எனக் கூறியதாகவும் எனக்குத் தெரியப்படுத்தினார். நான் முன்பும் ஓர் பயங்கரவாத நாடாகிய ஆப்கானிஸ்தானில் பணிபுரிந்த பிற்பாடும், திரும்பவும் ஓர் பயங்கரவாத நடவடிக்கையில் உள்ள சிறீலங்காவுக்குப் போக விருப்பம் இல்லாமல் இருந்தபோதிலும் நான் பார்த்தசாரதியிடம் ஒன்றுமே கூறாமல் இருந்துவிட்டேன். திரு G. பார்த்தசாரதி அவர்கள், கொழும்பில் 1983 ஆடியில் வெடித்த தமிழருக்கெதிரான மனிதாபிமானமற்ற அடக்குமுறை கலவரத்தின்பின்பு, அவர் இந்திய இலங்கை விவகாரங்களில் ஓர் முக்கிய அங்கத்தவராக விளங்கினார் என்பது உண்மை. அத்துடன் அவர் திருமதி–இந்திரா காந்தி அம்மையாருடைய பிரதிநிதியாக J.R. ஜெயவர்த்தனாவிற்கு இருந்தார் என்பதும் தெளிவு. நான் இதற்குரிய கூட்டங்களுக்கு டெல்லியில் பங்குனி 15ல் சென்று, பின் காபூலுக்குத் திரும்பும்போது என் மனதில் இலங்கையில் சிங்களவர் தமிழர் பிரச்சினை உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது என்பதை ஜீரணித்துக்கொண்டேன். இரண்டாவதாக இவ் விபரீதத்தைத் தணிக்க இந்தியா முயலுகின்றது என்பதையும், இலங்கைத் தமிழ் சமூகத்திற்கு ஓர் திருப்திகரமாக சமாதான நடவடிக்கையைக் கொடுக்கவும் தயாராக உள்ளது என்பதையும் உணர்ந்துகொண்டேன்.

மூன்றாவதாக திருமதி இந்திராகாந்தி அம்மையார் தமிழ்-போராளிகளுக்கும், அவற்றின் ஆதரவுக் குழுக்களுக்கும் ஜெயவர்த்தனாவின் விருப்பத்திற்கு மாறாக சலுகைகள் செய்து வந்தது ஏதோ உண்மை. எனவே இந்நிலை உடன்மாறி ஓர் சமரச நிலையை ஏற்படுத்தவேண்டும் என்பதே ராஜீவ் காந்தியின் மனதில் துலங்கியது என்பதையும் நான் அறிந்தேன்.

(வளரும்)

**தொகுப்பு: சொக்கலிங்கம் பிரான்ஸ்**

## எங்களது நாட்குறிப்பு

### மனிதம்

உலகின் முதலாவது கம்யூனிச புரட்சியை பரிசோதித்துப் பார்த்த பாரிஸ் நகர், செல்வந்தர்களையும் ஏழைகளையும் உள்வாங்கிய நகரமாகும். அகதிகளாக பாதிக்கப்பட்டு ஓடி வந்த பல தமிழர்களை அரவணைத்துக் கொண்ட நகராகவும் இது திகழ்கின்றது.

அந்த கட்டடத்தின் வாசல் கதவை திறக்கும்போதே அந்த பிரதிநிதிக்கு மனதில் குழப்பம் மிகுந்திருந்தது. சில தமிழ் குடும்பங்கள் வசிக்கும் அக் கட்டடத்தில் நான்கு பெண் குழந்தைகளுடன் வசித்து வரும் அந்தப் பெரியவரைச் சந்திப்பதா இல்லையா என்ற வினா அவரைக் குழப்பியது. தன் மனைவியை இழந்த நிலையில் தன் குழந்தைகளை மிகுந்த சிரமத்துடன் அப் பெரியவர் வளர்த்து வருகின்றார். அடிப்படைக் கூலித் தொழிலாளிக்குரிய சம்பளம். ஏதோ காரணத்தால் அரச உதவிகள் கிடைக்காத நிலைமை என அப் பெரியவர் சிரமப்படுகின்றார். அவரது வீட்டிற்குச் செல்லும் எவருக்கும் வறுமையின் கடுமையை அறியும் சந்தர்ப்பம் கிடைக்கும். மிக அடிப்படைத் தேவைகளை மட்டுமே அவரால் அடையமுடிந்தது.

ஆனால் தேச விடுதலைப் போர் பற்றி அவரிடம் தீர்க்கமான பார்வையிருந்தது. விடுதலைப் பணிக்கும் புனர்வாழ்வுப் பணிக்கும் கொடுக்க வேண்டும் என்ற கடமையுணர்வு அந்த மனிதரிடம் இருந்தது. அப் பண்பே அவரை எமது மரியாதைக்குரிய நண்பனாகக் கருத வைத்தது.

மிக அண்மையில்தான் அவர் மற்றுமொரு நிதித் திட்டத்திற்கு.பங்களித்திருந்தார். அதற்காக அவர் பட்ட கடனை இன்னமும் அடைத்திருக்க முடியாது. இந்த நிலையில் மீளத் தேவையொன்றிற்காக அணுகுவது அப்பிரதிநிதிக்கு சங்கடம் தந்தது. சில செல்வந்தத் தமிழர்கள் விடுத்லைப் போரின் தேவைக்கு வாரி வழங்கும் மனப் பண்பை முழுமையாகப் பெறாததை அனுபவமூடாகக் கண்டவர்களுக்கு இந்த ஏழைத் தந்தையின் பண்பு சங்கடத்தையும் தந்தது.

தன் குழப்பத்துடன் அப் பெரியவரின் வீட்டைத் தாண்டி மேல் வீட்டிற்கு சென்ற அந்தப் பிரதிநிதி, அங்கு விடுதலைப் போரிற்கான சிறப்பு தேவைபற்றி விபரித்து விட்டு மீள வெளியே வந்த போது, 'டேய் தம்பி! என்ன என்னை மறந்து போட்டியே' என்ற கோபக் குரலுடன் அப் பெரியவர் நின்றார்.

'என்ர வீட்டை விட்டுட்டு போகலாம் எண்டு நினைச்சியா?' என அவர் கேள்வி எழுப்பினார். 'இல்லை, மேல் வீட்டை போட்டு வரலாம் என்றிருந்தனான்' என சமாளித்த போதும் நேர்மையான மனிதனின் தார்மீகக் கோபத்தின் முன் நிற்க முடியவில்லை.

வீட்டிற்குள் அழைத்துச் சென்ற அந்தப் பெரியவர் இந்த வேலைத்திட்டத்தைக் கேள்விப்பட்டனான். இதற்குச் செய்ய வேணுமெண்டு முடிவு செய்திட்டன். படிவத்தை தா என நேரடியாக விடயத்திற்கு வந்தார்.

படிவங்களை நிரப்பிய பின் வாழ்க்கை எப்படிப் போகின்றது என சம்பிரதாய விசாரிப்புக்களை மேற்கொண்ட போது அது அப்பிடியேதான் இருக்குது என அவர் முடித்துக் கொண்டார்.

வறுமையும் வாழ்வின் கடினங்களும் இந்த பெரியவரை விடுதலை தாகத்தால் வறுமைப்படுத்தவில்லை. வறுமையும் கடினங்களும் தற்காலிகமானவை. தேச விடுதலை என்ற நிரந்தர மகிழ்வின் முன் இக் கடினங்கள் ஒன்றுமேயற்றவை என்பதை அந்த மனிதன் புரிந்து கொண்டவர் என்பதே உண்மையானது என்று அப் பிரதிநிதி குறித்துக் கொண்டார்.

– அபிமானி

கீபோட் வகுப்புகள்
குறுகிய காலத்தில் சர்வதேச முறையில்
(International Method)
கீபோட் கற்பிக்கப்படும்.
சனி, ஞாயிறு, புதன், வியாழன்
ஆசிரியர் S.S. தில்லைச்சிவம்
56, Rue Riquet,
75019 Paris (M°: Riquet)
Tel: 01-40 37 56 69

# 2ம் ஆண்டு கவிதாஞ்சலி



அன்னை மடியில்:
16.12.1980

ஆண்டவன் அடியில்:
02.09.1997

## செல்வி கவிதா சின்னையா

*திதி: 10.09.1999*

என் வாழ்வின் விடிவெள்ளியாய் என் வயிற்றில் வந்துதித்தாய்
நீ சிரித்து கதைத்த அழகு முகம்
இன்னும் எம் கண்களில் இருக்கிறது
நீ நோயினால் அழுது புலம்பிய அந்த ஏக்கம்
எம் இதயத்தை விட்டு அகலாத மகளே கவிதா!
எங்கள் கவிதாவே எம்மைவிட்டு
மரணம் உன்னைப் பிரித்தாலும் ஒருநாள்
உன் மகிமையின் மகத்துவத்தை
கடவுளோடு நாங்கள் காண்போமம்மா கவிதா!
எங்கள் செல்வ மகளே கடக்குட்டி ராசன்

*என்றும் உன் பிரிவால் வாடும்*

*அப்பா அம்மா:* சின்னையா சரஸ்வதி.
*அண்ணாமார்:* மாறன், குமார்.
*அக்காமார்:* மலர், சாந்தம், செல்லம்.
*மைத்துனர்கள்:* நவநீதன், றூபன், தெய்வேந்திரம்.
*மைத்துனிமார்:* கல்யாணி, சர்மிலா.
*பெறாமக்கள்:* திவாகர், சிவன்ஜா, பானுஜா
கஜோன் (ஓவியா)

தகவல்: அண்ணாமார்,
மாறன், குமார்.

# பலதும் பத்தும்

## அடிமேல் அடி ஐயோ பாவம்!

பாரிசின் புறநகர் பகுதியில் இது நடந்தது. மாலையில் வீதியால் சென்று கொண்டிருந்தவரை கத்தி முனையில் இருவர் வழிமறித்துள்ளனர். பின்னர் அவரிடம் இருந்த கைத்தொலைபேசி மற்றும் சிகரட் பாக்கெட் போன்றவற்றைப் பறித்த பின் சில அடிகளையும் கொடுத்துவிட்டு இருவரும் மறைந்து விட்டனர். அடிவாங்கியவர் அருகில் இருந்த பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறைப்பாடு செய்தார்.

பொலிஸ் நிலையத்திலிருந்து வெளியே வந்தவருக்கு மீண்டும் கெட்ட காலம். அங்கு நின்ற இரு இளைஞர்கள் அவரிடம் சிகரட் கேட்டுள்ளனர். இவர் இல்லையென மறுக்க, இருவரும் பலாத்காரமாக அவரைத் தாக்கி அவரது பணப்பையைப் பறித்து வங்கி அட்டையின் இலக்கத்தையும் கேட்டுள்ளனர். ஆனால் இவ்வளவு நிகழ்வுகளும் பொலிஸ் நிலைய வாசலில் இருந்த கமராவின் மூலம் நேரடியாக படமாக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

தாக்குதல் சம்பவம் நடந்து கொண்டிருக்கையிலேயே அந்த 18 மற்றும் 20 வயது இளைஞர்கள் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டனர். நல்லவேளை! அடிவாங்கியவர் இன்னுமொருமுறை தாக்கப்படாமல் வீடுபோய்ச் சேர்ந்தார்.




## வண்டியைத் திருடினர் ஆனால் உள்ளே-ஒரு சடலம்!

பிரான்சின் கீழ்ப்பகுதியில் அமைந்துள்ளது பொன்துபான் நகர். அங்கு நடந்த வேடிக்கையான நிகழ்வு இது. இறுதிச் சடங்குகளை பொறுப்பேற்று நடத்தும் ஒரு நிறுவனத்திற்குச் சொந்தமான வாகனம் ஒன்றில் ஒரு சடலம் ஏற்றப்பட்டு அது அந்த நிறுவன நிர்வாகியாலேயே செலுத்தப்பட்டுக் கொண்டிருந்தது. இடையே செல்லவேண்டிய வழியை தவறவிட்ட அவர் தனது வாகனத்தை நிறுத்தி கீழிறங்கி வழியால் சென்ற சிலரிடம் சரியாகச் செல்ல வேண்டிய வழி பற்றி விசாரித்துக் கொண்டிருந்தார். இச் சந்தர்ப்பத்தில் இருவர் அந்த வாகனத்தில் ஏறி திடீரென இயக்கி அதனைக் கடத்திச் சென்றுள்ளார்கள். வாகனம் பத்து பதினைந்து கிலோ மீற்றர் சென்றபின்னர்தான் இரண்டாமவர் திரும்பிப் பார்த்தபோது அதற்குள் ஒரு சடலம் வெறும் போர்வையொன்றினால் மட்டுமே போர்த்தப்பட்டுக் கிடத்தப்பட்டிருப்பதைக் கண்டுள்ளார். இருவரும் பதட்டப்பட்ட நிலையில் வண்டியை நிறுத்தி சடலத்தை எடுத்து வீதியோரம் வைத்துவிட்டு வாகனத்துடன் சென்றுவிட்டனர்.

பின்னர் அந்த வழியால் வந்தவர்கள் அநாதரவாக சடலமொன்று மரத்தடியில் கிடப்பதைப் பார்த்து காவல் துறையினருக்கு அறிவித்தனர், ஏற்கனவே காவல் துறையினிடம் வாகன உரிமையாளர் முறைப்பாடு செய்திருந்ததால் உடனடியாக சடலத்தை அவர் மீண்டும் பொறுப்பேற்க வசதியாகியது.

# தத்தெடுப்பு

### வியட்னாம் குழந்தைகளற்ற தம்பதியரின் மெக்காவாகத் திகழுகிறது

ஒகோவென்று நடைபெற்றுக்கொண்டிருக்கும் குழந்தைகளின் தத்தெடுப்பு வியாபாரம் குழந்தைகளில்லாத தம்பதிகளின் சந்ததிகளை உருவாக்குவதற்கு, தமக்கு குழந்தைகள் வேண்டுமென்று விண்ணப்பித்ததற்கமைவாக மிகக்குறைவான காலகட்டத்திற்குள் (ஒருமாதத்திற்கும் குறைவாக) வியட்னாமில் இருந்து தங்கள் வீடுகளுக்கு தத்தெடுத்த பிள்ளைகளுடன் வந்துவிடுகின்றனர்.

வியட்னாமின் தலைநகரம் ஹனோயில் (Hanoi) ஏ.ஈ.ஏ கிளினிக்கின் காத்திருப்பு மண்டபத்தில் பிரெஞ்சு நாட்டுத் தம்பதியர் தமக்கென்று பிள்ளையைத் தத்தெடுப்பதற்கான உறுதிப் பத்திரத்தில் கணவர் கையொப்பமிட மனைவி அதனை வீடியோ படமாக்குகிறாள். குழந்தையைப் பெற்றதாய் கவலையுடன் தன்பிள்ளையை நோக்குகிறாள். இன்னுமொருதரம் தாயின் மார்பில் அப் பிள்ளை கிடத்தப்படுகிறது. சற்று நேரத்தில் அந்தப்பிள்ளையின் குடும்பமே மாறி விடுகிறது. பிள்ளையைத் தமதாக்கிக்கொண்ட பிரெஞ்சுத் தம்பதியர் விமான நிலையத்திற்கு விரைகின்றனர். கார்ட்டூன் படங்களில் வருகின்ற கொக்கு, பிள்ளைகளை பாதுகாப்பாக காவிச் செல்வது போன்று 'ஏயார் பிரான்ஸ்' விமானம் குழந்தைகளை தூக்கிச் செல்வதாக மக்கள் எண்ணக் கூடியதாகிறது.

பிரெஞ்சு நாட்டில் ஒவ்வொரு வருடமும் தத்தெடுக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை கூடிக்கொண்டே வருகின்றது. 1995ம் ஆண்டிலும் பார்க்க 3 மடங்கு கூடுதலான பிள்ளைகளை Air France கடந்த வருடத்தில் காவி வந்திருக்கிறது. இதே கால இடைவெளியில் இரண்டு மடங்கு பிள்ளைகள் USA க்கும் அனுப்பப் பட்டிருக்கின்றனர்.

பிரெஞ்சு அரசாங்கம் இத்தத்தெடுப்பு விடயமாக ஆர்வம் காட்டிவருகிறது. செப்டெம்பர் மாதத்தில் இவ்விடயம் சம்பந்தமாக வியட்னாம் அரசாங்கமும் பிரெஞ்சு அரசாங்கமும் ஒழுங்கு முறையான தத்தெடுப்பைச் செய்வதற்காக ஒப்பந்தமொன்றைச் செய்யவுள்ளனர்.

### விரைவான தத்தெடுப்பு

தத்தெடுக்கும் குழந்தைகளுக்கான பல்லாயிரக் கணக்கான வியாபாரச் சந்தைகளுள் வியட்னாமியக் கிளைகளே முதலாவது இடத்தை வகிக்கிறது. சட்டரீதியாக தத்தெடுப்பதாயின் ஒருபிள்ளையைத் தத்தெடுக்க ஒரு வருடகாலமெடுக்கும். இதற்கு வியட்னாம் நாட்டுச் சட்டதிட்டங்களே சான்றளிக்கக்கூடிய வகையில் இருந்தும் இதனை பெறுமதியற்ற சட்டமாக 4,5 வாரங்களுக்குள் பிள்ளைகளை தத்தெடுக்கும் நிகழ்ச்சிகள் ஆக்கிவிடுகின்றன. இவற்றிற்கு உத்தியோகத்தரின் ஊழலும், வறுமை நிலையிலுள்ள தாயுமே காரணமெனலாம்.

ஒரு வெளிநாட்டுத் தம்பதியர் தமக்கு என்று பிள்ளைகளைத் தத்தெடுப்பதற்கு முதலில் ஒரு Hotal இல் தங்குவர். இவ்விடயமாக (Baby Broker) ஒருவரைப் பிடிப்பார்கள் ஹோட்டல் வரவேற்பு உத்தியோகத்தரிடம் தங்கள் கோரிக்கையை கூறினாலே போதும் அவர்களே இதற்கான சகல உதவிகளையும் செய்து தருகிறார்கள். இவ்விதமான Baby Broker கள் முதலில் இத்தம்பதியரை ஒரு ரெஸ்டுரண்டில் சந்தித்துக் கதைப்பார்கள். இதற்கு தாங்களும் சட்டரீதியாகவே செய்து தருகிறோம் என்று காட்டுவதற்காக அத்தம்பதிகளிடம் அவர்களது பிறப்பு அத்தாட்சியையும் அவர்களது சம்பள விபரத்தையும் திருமணப்பதிவையும் கேட்பார்கள். இவ்வளவுமே ஒரு பிள்ளையைத் தத்தெடுப்பதற்குப் போதுமானது. அதன்பின் தம்பதிகளுக்கு, என்ன பிள்ளை எத்தனை வயதில் வேண்டும் என்ற விபரங்களுடன் வியாபார நடவடிக்கையில் இறங்குவார்கள். இதற்கான தரகுப்பணம், தேநீர்காசு என்ற பெயரில் 2500 டொலர் தொடக்கம் 3500 டொலர் வரை பேசித் தீர்க்கப்படும். தரகரின் விடயம் ஒழுங்கானவுடன் தங்களுக்குக் கிடைக்கப்போகின்ற தத்துப்பிள்ளைக்காக இத்தம்பதியர் ஹொட்டலில் காத்திருப்பர்.

### நிட்சயமற்றவழி:

'Mister Adoption' என்றழைக்கப்படும் Hungalais என்பவர் பிரெஞ்சுப் பயண அலுவலகத்துக்குத் தெரிவிப்பதாவது;

தான் எல்லாச் செலவுகளுக்குமாக ஒரு பிள்ளையை 3300 டொலருக்கு தர முடியும் என்கிறார். தனக்கு வடவியட்நாம் நன்கு அறிமுகமாயுள்ளதாயிருப்பதால் இது இலகு என்கிறார். இவருக்கு எவ்விதமாக இப்பிள்ளைகள் கிடைக்கின்றார்கள் என்ற கேள்விக்கு அது தனது தனிப்பட்டவிடயமென கூறும் இவர், தான் அனாதைப்பிள்ளைகள் விடுதிகளில் இருந்தும் Red Cross நிறுவனத்தில் இருந்தும் பெறுவதாகக் கூறுகிறார்.

பிள்ளைகளைத் தத்தெடுப்பதற்கு தற்பொழுது கூடுதலான ஆர்வம் காட்டப்படுகின்றதனால் ஒதுங்கி வாழ்கின்ற மலைப்பகுதி மக்களின் வறுமை நிலையும் இளவயதுப் பெண்கள் தங்கள் பிள்ளைகளை சரிவர கவனிக்க முடியாதகாரணத்தாலும் தங்களது மூன்றாவது அல்லது நாலாவது பிள்ளையை விற்பதற்கு தயாராகின்றனர் என்று Hungalais சர்வசாதாரணமாகக் கூறுகிறார். இத்தொழிலைச் செய்யும் இவர் ஏழைப்பிள்ளைகளுக்குத் தான் உதவுவதாக உணர்த்துகின்ற பாடலையும் வேறு பாடுகின்றார்.

### மருத்துவமனைக் கட்டிலிலிருந்து:

இப்படியும் நடக்கும், ஆனால் அதற்கான தரவுகள் இருந்தால்;

Baby Broker இல்லாமலே பிள்ளைகளைத் தத்தெடுக்கலாம். Bac can என்ற இடத்தில் வைத்தியர்களும் பணியாளர்களுமாக 77 பிள்ளைகளை விற்றிருக்கின்றனர். Ninh Binh என்ற இடத்திலும் Giang என்ற இடத்திலுமாக 550 பிள்ளைகளை வெளிநாட்டவருக்கு விற்றிருக்கின்றனர். தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கும் இது சம்பந்தமான வழக்கில் 11 வைத்தியர்களும் தாதிமார்களும், தரகர்களும் வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் செய்த குற்றமானது கிட்டத்தட்ட இருநூறு கர்ப்பிணிப் பெண்களின் பிள்ளைகள் பிறந்தவுடன் 40 டொலர் தொடக்கம் 60 டொலர் வரை மட்டுமே பெற்ற பிள்ளைக்காக பணம் வழங்கப்பட்டுள்ளதாம். ஒரு வைத்தியசாலையின் நடைமுறை பிள்ளைகளை தத்தெடுப்பதனை இலகுவான நம்பிக்கை வழிகாட்டுகிறது. (Saigon Houng Vuong வைத்தியசாலை) இது சீன டவுனுக்கு அண்மையில் அமைந்திருக்கிறது. இங்கு நோயுள்ள இளந் தாய்மார்கள் நிறைந்த கட்டில்கள் நிரம்பி வழிகின்றன. இவ்விளம் தாய்மார்களுக்கு பிள்ளைகளென்றாலே அலர்ஜி. அவ்வளவு வறுமை. தங்களை விட்டுத் தொலைந்தால் காணுமென்ற நிலை. உறவினர்களைக் காணச் சென்ற பார்வையாளர்கள் கதைத்தபடியே அவ்விடத்தைவிட்டு அகன்று கொண்டிருப்பர். அங்கு ஆறுதலாக நிற்பவர்களென்றால் அது பிள்ளைகளை தத்தெடுப்பவர்களாகத்தானிருக்கும். இவ் விதம் பிள்ளைகளை வாங்குபவர் லஞ்சம் கொடுத்துத்தான் பிள்ளைகளை வாங்கவேண்டும் என்று நினைத்து அதிக பணத்தைக் கொடுத்துவிடுகின்றனர். ஆனால் Batam என்னும் நபரை அவர்கள் சந்திப்பார்களாயின் மலிவாகவே பிள்ளைகளை வாங்க முடியும். சாதாரண பணிஸ் விற்கும் தொழிலைச் செய்யும் இவர் இந்த பிள்ளைகள் விற்பனையிலும் கலந்துகொள்கிறார். இவர் பிறந்து இரண்டே நாளான ஆண் குழந்தையை கடதாசியினால் சுற்றி பிள்ளைவேண்டுவதற்கு என வந்திருந்த வெளிநாட்டவரிடம் காட்டி, இவ்விதம் சுகமாக பிறந்த பிள்ளைகள் எமக்கு நல்ல வியாபாரம். இதற்காக நீங்கள் தரவேண்டியது இவ் வைத்தியசாலையில் இப்பிள்ளை பிறந்ததற்கான செலவைக்கட்டி எங்களுக்கு (Tea Money) தேநீர் செலவுக்காக பணமும் தந்தாலே போதுமானது என்கிறார்.


வியட்நாமின் வடபகுதி மலைப்பிரதேசப் பிள்ளைகளைத் தத்தெடுத்து வளர்க்கும் ஹொலண்ட் நாட்டுத் தம்பதிகள்.


இன்னும் விற்பனை செய்யப்படாத குழந்தை வைத்தியசாலைத் தரையில் கிடப்பதை இங்கு காண்கிறீர்கள்

எவ்விதமிருப்பினும் இவ்விதம் வாங்கப்படும் பிள்ளைகள் புதுவிதமான எதிர்பாராத வாழ்விற்குள் புகுவது உண்மையாகிறது. இதனால் சென்ற ஆண்டையும் விட இவ்வாண்டு தத்தெடுக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை இரட்டிப்பாகும் என நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது. ஆயினும் தத்துக்கொடுக்கும் தாயின் கண்ணீரைக் கட்டுப்படுத்த பணத்தொகை அடங்கிய கவர் பரிமாறுகிறது.

— ஜெ. சியாந்தி

# தமிழர் நடந்த பாதை

**7**

## சாலமன் அவையில் பேசிய தமிழ்: கி.மு.1000

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் அயல் உலகத்துடன் தமிழகம் கொண்டிருந்த வணிக உறவில் முதலாவது நாடாக இடம் பெறுவது சுமேரியாவே. இதன் காலம் கி.மு. 5000. சுமேரியாவிற்கு அடுத்து அராபியாவும், பினீஷியாவும் எகிப்தும் பங்குபெறுகின்றன. இந்நாடுகளோடு தமிழகம் கொண்ட தொடர்பின் காலம் கி.மு. 7-ம் நூற்றாண்டு முதல், கடைசியாகத் தொடர்பு கொண்ட மேலை உலகம் கிரேக்கம். இதனோடு தொடர்பு கொண்ட காலம் கி.மு. 5-ம் நூற்றாண்டு முதல்.

நமக்குக் கிடைத்த கடைச்சங்க நூல்கள் ஏறத்தாழ கி.மு. 5 முதல் கி.பி 3 வரையிலான காலத்தினதாகும். இந்நூல்கள் வழி அறியலாகும். அயல் உலகம் மிகுதியும் கிரேக்கமாகும் [யவனம்] முன்னிரு சங்க நூல்கள் நமக்குக் கிடைத்திருக்குமானால் அவற்றின் வழியாக சுமேரிய, எகிப்திய உறவுகள் பற்றிய செய்திகள் தெரிய வந்திருக்கும்.



மொழிப் பேர்றிஞர் கால்டுவெல் பெருமகனார் தமக்குக் கிடைத்த முதல் தமிழ்ச்சான்று கி.மு. 1000 சார்ந்ததென்கின்றார். கி.மு. 1000 இல் வாழ்ந்த இஸ்ரேல் மன்னன் சாலமன் கலங்கள் ஏற்றிக்கொண்டு வந்த பொருள்களின் பட்டியலில் மயில் இறகைக் குறிக்கும் தமிழ்ச் சொல்லாகிய 'தோகை' இடம்பெற்றுள்ளது. தோகை என்னும் தமிழ்ச் சொல் 'துகி' எனவும் இரு வடிவங்களில் 'ஹீப்ரு' மொழியில் குறிக்கப்பட்டுள்ளது. பினீஷிய மொழியில் நம் தமிழ்த் தோகை 'துக்' என ஒலிக்கப்பெற்றுள்ளது.

அராபிய மொழியில் 'தவஸ்' எனவும் கிரேக்க மொழியில் 'தவோஸ்' எனவும் இலத்தீனில் 'பவோ' எனவும் இச்சொல் திரிவதை மொழிப் பேரறிஞர் மாக்ஸ் முல்லர் எடுத்து விளக்குகிறார். ஆங்கில வேர்ச்சொல் அகராதிப் பேரறிஞர் கீற்று [Skeat] 'தோக்' என்பது 'பவோ' என மாறியதற்குத் தவறாக ஒலிக்கப்பட்டதே காரணம் என்பார்.

**பேரா.கு.அரசேந்திரன்**

'Peacook' என மயிலைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லின் முன்பகுதி தமிழின் 'தோகை'யே என்பதை மாக்ஸ் முல்லர், கீற்று கால்டுவெல் ஆகிய பேரறிஞர்கள் ஒத்துக் கொள்கின்றனர்.

ஆண் மயிலே தோகையுடையதாகும். 'Cock' என்னும் சொல் பறவையைச் சுட்டுவதாகும். தோகை-தோக்-Pauo-Pawa-Pavo என்பனவாகவும் இன்னும் பலவாறும் மேலை மொழிகளில் சொல்லப்பட்டு இறுதியில் 'Pea' என ஆங்கிலத்தில் நிற்பதாயிற்று. 'Cock' என்பது கூட ஒரு வகையில் தமிழ்ச் சொல்லேயாகும். 'குக்குக்' எனப் பறவைகள் எழுப்பும் ஒலிக் குறிப்பு வழியாக இக் 'Cock' வந்திருக்கலாம் என ஆங்கில வேர்ச்சொல் அகராதி அறிஞர் சி.டி..ஆனியன் கருதுகிறார். சங்கப்பனுவலாகிய குறுந்தொகை 'குக்கூ என்றது கோழி' [பாடல் 157] என இவ்வொலிப்பைப் பதிவு செய்துள்ளது.

தமிழின் 'தோகை' இவ்வாறு பலப்பலவாக மேலை மொழிகளில் திரிந்து வழங்குவதைக் கண்ட மாக்சுமுல்லர் மொழி நூல் வரலாற்றில் இதுவோர் வியப்பளிக்கும் நிகழ்ச்சியாக உள்ளதென்றார். அதற்குக் காரணம் ஆரியர் வருமுன்னமேயே தமிழ் எவ்வளவு காலப் பழைமையுடையதாக இந்தியாவில் வழங்கியிருக்கவேண்டும் என்று அவர் நினைப்பதேயாகும்.

மயில்தோகை மிகப்பழங்காலத்தில் மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களில் ஒன்றாக இருந்ததென்பதை

'பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்'

என்ற குறளாலும் நாம் உன்னி அறியலாம். மயில்தோகை வண்டியில் ஏற்றிச் செல்லக்கூடிய அளவிற்கு அந்நாளில் புழக்கத்தில் இருந்திருக்கவேண்டும் என்பதை மேலைய குறள் தெரிவிக்கின்றது. வெளிநாட்டிற்குக் கப்பலில் ஏற்றிச் செல்லுவதற்கான தேவை இருந்ததை ஒட்டியே தரைவழியாகத் தோகையாகிய பீலி, வண்டியில் ஏற்றப்பட்டிருக்கவேண்டும் என்பதையும் நாம் எண்ணிப்பார்க்கலாம்.

இஸ்ரேல் மன்னனின் கலம்கொண்டு வந்து சேர்ந்த பொருள்களில் குறிப்பிடப்படும் பிறிதொன்று குரங்காகும். இக்குரங்கினைக் குறிக்கும் 'கபி' என்ற தமிழ்ச் சொல் மேலை உலகில் பத்திற்கும் மேற்பட்ட மொழிகளில் திரிந்து வழங்குகின்றது. 'Ape' என ஆங்கிலத்தில் வழங்கும் சொல்லிற்கும் தமிழின் 'கபி' யே மூலமாகும். எகிப்தில் இச்சொல் 'காப்' என முதலில் மாறிற்று. கிரேக்க மொழியில் 'கெபொ' என இது திரிந்தது. 'க'கரமாகிய முன் எழுத்து இழந்த நிலையில் Kape என்பது ape என ஆங்கிலத்தில் நின்றதென ஆங்கில வேர்ச்சொல் அறிஞர் கீற்று குறிப்பிடுகின்றார். பிறிதொரு ஆங்கில வேர்ச்சொல் அகராதி அறிஞர் சி.டி ஆனியன் 'ape' என்ற ஆங்கிலச் சொல்லிற்கு சமற்கிருதம் உள்ளிட்ட ஆரிய மொழிகள் எதிலும் வேர் இல்லை என்று தெளிவுபடுத்தியுள்ளார்.

மொழிஞாயிறு பாவாணர் 'கப்பு'என மரக்கிளையைக் குறிக்கும் தமிழ்ச் சொல்லிலிருந்து அங்கு வாழும் குரங்கு 'கபி' எனப்பட்டிருக்க வேண்டும் என்பார். கபி–கபிலை என்பது கருமை கலந்த ஓர் நிறமாகும். ஆங்கிலத்தில் 'Tawny' என இவ்வண்ணத்தைக் குறிப்பர். 'புகர்' நிறம் எனவும் கபிலை நிறத்தைதைத் தமிழில் கூறுவர். இப்புகர்நிற 'ஆ'[பசு] தமிழில் 'கபிலை' எனப்பட்டுள்ளது. பகை அரசர்கள் எதிரியின் நாட்டைத் தீயிட்டுக்கொளுத்தும்போது எழும் புகை 'கபிலை' நிறமுடையதாய் இருப்பதாகச் சங்க நூல் குறிக்கும். 'குரங்கு' இந் நிறமுடையதாய் இருப்பதையொட்டியே அது 'கபி' எனப்பட்டது என்பதே பொருத்தமாகும்.

தமிழகத்திலிருந்து வரலாற்றுக்கு முற்பட்ட அந்நாளில் மேலை உலகிற்கு ஏற்றுமதியான பொருள்களில் குறிப்பிடத்தகுந்தன. புலி, சிறுத்தை, யானை, குரங்கு, மயில், கிளி, வேட்டை நாய்கள் ஆகியன என்று வரலாற்றுப் பேராசிரியர் கே.கே பிள்ளை கூறியுள்ளார்.

கி.மு 1000 ஆண்டான சாலமன் காலத்தில் தோன்றிய தமிழ் நூல்கள் எவையும் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் அதே காலத்தில் தமிழ்நாட்டுப் பண்டங்கள் பல மேலை நாடுகட்கு ஏற்றுமதியாகியுள்ளன. அவ்வாறெனில் அந்நாளில் தமிழ் நாட்டில் தமிழர்கள் தனித்தமிழ்ப் பேரரசு செலுத்தியிருந்தனர் என்பதற்கு இவை போதுமான சான்றுகள் ஆகாவா.

*(வளரும்)*

ஜேர்மனி பொன் (Bonn) நகரில்

யாழ் ரவல்ஸ்

YARL TRAVELS

*Thomas Mann Str 21,53111 Bonn*

உலகின் எப்பாகங்களுக்கும் மலிவு விலையில்

*பிரயாணச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்*

சிறீலங்கா, இந்தியா, சிங்கப்பூர், கனடா

ஆகிய நாடுகளுக்கு விசேட சலுகைகள்.

தொலைபேசி இலக்கம்: 0228/9652885 – தொலைநகல்: 0228/9652985

GE-Pub.

# நோயற்ற வாழ்வே...

## சாப்பிட வேண்டிய சமச்சீரான உணவு

ஆரோக்கியம் எனப்படுவது முழுமையான மனித உடல், உள்ளம் சமூக நலம் மற்றும் ஆன்மீக நலம் ஆகியவற்றின் சீரான வளர்ச்சியைக் குறிக்கும். அத்தகைய ஆரோக்கியமான மனிதனால்தான் குடும்ப வாழ்க்கையிலும் பொது வாழ்க்கையிலும் சிறப்படைய முடியும். நோயற்ற வாழ்வு வாழ்வது முடியாத செயல் அல்ல. அது நம் கையில்தான் உள்ளது. ஆரோக்கியமான உடல், மூளை மற்றும் மன வளர்ச்சிக்கு முதல் தேவை சத்தான உணவு வகைகள்தான். உடல் ஆரோக்கியத்தைக் கெடுப்பதில் வயிற்றின் மூலமாக நம் உடலில் செல்லும் உணவே பெரும்பங்கு வகிக்கிறது. உண்ணும் உணவை ஒழுங்குபடுத்துவதன் மூலம் ஆரோக்கியத்தை முழுதும் பெறலாம். இன்றைய இயந்திரமயமான வாழ்க்கையில் விளம்பரமயமான உலகில் நொறுக்குத்தீனி போன்ற சிற்றுண்டிப் பண்டங்களில் உள்ள ஈடுபாடும் ஆர்வமும் முக்கிய உணவில் இல்லாதது வருந்தத்தக்கதாகும். இன்றைய சமுதாயத்தில் பெண்கள் படிப்பறிவு அதிகம் பெற்றதாலும் பொருளாதார சூழ்நிலையினாலும் பெரும்பாலானோர் வேலைக்குச் செல்லும் நிலையில் உள்ளனர். அவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. நேரமின்மையால் அவர்களின் தேவையைப் பூர்த்திசெய்ய எளிதில் உடனே சமைக்கக்கூடிய 'திடீர்' உணவுப் பொருட்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.




பருவ வயதினரின் (Adolescents) உணவு,பழக்கத்தில் இருந்து வேறுபட்டது. அவர்களுக்குத் தேவையான உணவுச் சத்துக்களின் அளவும் (ஆண்கள், பெண்களுக்கென்று தனி அளவு) மாறுபடும். வாலிப வயதினர் இருபிரிவில் அடங்குவர். முதல் பிரிவு 13 முதல் 15 வயதுவரை. இரண்டாம் பிரிவு 16 வயது முதல் 18 வயது வரை. இப்பருவத்தில் அவர்களின் வளர்ச்சிக்குத் தக்கபடி உணவுத் தேவையும் இரண்டுமடங்கு அதிகரிக்கிறது என்பதை நினைவில் கொள்ளவேண்டும். இப்பருவத்தில் எல்லாத் தாது உப்புக்களின் தேவையும் அதிகமாகும். அவற்றில் முக்கியமாக கல்சியம், இரும்பு, துத்தநாகம் அதிகம் இருத்தல் வேண்டும். பெண்களுக்கு ஆண்களைக் காட்டிலும் அதிக அளவு இரும்புச் சத்து அடங்கிய உணவைச் சாப்பிடுவதன் மூலம் இரத்தச் சோகை நோய் வருவதைக் குறைக்கலாம். இன்றைய சமுதாயத்தில் வீட்டுவேலை, அலுவலக வேலை ஆகிய இரண்டையும் பெரும்பான்மையான பெண்கள் செய்யவேண்டிய சூழ்நிலையில்தான் வாழ்ந்து வருகிறார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். வாலிபப்பருவத்தில் ஆண், பெண் இருபாலாரும் உணவில் புரதச்சத்து அடங்கிய பால், மாமிசம், மீன், முட்டை மட்டுமின்றி, பச்சைக் காய்கறிகள், கீரைகளையும் தவறாது சேர்த்துக்கொள்ள வேண்டும். தின்சரி வறுத்த வேர்க்கடலை உண்டாலும் போதிய சத்துக்கள் கிடைக்கும். இரத்த விருத்திக்கும், எலும்புகளின் வளர்ச்சிக்கும் நோய் எதிர்ப்புச் சக்தி கிடைக்கவும், தோல் சுருக்கம், வரட்சித் தன்மையின்றி இருப்பதற்கும், நல்ல கண் பார்வைக்கும், தாது உப்புக்களும் மிகவும் அவசியம்.

## பளிச்சிடும் பற்களுக்கு... பதில் தெரிகிறதா?

*Dr. சாமளா ரவிகுமார்*

வயதானால் பல்விழுந்துவிடும் என்பது பழைய பாடம். இன்றைய நிலையில் 75 வயதிலும் உறுதியான பற்களைக் கொண்டவர்கள் இருக்கிறார்கள். முத்துப்போன்ற பற்களை முதுமையிலும் பெற்றிட இன்றைய பல் மருத்துவ வளர்ச்சி உறுதுணையாக இருக்கிறது.

1. நீங்கள் பிரஷ் செய்யும்போது ஈறுகளிலிருந்து இரத்தம் கசிகிறது. அப்போது டாக்டரிடம் போகவேண்டியதில்லை.
2. பற்களில் சிதைவு ஏற்படுத்தும் முக்கியமான இரண்டு காரணிகள் மாச்சத்து அல்லது சர்க்கரை மிகுந்துள்ள உணவு.
3. ஈறு வியாதிகளை வராமல் தடுத்திடும் உணவு பட்டாணி, பிரட் (White Bread).
4. ஒவ்வொருவரும் குறைந்தது ஒருநாளைக்கு ஒரு முறையாவது பற்களை நாரினால் (Floss) துடைக்க வேண்டும். இதற்கு இரண்டு நிமிடம் எடுக்கவேண்டும்.
5. வாய் துர்நாற்றம்-பிறர் முகம் சுளித்தாலும் அது ஒரு பல் பிரச்சினையில்லை.
6. கல்சியம் உள்ள அமிலக்குறைப்பு மருந்துகள் பற்களின் நிறத்தைக் கெடுக்கும்.
7. ஐஸ் சாப்பிடுவது பற்களை உறுதிப்படுத்தும்
8. விஸ்டம் பல் பெரும்பாலும் 30- 40 வயதில் தோன்றுகிறது.
9. விஸ்டம் பற்களால் பிரச்சினை ஏற்படும் பொழுது அதனை சாதாரண பல் டாக்டர் எடுத்துவிடலாம்.



*- ஹெல்த் இதழில் இருந்து*

# புகலிட நிகழ்வுகள்

## யாழ்.மத்திய கல்லூரி பழையமாணவர் சங்கம் பேர்லின்

## மென்பந்து கிறிக்கெட் சுற்றுப்போட்டி 1999

யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் பேர்லின் கிளையினரால் ஆறாவது தடவையாக நடாத்தப்படும்.

வணக்கத்திற்குரிய பீற்றர் பேர்சிவல், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணங்களுக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர்வரும் செப்டெம்பர் 5-ம் 6-ம் திகதிகளில் (ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமை) பேர்லின் லிஸ்ரபெல்ட் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் பேர்லினிலுள்ள தமிழர் விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றுகின்றன. அனைத்து கிரிக்கெட் ரசிகர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி.

இடம்: Königsbergerstr
Lichterfelde
(U.Bhf.Rathaus Steglitz)
Bus: 185.186
(S.Bhf.Lichterfelde West/Ost)
Bus: X11, 111, 211, 180

*யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்; பேர்லின்.*

## அறிமுகவிழா

*கரும்பனைகள் (கவிதைகள் ஒலித்தட்டு)*

கவிஞர் வி.ரி.இளங்கோவனின் கவிதை ஒலித்தட்டு வெளியீட்டுவிழா

**காலம் 04.09.1999 பிற்பகல் 5.45 மணி**

**இடம்:** நூலக மண்டபம் - Salle Bibliotheque
59, Avenue de I' URSS, 31400 Toulouse.
(Près de I'Eglise Ste. Germaine)

## இரு விழாக்கள் ஒரே மேடையில்

### பாட்டுக் கனகரின் பவளவிழா

* * *

பாரிஸ் வந்தோம் சத்தியாவின் 4வது இசைத்தட்டு (ராகரசம்)

## வெளியீட்டுவிழா

**காலம்: 05.09.99 ஞாயிறு மாலை 6.00 மணி**

**இடம்:** 124bis, Rue bagnolet, 75020 Paris.
Métro: Bagnolet

### ஈழமுரசில் வெகுவிரைவில்....

### உலக வரலாற்றில் பதிவானவர்கள்

கடந்த 20 நூற்றாண்டுகளில் உலக வரலாற்றில் தங்கள் செயற்பாடுகளின் மூலம் ஒரு பதிவினை ஏற்படுத்திச் சென்றவர்களை, மனித வரலாற்றுப்போக்கில் பல மாறுதல்களை ஏற்படுத்திய பல்வேறு மனித முகங்களை உங்கள் முன் ஈழமுரசு தொடராகத் தருகின்றது. நூற்றுக் கணக்கான இவ் வரலாற்றுப் பதிவாளர்களை வாரம் ஒருவராக பதிவு செய்கின்றது ஈழமுரசு.

ஆ-ர்

# இத்தாலி ஜெனோவா கலை பண்பாட்டுக் கழகத்தின் செஞ்சோலைக் கலைமாலை

இத்தாலி ஜெனோவா வாழ் தமிழ் மக்களால் 25.07.1999 ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 மணியளவில் செஞ்சோலைக் கலைமாலை பியாசா கப்புச்சீனி (Piazza Cappuccini) திரையரங்கில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.




சிறீலங்கா இனவாத அரசுகளின், அரச பயங்கரவாதக் கொடுரத்தால் 1983-ம் ஆண்டு யூலை மாதம் 24-ம், 25-ம், 27-ம் திகதிகளில் சிங்களக் காடையர்களால் கொல்லப்பட்ட எமது மக்களை நினைவுகூரவும், இவ்வராஜகச் செயலை அனைத்துலகின் மனித நேய மனச் சாட்சிகளுக்கும், அமைதி விரும்பிகளுக்கும், எடுத்துரைக்கும் எம் தேசம் நோக்கிய செயற்பாடுகளில் ஒன்றாகவும், போர்ச் சூழலால் பெற்றோரைப் பிரிந்து, பெற்றோரை இழந்து எம் மண்ணின் சிறார்களை அரவணைத்துக் காக்கும் செஞ்சோலைச் சிறார் இல்லத்தை எம் மத்தியில் அறிமுகப்படுத்தும் கலை நிகழ்வாகவும், இக்கலை மாலை அமைகின்றது. ஆரம்ப நிகழ்வாக தமிழீழ விடுதலைப் புலிகளின் இத்தாலிப் பணியகப் பிரதிநிதி து.மேதா அவர்களால் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகியது. இதனைத் தொடர்ந்து எம் உயிரினும் மேலான நம் தமிழீழ தேசத்தைப் போற்றி வணங்கும் தமிழீழத்தேசிய கீதம் இடம்பெற்றது. அடுத்து தமிழீழ தேசியப்போராட்ட வரலாற்றில் தமிழீழ தேசியம் என்ற உயரிய இலட்சியத்திற்காக தம் இனிய இளைய உயிரை அர்ப்பணித்துத் தம்மை முழுமையாகத் தற்கொடையாக்கிய மாவீரர்களுக்காகவும், அவர்களுடன் தோளோடு தோள் நின்று தம் உயிர் நீத்த எம் தேச மக்களுக்காகவும் அமைதி வணக்கம் இடம்பெற்றது. தொடர்ந்து இந் நிகழ்வு பற்றியும், செஞ்சோலைச் சிறார் இல்ல உருவாக்கம், அதன் நோக்கம் பற்றியும், ஜெனோவா தமிழர் கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளரால் எடுத்துரைக்கப்பட்டது.

தொடர்ந்து 'முதல் முதல் இறைவா' என்ற பாடலால் முதல் வணக்கத்தினை நடனம் மூலம் திலீபன் தமிழ்ப்பாடசாலை மாணவியால் நிகழ்த்தப்பட்டது.




தொடர்ந்து 'தமிழீழ மண்ணின் சுயசரிதை' எனும் தலைப்பில் சுயவர்களால் தன் தூய்மை அழிக்கப்படுவதை எம் சொல்லுகின்ற பாங்கில் திலீபன் பாடசாலை மாணவனால் மிக அழகாக வர்ணிக்கப்பட்டது.

தொடர்ந்து 'எம் மண்ணின் தலைவர்கள்', 'விடியலைத்தேடி' எனும் தலைப்புக்களில் கவிதைகளும், 'முடிவேந்தர் மடி சுமந்த' எனும் தமிழீழ மண்ணின் தமிழ்ப் பெருமை சேர்க்கும் பாடலுக்கு திலீபன் தமிழ்ப் பாடசாலை மாணவிகளால் நடன அபிநயம் இடம்பெற்றது. அடுத்து தம் மழலைத் தமிழ்மொழியால் தமிழ் உணர்வை வெளிப்படுத்தினார். திலீபன் தமிழ்ப் பாடசாலை மாணவன்.

தொடர்ந்து சிறார்களின் அறிவுக்கு விருந்தாகும் வகையில் பொது அறிவுப்போட்டி நடைபெற்றது. இதனையடுத்த பட்டிமன்றத்தில் புலம்பெயர் வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களின் சிந்தனாஓட்டம் பணத்தை நோக்கியா? பிள்ளைகளின் நலத்தை நோக்கியா? என்ற விவாதம் இடம்பெற்றது. இறுதியில் பணத்தின் மூலம் பிள்ளைகளின் நலனைப் பேணவேண்டும் என்ற முடிவு மக்கள் மத்தியில் ஒரு புத்துணர்வை ஏர்ப்படுத்தியது. தொடர்ந்து விடுதலைப்போராட்டத்தின் இன்றைய நிலை பற்றியும், அனைத்துலகப் பார்வையில் தமிழீழ அங்கீகாரம் பற்றியும், சமகால நிகழ்வுகள் குறித்தும், இவ் யதார்த்தச் சூழ்நிலையில் இங்குள்ள நாம் செய்யவேண்டிய பணிகள் பற்றியும், கறுப்பு யூலை நினைவுகள் குறித்தும், தமிழீழ விடுதலைப் புலிகளின் இத்தாலிப் பணியகப் பிரதிநிதி து.மேதா அவர்களால் சிறப்புரை நிகழ்த்தப்பட்டது.

தொடர்ந்து சென்ற ஆண்டு அன்னை பூபதி நினைவு நிகழ்ச்சிக்கென சேகரிக்கப்பட்ட நிதியில் 500 மி·லாத் தொகையைத் தமிழீழத்தில் செஞ்சோலைச் சிறார் வளர்ச்சிக்கென ஜெனோவா கலைபண்பாட்டுக் கழகத்தால் கொடுக்கப்பட்டது.

தொடர்ந்து சிங்கள தேசத்தின் தோல்வி நிச்சயமாகப்போன சிறீலங்கா அரசின் இராணுவத்தினர் மேற்கொண்ட ஜெயசுக்குறுவின் இராணுவ நடவடிக்கை எவ்வாறு தமிழீழத்தின் வெற்றியாக்கப்பட்டது என்பது பற்றி வில்லிசை மூலம் ஜெனோவா கலைபண்பாட்டுக் கழகத்தினரால் நிகழ்த்தப்பட்டது. இறுதியாக புரட்சிகானத்துடன் நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றது.







*– மா.சந்திரன்*

NÆRKØB -DKS Video

Danmark பதரேஸ்சியா
மாநகரில் (Nærkøb) நியர்குய்ப் DKSVideo
ஸ்தாபனத்தாரின் மற்றும் இரு சேவைகள்

இடமாற்றம் 01.09.99 முதல் NÆRKØB ரவல்ஸ் சூ Mony Exchence

புதிய முகவரி

NÆRKØB ரவல்ஸ் 5
Vestcenter,Venvsvej-10, 7000 Freclericia, Danmark.
தொலைபேசி: 75915840 -75915841 / Fax: 75915842

*Nærkøb Travels*⑤


உங்கள் பிரயாணத்துக்குரிய விமானச் சீட்டுகளை மிக மலிவான முறையில் உரியநேரத்தில் நீங்கள் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
அத்துடன் இவ்வாண்டிலிருந்து எமது ஸ்தாபனம் இந்திய/சிங்கப்பூர் சுற்றுலாவை ஆரம்பித்துள்ளது. தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் யூலை மாதம் இச்சுற்றுலா ஆரம்பமாகும்.
FREMMED Pas வைத்திருப்போரும் இந்த சுற்றுலாவில் கலந்து கொள்ளலாம் என்பதை மிக மிக மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்துகிறார்கள்.

*Nærkøb Money Transfer*

15 நிமிடங்களுக்குள் உங்கள் பணத்தை அன்றைய வங்கி மதிப்பின்படி உலகில் எந்த இடத்துக்கும் கொடுக்கவோ/பெற்றுக்கொள்ளவோ முடியும்.
இந்த Money Exchange அரச அங்கீகாரம் பெற்ற ஒரு நிறுவனம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறார்கள்.

இவ்வாரம் முதல் Okotober 30-ம் திகதி வரை
மலிவான விமானப் பயணச்சீட்டுக்கள்.
Copenhagen - Colombo - 3,200 Kr மட்டும் (Tax 165 Kr)
Copenhagen - Colombo - India (திருவனந்தபுரத்திற்கு) - 3800 Kr + Tax 185 kr

# அவுஸ்திரேலியா, சிறீலங்கா இறுதி மோதலுக்கு ஆயத்தம்





சிறீலங்காவில் நடைபெறும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் பந்தயத்தின் (Aiwa Cup) தெரிவுப் போட்டிகளில் அவுஸ்திரேலியாவை யாராலும் அசைக்க முடியவில்லை. உலக கிரிக்கெட் ஜவான்கள் அவுஸ்திரேலியர்கள் என்பதுபோல் ஆடியவர்களிடம் இந்தியாவும் சிறீலங்காவும் ஈடாடிவிட்டன. இந்நிலையில் இறுதி தெரிவுக்கு போவது யார் என்பதை பார்த்துவிடுவதுபோல் ஆடிய சிறீலங்காவும் இந்தியாவும் தமக்கிடையிலான போட்டிகளில் தலா ஒரு வெற்றியைப் பெற்று சமபுள்ளிகளைப் பெற்ற போதும், ஓட்டவீதத்தில் சிறீலங்காவே தகுதிக்கு ஆளானது. இவ் இரு அணிகளுக்கிடையிலான போட்டிகளின் போதும் அணித்தலைவர்களான ஜெயசூரியாவும் டெண்டுல்கரும் தங்கள் தங்கள் அடித்தாடும் அதிரடி யுத்திகளை கடுமையாகப் பிரயோகித்தனர். இறுதி தெரிவுப்போட்டியாக 29.08.99 நடைபெற்றபோட்டியில் டெண்டுல்கர் அமர்க்களமாக அசத்தி தனது 23-வது சதத்தைப் பெற்றார். டெண்டுல்கரின் துடுப்பாட்டமே இந்திய அணியின் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கிறது என்பதை இம்முடிவு காட்டியது. இப்போட்டியில் இந்தியா வெற்றி பெற்றபோதும் ஜெயசூரியாவின் நெருப்பான ஆரம்ப ஆட்டம், சிறீலங்காவின் இறுதித் தெரிவை நிச்சயமாக்கிவிட்டது. உலக சம்பியனை எதிர்கொள்ளும் இறுதியாட்டம் 31.08.99 அன்று சிறீலங்காவின் பலத்திற்கு மற்றொரு பரீட்சையாகிறது.

# இந்தியா, பாகிஸ்தான் சந்திக்காத ரொறன்ரோ போட்டிகள்

திட்டமிட்டபடி செப்டெம்பர் மாதம் இந்தியாவும் பாகிஸ்தானும் ரொறன்ரோவின் கிரிக்கெட் மோதலில் குதிப்பதாக இருந்தன. ஆனால் அதற்கு முன் இரு நாடுகளும் கார்க்கில் எல்லையில் தகராறு கொண்டதால் ரொறன்ரோ சந்திப்பைத் தவிர்த்துக்கொண்டன. குறிப்பாக இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் கபில்தேவ், தற்போதைய அணித்தலைவர் டெண்டுல்கர் ஆகியோர், 'நாடு கார்க்கில் யுத்தத்தை சந்தித்துக்கொண்டிருக்க, ரொறன்ரோவில் பாகிஸ்தானுடன் கொண்டாட்டமா?' என பகிரங்கமாக வினா தொடுத்தனர். தொடர்ந்தும் இருநாடுகளுக்கிடையில் சுமூகநிலை காணப்படாததால், ரொறன்ரோவில் இந்தியா - மேற்கிந்திய தீவுகள், பாகிஸ்தான் - மேற்கிந்திய தீவுகள் என மும்மூன்று ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. செப்டெம்பர் 11, 12, 14-ம் திகதிகளில் இந்தியாவுடனான போட்டிகளிலும் 16, 18, 19-ம் திகதிகளில் பாகிஸ்தானுடனான போட்டிகளிலும் மேற்கிந்திய தீவுகள் கலந்துகொள்கிறது.

# மக்லேறனின் தொடர் வெற்றி



கார்ஓட்ட பந்தயத்தின் (Formula-1) உலக சம்பியனை தெரிவு செய்து கொள்வதற்கான போட்டிகள் வரிசையில் 29.08.99 பெல்ஜியத்தின் ஸ்பா நகரில் நடைபெற்ற போட்டியில் மக்லேறன் முதல் இரு இடங்களையும் கைப்பற்றியுள்ளது. மக்லேறனுக்கும், ஃபறாறிக்கும் இடையே கடும்போட்டி நிலவிக் கொண்டிருக்கும்போது ஃபறாறியின் முக்கிய ஓட்டுநர் சூமாக்கர் காயத்துக்குள்ளானது மக்லேறனின் வெற்றிவாய்ப்பை கூடுதலாக உயர்த்தியிருக்கிறது. டேவிட் குல்தாட் இப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார். இவர் மக்லேறனின் ஓட்டுநர். தற்போதைய உலக சம்பியனான மக்லேறனின் மற்றைய ஓட்டுநர் ஹக்கினன் இரண்டாம் இடத்தைப் பெற்றார். ஃபறாறி ஓட்டுநர் ஈர்வினுக்கு இம்முறை மூன்றாம் இடம் கூட கிடைக்கவில்லை யோர்டன் ஓட்டிய ஃப்றன்சனுக்கே மூன்றாம் இடம் கிடைத்தது. இப்போட்டி முடிவுகளை அடுத்து மக்லேறன் நிலையில் முதன்மை ஸ்தானத்தையும் ஹக்கினன் முதன்மை ஓட்டுனராகவும் உயர்ந்துள்ளனர். இவ்வருட உலக சம்பியன் தேர்வுக்காக இன்னமும் 4 போட்டிகள் இருக்கும் தறுவாயில் அடுத்தபோட்டி 12.09.99 இத்தாலியில் நடைபெறவுள்ளது. பெல்ஜிய போட்டியை அடுத்து ஓட்டுநர், கார்களின் தரநிலைமை பின்வருமாறு:

| ஓட்டுநர் | புள்ளிகள் |
|---|---|
| 1. ஹக்கினன் | 60 |
| 2. ஈர்வின் | 59 |
| 3. குல்தாட் | 46 |
| 4. ஃப்றன்சன் | 40 |
| 5. சூமாக்கர்—M | 32 |
| 6. சூமாக்கர்—R | 24 |

| கார் | புள்ளிகள் |
|---|---|
| 1. மக்லேறன் | 106 |
| 2. ஃபறாறி | 97 |
| 3. யோர்டன் | 47 |
| 4. வில்லியம்ஸ் | 24 |
| 5. பெனற்றன் | 16 |
| 6. ஸ்ரிவாட் | 14 |

# நடைபெற்ற உலக மெய்வல்லுநர் போட்டியின் நாயகர்கள் கிறீன், யோன்சன்



21.08.99 ஆரம்பித்து 29.08.99 ஸ்பானிய நகரம் செவில்லாவில் முடிவுற்ற உலக மெய்வல்லுநர் போட்டிகளில் அமெரிக்காவின் வெற்றிக்கு நாயகர்களாக இருந்த மவ்றிஸ் கிறீனும், மக்கல் யோன்சனும் இறுதிநாள் போட்டியில் சிறப்பு வீரர்களாக தெரிவு செய்யப்பட்டனர். மூன்று தங்கப்பதக்கத்தைப் பெற்ற கிறீனும், 400 மீற்றர் ஓட்டத்தில் தங்கப்பதக்கம் பெற்ற யோன்சனும் முறையே 4x100, 4x400 மீற்றர் அஞ்சலோட்டத்திலும் அமெரிக்காவின் தங்கப்பதக்க முடிவாளர்களாக திகழ்ந்துள்ளனர். அஞ்சலோட்டத்தில் யோன்சன் வென்றதன் மூலம் 9-வது தட்வையாக உலக மெய்வல்லுநர் போட்டிகளில் தங்கப்பதக்கத்தைப் பெற்று புதிய சாதனை நிகழ்த்தியுள்ளார். இதற்கு முன்பு அமெரிக்க வீரரான கார்லூயிஸ் 8 தங்கப் பதக்கங்களைப் பெற்றிருந்தார். கிறீன், யோன்சன், லூயிஸ் மூவருமே கறுப்பின வீரர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்கா, ரஷ்யா முன்னணியில்

நடைபெற்று முடிந்த உலக சம்பியன் மெய்வல்லுநர் போட்டிகளில் அமெரிக்கா 17 பதக்கங்களுடன் முதலாம் இடத்தையும், 13 பதக்கங்களுடன் ரஷ்யா இரண்டாம் இடத்தையும், 12 பதக்கங்களுடன் ஜேர்மனி மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. 2000-ம் ஆண்டு சிட்னியில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்கு முன்னதான பரீட்சையில் முதல் 10 இடங்களைப் பெற்ற நாடுகளின் விபரம் கீழுள்ளது.

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. அமெரிக்கா | 11 | 3 | 3 | 17 |
| 2. ரஷ்யா | 6 | 3 | 4 | 13 |
| 3. ஜேர்மனி | 4 | 4 | 4 | 12 |
| 4. கிரேக்கம் | 2 | 2 | 2 | 6 |
| 5. மொறாக்கோ | 2 | 2 | 1 | 5 |
| 6. கியூபா | 2 | 2 | — | 4 |
| 7. ஸ்பானியா | 2 | 1 | 1 | 4 |
| 8. எத்தியோப்பியா | 2 | — | 2 | 4 |
| 9. ருமேனியா | 2 | — | 2 | 4 |
| 10. செச்சினியா | 2 | — | 1 | 3 |


## சுவிஸ் செஞ்சோலை சீட்டிழுப்பு

29.08.99 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் சுவிஸ் பணியகத்தினால் நடாத்தப்பட்ட செஞ்சோலைச் சிறார்கள் காப்பக நிதிக்கான நல்வாய்ப்புச் சீட்டிழுப்பில் பரிசில்களைப் பெற்றுக்கொண்டவர்களின் சீட்டு இலக்கங்கள் பின்வருமாறு:

முதலாம் பரிசு இலக்கம்: 002554
இரண்டாம் பரிசு இலக்கம்: 002537
மூன்றாம் பரிசு இலக்கம்: 01502
**ஆறுதல் பரிசுகள்**
சீட்டு இலக்கம்: 004556, 03367, 01705, 00244, 002474, 002115, 005326, 004558, 004555, 002405.

மேலதிக தொடர்புகட்கு:
01-2734407 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

- சுவிஸ் பணியகம்.

# முல்லை. – கிளி. மாவட்டங்களில் 7389 குடும்பங்களுக்கு 119 குடியிருப்புகளை வழங்கியுள்ள தமிழர் புனர்வாழ்வு கழகம்

(29.08.99)

சிறீலங்கா இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் பல்வேறு சேவைகளை ஆற்றிவருகின்றனர். புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்து வந்துள்ள மக்களுக்கு கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் 119 குடியிருப்புக்களை உருவாக்கி, 7389 குடும்பங்களுக்கு குடிசைகளை அமைத்துக் கொடுத்துள்ளதாக வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன: முல்லைத்தீவு மாவட்டத்தில் 79 குடியிருப்புகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் 37 குடியிருப்புகளும், மன்னார் மாவட்டத்தில் 3 குடியிருப்புகளும் தமிழர் புனர்வாழ்வு கழகத்தினரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இக் குடியிருப்புகளில் வசிப்பவர்களுக்குத் தேவையான வேலை வாய்ப்புக்களையும், சுகாதார சேவைகளையும், மீளளிப்புக் கடனுதவிகளையும், சிறுவர்களுக்கான கல்வித் திட்டம், குழந்தைகள் நலத்திட்டம் போன்ற பல்வேறு உதவிகளையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# யாழ்ப்பாணம் செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறவேண்டுமென்று எந்தச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது?

**– குமார் பொன்னம்பலம் –**

(29.08.99)

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் செயலாளர் குமார் பொன்னம்பலம் யாழ்ப்பாணம் செல்வதற்காக விமானச் சீட்டினைப் பதிவு செய்வதற்காக அதன் நிலையம் அமைந்திருந்த இரத்மலானை அலுவலகத்திற்கு நேற்று முன் தினம் சென்றுள்ளார். தனது தொழில் சம்பந்தமான சொந்த விடயமாகவே தான் யாழ்ப்பாணம் செல்ல உள்ளதாகவும், எதிர்வரும் செப். 5 திகதி தனது பயணத்திற்கான விமானச்சீட்டு தேவை எனவும் கூறியுள்ளார். ஆனால் குமாருக்கு அதை வழங்க முடியாது என அங்கு கடமையாற்றியவர் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர், இரத்மலானை விமானசேவை அலுவலக பொறுப்பதிகாரிக்கு தனது யாழ்பயணம் தொடர்பாக குமார் பொன்னம்பலம் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்திருந்தார். அக்கடிதத்தில் தான் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறவில்லை என்றும், யாழ்ப்பாணம் செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறவேண்டும் என்று எந்தச் சட்டத்திலும் கூறப்பட்டிருக்கவில்லை என்றும் தெரிவித்திருந்தார். அக் கடிதத்தை அவ் ஊழியர்களிடம் காட்டியும் பயணத்திற்கான பதிவினை அவர்கள் மேற்கொள்ளவில்லை.

அதனைத் தொடர்ந்து திரும்பிவந்த குமார், பாதுகாப்பு அமைச்சில் பயண அனுமதி வழங்கும் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கதைத்துள்ளார். அப்போது, தான் இரத்மலானை சென்று, யாழ். பயணத்திற்கு விமானச்சீட்டு பெறுவதற்கான அனுமதி பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறாததால் மறுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்ததுடன், யாழ்ப்பாணத்திற்கு விமானத்தில் பயணம் செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெறவேண்டும் என்று நாட்டின் சட்டத்தில் எதுவும் இருக்கிறதா என கேள்வி எழுப்பியுள்ளார். அதற்குப் பதிலளித்த அவ் அதிகாரி, இது சட்ட ஏற்பாடு அல்ல. இது வர்த்தகமானி பிரகடனம் மூலமான ஏற்பாடாக இருக்கலாம். எதற்கும் மற்றைய அதிகாரிகளுடனும் கதைத்துப்பாருங்கள் எனக் கூறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

## அதிரடிப்படை.......

கணைத் தாக்குதல்களை நடாத்தியுள்ளனர். இதனால் பட்டிருப்புப் பாலத்தினூடான போக்குவரத்தும் தடைப்பட்டதாகத் தெரியவருகிறது.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

## ஊரெழுவில்.......

படுகின்றது. சுமார் 20ற்கு மேற்பட்ட முன்னாள் தமிழ் குழு உறுப்பினர்களை கொண்டதாக இயங்கும் இக் குழு ஊரேழு இராணுவ முகாமில் இருந்து செயற்பட்டு வருவதாக நம்பப்படுகின்றது. படையினரால் ஆயுதங்களும் கைக்குண்டுகளும் தாராளமாக வழங்கப்பட்டுள்ள இக் குழு, கைதடியில் இடம்பெற்ற ஆட்கடத்தலுடன் சம்பந்தப்பட்டிருக்கலாம் என கருதப்படுகின்றது.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

## ஹற்றன்.......

மாத்திரம் கைது செய்யப்படுவதும், சோதனை செய்யப்படுவதும் ஏற்றுக்கொள்ள முடியாதது எனக் கூறியவர்கள், அமைதியாக இருந்த ஹற்றன் நகரில் குண்டுப் புரளிகளை ஏற்படுத்தியது திட்டமிட்ட ஓர் கும்பலின் செயல். இதனைக் கண்டுபிடிப்பதை விடுத்து அப்பாவித் தமிழர்களைக் கைதுசெய்வது கண்டனத்திற்குரியது எனத் தெரிவித்தனர்.

ஹற்றன் நகர பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் இவ்வாறான நடவடிக்கைகளைத் தவிர்க்கவும் சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டுமென கூட்டத்தில் மேலும் வலியுறுத்தப்பட்டது.


## 8ம் ஆண்டு வீரவணக்கம்

வீர ஜனனம்: 18.09.1971

வீரச்சாவு: 08.09.1991

**லெப்டினன்ட் மதுரா**

(பரமு–வடிவாம்பாள்)

ஓ...மதுரா!
வாசமலராய் நீ
இந்த
தேசத்தின் விடிவிற்காய் மலர்ந்த மலர்
அதனால்..
மதுரா, நீ என்றும் உதிரா மலர்

வாச மலர்கள் பூசைக்கு வைத்து–பின்
வாட எறிவது கண்கூடு
'வடிவாம்பாள்' நீ இதற்கு எதிர்ப்பாடு
மண் மீட்பிற்காய்ப் பூத்த புரட்சி மலர் மதுரா
நீ என்றும் உதிரா மலர்

கட்டைக் காட்டினிலே
வெட்ட வெய்யிலினிலே
எதிரி வாசம் அழிப்பதற்கு
எரிமலையாய் நின்ற மலர்
எம்மவர் மனங்களிலே
மதுரா என்றும் உதிரா மலர்

பெண்ணைக் காக்க வேண்டும்
எனக் கூறுவோர்கட்கு
பெண்கள் நாம் காப்போமென்று
பெரு வனத்தில் பூத்த மலர்
மணலாற்றுப் போரிலே
வாடி மண் சாய்ந்தாலும்
வரலாறு துதிபாடும்
மதுரா என்றும் உதிரா மலர்
எட்டாம் ஆண்டு நினைவுடன்
உம் வழியில் நாமும் உறுதியுடன்!

Pub – குடும்பத்தினர்



## 11ம் ஆண்டு நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பில்: 28.04.1950



அரக்கர் அழிப்பில்: 04.09.1988

**வீரவேங்கை குருசுமுத்து மைக்கல்பிள்ளை பேரின்பம்**

(பலாலி பொறுப்பாளர்)

தாய் மண்ணிற்காய் அர்ப்பணித்தாய் உன் உயிரை
மறந்தும் நாம் இருப்போமோ மாநிலத்தில்
நின்னுடலைத்தான் சிதைக்க முடிந்தது கயவரால்
நின் ஆன்ம தாகத்தை சிதைக்கவும் முடியுமா
உன் தாகம் தீரும் நாள் வரும் நிச்சயம்
இந்தக் கொள்ளையர் கும்பல் அழியும் நாளும் நிச்சயம்
அரக்கரை அழித்து தமிழ் மண்ணை மீட்க
வீறுகொண்டு எழுந்த வீரவேங்கையே பேரின்பா
உன் வீரமும் ஓர் விழுதாய் தமிழ்த்தாய் எழுகின்றாள்
உலக வரைபடத்தில் தமிழீழமாய் பதிகின்றாள்

என்றும் நின் நினைவலைகளில் வாழும்
அம்மா, அக்காமார், தம்பிமார், தங்கை
மருமக்கள், பெறாமக்கள்,
மருமக்களின் மழலைச்செல்வங்கள்.

**மண்ணுக்காய் மரணித்த மாவீரர்கள் அனைவருக்கும் எமது வீர வணக்கங்கள்.**

Pub தகவல்: சகோதரன் செபஸ்ரியான் யேர்மனி



# தமிழர் தொலைபேசி நிலையம்

**ALLO COM**

27, Rue du Clos,
75020 Paris
Tel: 01 43 73 00 11 Fax: 01 43 73 02 64
M°: Maraîchers / Porte de Montreuil / Bus: 26

itineris SFR Bouygues Telecom

**ALLO BOX**

59, Rue d'Avron,
75020 Paris
Tel: 01 43 73 76 83
Fax: 01 43 73 96 31

ஈழமுரசு
Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:

"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris

Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64




Réseau
WWA
உலகம் உங்கள் கைகளில்




King தொலைபேசி அட்டையை பாவிப்பதன் மூலம் தொலைபேசி அழைப்பில் 65% வரை சேமியுங்கள்
இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் 45 நிமிடம் (N° Local) – 27 நிமிடம் (N° vert)

92, Rue de Bellville, 75020 Paris
(M° :Pyrénées)
Tel: 01 44 62 93 96 Fax: 01 44 62 94 96

KING Telecom

33, Place de Génèral de Gaulle
60100 Creil (Place de la Gare)
Tel:03 44 55 41 59 Fax: 03 44 55 42 51

அனைத்துத் தொடர்புகளுக்கும்: 01 43 15 17 17 - விற்பனையின் பின்னான சேவைகளுக்கு: 01 43 15 17 18

## மட்டு-அம்பாறை சோதனைகள் அதிகரிப்பு
### புலிகளின் தாக்குதல் எதிரொலி

*(29.08.99)*

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் விடுதலைப் புலிகளின் தாக்குதல் அதிகரித்துள்ளமையை அடுத்து அம்பாறையின் முக்கிய இடங்கள் தீவிர பாதுகாப்புப் பிரதேசமாக 24 மணிநேர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. கல்முனை, அக்கரைப்பற்றுப் பிரதேசங்களில் இராணுவத்தினரும், அதிரடிப் படையினரும் தீவிர ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். காரைதீவு விசேட அதிரடிப்படை முகாம் வீதிச்சோதனைச் சாவடியில் சோதனைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதுடன், முகாம் பகுதிகளைச் சுற்றியுள்ள போக்குவரத்துப் பாதைகளில் வேகத்தடைகளையும் ஏற்படுத்தியுள்ளனர். பிரதான பல வீதிகளும் வேகத்தடைகள் அமைக்கப்பட்டு படையினரால் திடீர் திடீரென வாகனங்கள் இடைமறிக்கப்பட்டு சோதனை இடப்படுகின்றன.

படையினரின் இந் நடவடிக்கைகளால் போக்குவரத்துகளும் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியிருப்பதோடு, வெளியிடங்களில் இருந்து வருபவர்கள் பெரும் நெருக்கடிகளைச் சந்திப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. புலிகளின் அணிகள் கிழக்குப் பகுதிக்குள் அதிகளவில் ஊடுருவியுள்ளதாகவும் அதனாலேயே தாக்குதல்கள் அதிகரித்துள்ளதாகவும் இராணுவத் தளபதிகள் விடுத்துள்ள எச்சரிக்கையைத் தொடர்ந்தே பாதுகாப்புக்களைப் படையினர் உசார் படுத்தியுள்ளதாகத் தெரியவருகிறது.

## விடுதலைப்புலிகளுக்கு மற்றுமொரு ஆயுதக்கப்பல்

விடுதலைப் புலிகளுக்காக கடந்த 20ம் திகதி முல்லைத்தீவு கடலில் மற்றுமொரு ஆயுதக்கப்பல் வந்து ஆயுதங்களை இறக்கிவிட்டுச் சென்றுள்ளதாக சிறீலங்காவின் பாதுகாப்பு உளவுத்துறை செய்தி வெளியிட்டுள்ளது. கிழக்கு ஐரோப்பிய நாடொன்றில் இருந்து மேற்படி ஆயுதங்களை இக் கப்பலில் கொண்டுவந்ததாகவும், ஆள்கடலில் நள்ளிரவு வேளையில் அவற்றை விடுதலைப் புலிகளின் சிறு படகுகள் இறக்கி பாதுகாப்பாக கரைக்குக் கொண்டு சென்றுவிட்டதாகவும் அவர்களது அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

இந்த புதிய ஆயுத கப்பல் விவகாரம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. நள்ளிரவு வேளையில் கப்பலில் இருந்து ஆயுதங்கள் இறக்கிக் கொண்டிருந்த சமயம் சிறீலங்காவின் கடற்படை துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், ஆனால் விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்குதலில் இருந்து தப்பி மறைந்துவிட்டதாகவும் சொல்லப்படுகின்றது.

## பா.ஜ.க. வெற்றிபெறும்
### இறுதிக்கட்ட கணிப்பீட்டில் தகவல்

இந்தியாவின் அடுத்த பிரதமராக வாஜ்பாயே இருப்பார் என 'அவுட்லுக், இஎம்எஸ்' நிறுவனங்கள் இணைந்து நடாத்திய இறுதிக் கருத்துக் கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக் கணிப்பின்படி 329 பாரளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றி பாஜக கூட்டணி ஆட்சியைக் கைப்பற்றும் என ஊகிக்கப்படுகின்றது. ஓகஸ்ட் 22-ம் திகதி வரை இடம்பெற்ற இக் கருத்துக் கணிப்பின் பிரகாரம் காங்கிரஸ் ஆட்சியை கைப்பற்றுவது இயலாத காரியம் எனத் தெரிய வருகின்றது.

இதேவேளையில் மத்திய உளவுத்துறை நடாத்திய கணிப்பின் பிரகாரம் 270 ஆசனங்கள் வரை பாஜக கைப்பற்றும் என தெரிவிக்கப்படுவதாக 'டைம்ஸ் ஒப் இந்தியா' ஏடு தெரிவித்துள்ளது.

ஆந்திரா மகராஸ்ட்ரா மற்றும் கர்நாடகாவில் புதிய ஆதரவுகளை பா.ஜ.க. கூட்டணி பெற்றுவருகின்றது. தமிழ்நாட்டில் தி.மு.க. தலைமையிலான அணி வெற்றிபெறும் எனக் கருதப்பட்டாலும் அ.தி.மு.க. 10ற்கு மேற்பட்ட ஆசனங்களை கைப்பற்றும் எனக் கருதப்படுகின்றது.

## ஊரெழுவில் புதிய தமிழ் கூலிப்படை?

*(30.09.99)*

யாழ். குடாநாட்டில் புதிய கூலிக்குழுவொன்றை சிறீலங்கா இராணுவம் நிறுவியுள்ளது என சந்தேகிக்கப்படுகின்றது. மட்டக்களப்பு ராசீக் குழு பாணியில் நிறுவப்பட்டுள்ள இக் குழு, தற்போது இடம்பெறும் மர்மமான ஆட்கடத்தல்களுக்கும் காணாமல் போதல் விடயங்களுக்கும் பொறுப்பாக உள்ளனர் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

புலிகளைப் போன்று மக்கள் மத்தியில் நடமாடி இரகசிய வேவுப் பணிகளில் ஈடுபடவும் பெரும் படுகொலைகளை நடாத்தவுமே இக் குழு பயன்படுத்தப்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## அதிரடிப்படை பொறுப்பதிகாரி காயம்

*(28.09.99)*

மட்டு. களுவாஞ்சிக்குடியில் இருந்து பட்டிருப்புப் பாலத்தினூடாகச் சென்ற விசேட அதிரடிப்படையினரின் வாகனத்தின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் முகாம் பொறுப்பதிகாரி உட்பட சில படையினரும் காயமடைந்துள்ளனர். நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் பட்டிருப்புப் பாலத்திற்கு அருகில் உள்ள சிறிய பற்றைக்காடு ஒன்றை வெட்டி அழிப்பதற்காக தனது படையினரை அழைத்துச் சென்றபோதே இத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

அப் பகுதியில் மறைந்திருந்த விடுதலைப்புலிகளே இத் தாக்குதலை நடாத்திவிட்டுத் தப்பிச் சென்று விட்டனர் எனப் படைதரப்பு தெரிவிக்கின்றது. தாக்குதலில் இருந்து தப்பிவந்த படையினர் முகாமிலிருந்து, மக்கள் குடியிருப்புக்களை நோக்கி எறி

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## ஹற்றன் பகுதியில் தமிழர்கள் கைது

ஹற்றனில் அடுத்தடுத்து இடம்பெற்ற குண்டு புரளிகளையடுத்தும் ஒரு சில சம்பவங்களையடுத்தும் அப்பகுதியில் தமிழர்கள் கைது செய்யப்படுவது அதிகரித்துள்ளது. இக் கைதுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அண்மையில் கொட்டகலயில் மத்திய மாகாண சபையின் முன்னாள் அமைச்சரும் தற்போதைய உறுப்பினருமான வி.புத்திரசிகாமணி தலைமையில் கூட்டமொன்று நடைபெற்றது. இதில் நுவரெலியா மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இதிற் கலந்து கொண்டவர்கள் அரசின் நடவடிக்கைகள் இன ஒதுக்கலை மேலும் தீவிரப்படுத்துவதாக மலையக மக்களை எண்ணத் தூண்டுமென கவலை தெரிவித்தனர். மூவின மக்களும் வாழும் ஹற்றன் நகரில் தமிழ் மக்கள்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

லாசப்பலில் ஓர் அறுசுவை உணவகம்

மகேந்திரா உணவகம் - Restaurant Indienne

இலங்கை இந்திய உணவு வகைகளை சுவை குன்றாது வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறு தயாரிப்பதில் பலவருடகால அனுபவம் பெற்றவர்களின் சேவையில்...
அப்பம், இடியப்பம், தோசை, இட்லி, பிட்டு, றொட்டி, கொத்துறொட்டி, இடியப்பக்கொத்து,
சப்பாத்தி, நாண், சீஸ்நாண், சோறு, பிரியாணி போன்ற உணவு வகைகளையும்,
றோள்ஸ், வடை, லட்டு, கட்லற், போண்டா, போளி, சமுசா போன்ற சிற்றுண்டி வகைகளையும்
உங்கள் எண்ணம்போல் தெரிவு செய்து சுவைத்து மகிழ்ந்திட இன்றே நாடுங்கள்....

மகேந்திரா உணவகம் RESTAURANT INDIEN
20, Rue Perdonnet, 75010 Paris. - Tel: 01 40 37 19 85 / 06 88 40 84 60

குறிப்பு: உங்கள் இல்லங்களில் நடைபெறும் அனைத்துத் தேவைகளுக்குமாக சைவ-அசைவ உணவுவகைகள் மொத்தமாக நியாய விலையில் செய்து தரப்படும்-விநியோகம் இலவசம்.

திங்கள் மாட்டிறைச்சி, செவ்வாய்—மீன், புதன்—கணவாய், வியாழன்—நண்டு, வெள்ளி—சைவம், சனி—உயிர்க் கோழி பிரியாணி, ஞாயிறு—பங்கு ஆட்டிறைச்சியுடன் வித்தியாசமான மரக்கறிகளுடன் உணவுவகைகள் கிடைக்கும்.

30Frs மட்டுமே